பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 31 வியாழக்கிழமை (13-05-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:170

அரசின் விசேட செய்தியுடன் இன்று நோர்வேப் பிரதிநிதி வன்னி விரைவு!

முட்டுக்கட்டை நிலையை நீக்க மாற்றுத் திட்டம் சமர்ப்பிப்பு?

கொழும்பு,மே13

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையை நீக்கும் முயற்சியாக இலங்கை அரசின் விசேட செய்தியுடன் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் இன்று காலை வன்னிக்கு விரைகின்றார்.

நேற்றுமுன்தினம் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேபிரபாகரனையும், மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் மற்றும் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுக்களில் ஈடுபட்ட நோர்வே அனுசரணையாளர்கள குழு அன்றையதினம் கொழும்பு திரும்பிய கையோடு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்தது.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்ரர்ஸன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ பிரட்ஸ்கர் ஆகியோரடங்கிய இக்குழு சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான புலிகளின் நிலைப்பாட்டை ஜனாதிபதிக்கும் அவரது ஆலோசகர்களுக்கும் தெளிவாக எடுத்துரைத்தது.

அந்தச் சந்திப்பின் பின்னர் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்ரர்ஸன் நேற்றுக் கொழும்பிலிருந்து புறப்பட்டுச்சென்றார்.

நோர்வேத் தரப்பினர் தெரிவித்த புலிகளின் நிலைப்பாட்டை அடுத்து, பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக மாற்று யோசனைகள் அடங்கிய சில விடயங்களை அரசுத் தரப்பு புலிகளுக்குத் தெரியப்படுத்த விரும்பியதாக அறியவருகின்றது.

இந்த விடயங்கள் அடங்கிய செய்

(16ஆம் பக்கம் பார்க்க)

இயக்கத்தில் இணைந்த 16 பேர் சுய விருப்பில் பெற்றோரிடம்!

யாழ். மாவட்ட அரசியல்துறை கையளித்தது!

யாழ்ப்பாணம்,மே13

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்த 18 வயதுக்கு மேற்பட்ட ஒன்பது பேர் சுயவிருப்பத்தின் பேரில அவர்களது பெற்றோரிடம் நேற்று புதன்கிழமை, யாழ் மாவட்ட அரசியல் துறை அலுவலகத்தில் வைத்து ஒப்படைக்கப்பட்டனர்.

நீர்வேலி, வடமராட்சி, தீவகம் மற்றும் வலிகாமம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 7 பேரை யாழ் மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன் நேற்றுமாலை பெற்றோரிடம்

(16ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் 3 ஆயிரம் பேருக்கு நியமனம்!

மாகாண ஆளுநர் கொள்கையளவில் இணக்கம்

யாழ்ப்பாணம்,மே13

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கு நிலவும் 6 ஆயிரம் வெற்றிடங்களில் முதற்கட்டமாக 3 ஆயிரம் தமிழ் மொழி மூல ஆசிரியர்தளை நியமிப்பதற்கு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

நேற்றுத் தம்மைச் சந்தித்த இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தூதுக குழுவிடமே ஆளுநர் இதற்கான இணக்

(16ஆம் பக்கம் பார்க்க)

தலைவர் பிரபாவின் இறுக்க நிலைக்கு தமிழ்க்கட்சித் தலைவர்கள் வரவேற்பு!

கொழும்பு,மே13

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் சமாதான முயற்சிகள் தொடர்பான விடயத்தில் தெளிவானதும், உறுதியானதுமான இறுக்கப் போக்கை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத தலைவர் வேபிரபாகரன் கைக்கொள்வதோடு, அதைப் பகிரங்கமாகவும் அவர் வெளிப்படுத்தி நிற்பதைத் தமிழ்க் கட்சிகள் பலவும் வரவேற்றிருக்கின்றன.

அதேசமயம், புலிகளின் விடாப்பிடி நிலை இலங்கை அரசுத் தரப்பை அதிர்சசிக்குள்ளும், பெரும் சங்கடத்துக்குள்ளும் மாட்டவைத்திருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பேரினவாதச் சிங்களக் கட்சிகளை முக்கிய பங்காளிகளாகக் கொண்டுள்ள இலங்கை அரசின் தலைமை அமைதி முயற்சிகள் தொடர்பாக அடுத்தகட்ட நடவடிக்கையை எடுக்க முடியாமல் திணறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பது தொடர்பான பேச்சுக்கள் சம்பந்தமாக சில அடிப்படை விடயங்களைப் புலிகள் வலியுறுத்தி வந்தனர்.

புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக அங்கீகரித்தல், சமாதானப் பேச்சுக்களில் அரசுக்கு சமபங்காளிகளாகப் புலிகளுக்கு அந்தஸ்து அளித்தல், புலிகளோடு மட்டும பேச்சு நடத்தல் போன்ற புலிகள் வலியுறுத்திய விடயங்களுக்கு அரசுத் தரப்பு பச்சைக் கொடி காட்டிவிட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

அமெரிக்க பிரதிச் செயலர் இன்று இலங்கை வருகை

கொழும்பு,மே13

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதி செயலாளர் கிறிஸடீனா ரொக்கா நான்கு நாள் விஜயமாக இன்று இலங்கை வருகிறார்.

அமெரிக்காவுக்கு விஜயமொன்றை மேற்கொண்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அங்கு நடத்திய பேச்சுக்களை அடுத்தே கிறிஸடீனா ரொக்கா இன்று இலங்கை வருகிறார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட

(16ஆம் பக்கம் பார்க்க)

பொலன்னறுவை தமிழ்க் கிராமத்தில் 2 தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொலை!

கொழும்பு,மே13

பொலன்னறுவை மாவட்டத்தில் சொருவில் என்ற கிராமத்தில் இரண்டு தமிழ் இளைஞர்கள் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் நேற்றுமுன்தினமிரவு சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இச்சூட்டுச் சம்பவத்தில் கிருஷ்ண பிள்ளை பாக்கியராஜா (வயது-27), சண்முகராஜா கோகுலன் (வயது-26) ஆகிய இருவரே உயிரிழந்தனர்.

நேற்றுமுன்தினமிரவு 9 மணியளவில் இரண்டு துப்பாக்கிதாரிகள் சொருவில் கிராமத்தில் உள்ள கிருஷ்ண பிள்ளை பாக்கியராஜாவின் வீட்டுக்குள் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர் என்று கூறப்படுகிறது. உயிரிழந்தவர்களில் ஒருவரான மட்டக்களப்பைச் சேர்ந்த சண்முகராஜா கோகுலன் சம்பவம் நடைபெற்றபோது பாக்கியராஜாவின் இல்லத்தில் இருந்தார் என்றும் - மட்டக்களப்பு கருணாவின் கட்டுப்பாட்டில் இருந்தபோது கிரான் பகுதியின் இராணுவப் பொறுப்

(16ஆம் பக்கம் பார்க்க)

பொருள்களின் விலைத் தளம்பலைத் தடுக்க விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவு நிறுவப்பட்டது

புலிகளின் நிதித்துறை அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே13

அத்தியாவசியப் பொருள்களின் விலைத் தளம்பலைத் தடுப்பதை நோக்கமாகக்கொண்டு தமிழீழ நிதித் துறையினால் விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு அதன் செயற்பாடுகளை எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கும்.

தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.தமிழேந்தி நேற்று இதனை அறிவித்தார்.

நேற்றுமாலை பளை வருவாய்த் துறை அலுவலகத்தில் கூட்டப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தலைத் தமிழேந்தி வெளியிட்டார்.

செய்தியாளர் மாநாட்டில் நிதிப் பொறுப்பாளர் தெரிவித்ததாவது:-

இலாப நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு செயற்படும் வர்த்தகர்கள் அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைகளை உயர்த்தி விற்பனை செய்கிறார்கள். அப்பொருள்மீது எம்

மால் விதிக்கப்படும் தீர்வைக் காரணமாகக்காட்டி பொருள்களை அதிகரித்த விலைகளில் விற்கின்றனர்; ஒரே இடத

(16ஆம் பக்கம் பார்க்க)

இன்னும் மூன்று மாதங்களில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும்

அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

கொழும்பு,மே13

விடுதலைப் புலிகளுடன் இன்னும் மூன்று மாதங்களில் உத்தியோகபூர்வமாக பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சரவைப் பேச்சாளரும், தொடர்பாடல் அமைச்சருமான ரெஜினோல்ட் குரே இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது பற்றி அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானம் என்ன என்று செய்தியாளர்கள கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான முயற்சிகள் தொடர்பாக அமைச்சரவையில் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை. இன்னும் மூன்று மாதத்துக்குள் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க முடிவுசெய்துள்ளோம். தேர்தல் காலங்களில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட நியமனங்கள் மற்றும் பதவி உயர்வு வழங்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு என ஜனாதிபதியால் விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் விரைவில் ஊழல் மோசடிச் சட்டம் கொண்டுவரப்படும். இன்னும் ஒரு மாதத்தில் நாடாளு

(16ஆம் பக்கம் பார்க்க)

மின் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை

மின் கட்டணங்களைக் குறைப்பதற்கான வழிவகைகள் குறித்து மின் சக்தி, எரிசக்தி அமைச்சு ஆராய்ந்து வருகின்றது. இத்திட்டம் தொடர்பாக துறைசார் நிபுணர்களுடன் அமைச்சு அதிகாரிகள் கலந்துரையாடல்களை மேற்கொண்டுவருகின்றனர் என அமைச்சின் செயலாளர் டி.வீரஹந்தி தெரிவித்தார்.

இதுகுறித்து இறுதித் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக எதிர்வரும் 25ஆம் திகதி விசேட கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறினார்.

மின் உற்பத்திச் செலவைக் குறைப்பதன் மூலம் வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்களைக் குறைக்கமுடியும் எனவும், மாற்று வழிகள் மூலம் மின் சக்திகளை வழங்குவதன் மூலம் மின்சாரத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யமுடியும் எனவும் யோசனைகள் தெரிவிக்கப்படுகின்றன என்று செயலாளர் மேலும் சொன்னார். (எ-க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

அடுத்த மாதம் முதல் நடைமுறைக்கு வரும்வகையில்

மீன்பிடி வெளியிணைப்பு இயந்திர பாகங்களுக்கும் தீர்வை நீக்கம்!

தமிழீழ நிதித்துறை அறிவிப்பு

மீன்பிடி வெளியிணைப்பு இயந்திரங்களின் உதிரிப்பாகங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தீர்வை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நீக்கப்படவுள்ளது.

இந்தத் தகவலை நேற்று மாலை பளையில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.தமிழேந்தி தெரிவித்தார்.

அந்த மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது தேசத்தில் வசிக்கும் மீனவர்களின் நன்மை கருதி மீன்பிடி வெளியிணைப்பு இயந்திரங்களுக்கான தீர்வையை நாம் ஏற்கனவே நீக்கியிருந்தோம். தற்போது அவ்வியந்திரங்களுக்குப் பயன்படுத்தும் உதிரிப்பாகங்களுக்கான தீர்வையும் விலக்கப்படவுள்ளது.

இதேவேளை - எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள தற்போது வெளிநாடுகளில் வசிப்பவர்களில் சுமார் 4 ஆயிரத்து 460 ஏக்கர் தென்னந்தோட்டங்கள் உரிமையாளரினால பரிந்துரைக்கப்படும் ஒருவரிடம் சில

நேற்றைய செய்தியாளர் சந்திப்பின் போது...

நிபந்தனைகளுடன் ஒப்படைப்பதற்கு நிதித்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் தோட்டங்களில் இருந்து எமக்கு வருடம் ஒன்றுக்கு சுமார் 80 லட்சம் ரூபா வருமானமாகக் கிடைக்கின்றது. எனினும், அந்தத் தோட்டங்களில் மீள்நடுகையை மேற்கொள்வதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

இதற்காகவே சில நிபந்தனைகளுடன் இந்தத் தோட்டங்களை உரிமையாளர்களால் பரிந்துரைக்கப்படுபவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றார்.

இந்த மாநாட்டில் வருவாய்த்துறை பொறுப்பாளர் மருதன், பெருந்தோட்டத்துறைப் பொறுப்பாளர் நக்கீரன் மற்றும் விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவு பொறுப்பாளர் செழியன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-5)

மாகாணசபைத் தேர்தலால் ஹெல உறுமயவுக்குள் சர்ச்சை

மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் போட்டியிடுவது குறித்து ஜாதிக ஹெல உறுமய கட்சிக்குள் உட்பூசல் எழுந்துள்ளதாகத் தெரிகிறது.

ஜாதிக ஹெல உறுமயவின் ஒருசாரார் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது என்றும், பிறிதொருசாரார் போட்டியிடக்கூடாது என்றும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய மக்களின் ஆதரவைப் பெற்று கணிசமான ஆசனங்களைப் பெற்றது. ஆயினும், சபாநாயகர் தெரிவின்போது ஹெல உறுமயவின் பிக்குமார் வாக்களித்ததையடுத்து மக்களிடையே கட்சியின் ஆதரவு குறைந்துள்ளது.

மேலும், ஜாதிக ஹெல உறுமயவிற்கு ஆதரவாக பண உதவி செய்துவந்த வர்த்தகர்களும் தற்போது தங்கள் ஆதரவை வழங்குவதை நிறுத்தியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனாலேயே, ஹெல உறுமயவின் ஒருசாரார் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடக்கூடாது என்றும், பிறிதொருசாரார் இத்தேர்தலில் போட்டியிடுவதன்மூலம் மக்களிடையே கட்சிக்கான ஆதரவை மீளவும் பெறலாம் எனவும் தெரிவித்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது என முடிவெடுத்தாலும், கட்சியின் சார்பில் பௌத்த பிக்குகளையா அல்லது பிக்குகளல்லாத தனிப்பட்ட நபர்களையா வேட்பாளர்களாக நிறுத்துவது என்பது தொடர்பாகவும் ஜாதிக ஹெல உறுமயவுக்குள் சர்ச்சைகள் எழுந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (எ-க)

'யாதுமாகி' நாடகக் கலைஞர்கள் வன்னியில் கௌரவிக்கப்பட்டனர்

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தின் 'யாதுமாகி' நாடகத்தின் கலைஞர்கள் கௌரவிப்பு வைபவமும், சித்திரை மாதக் கலைவிருந்து நிகழ்ச்சியும் அண்மையில் முல்லைமாவட்ட நுண்கலைக் கல்லூரியில் நடைபெற்றன.

தமிழீழ நுண்கலைக் கல்லூரிகளின் பணிப்பாளர் தணிகைமாறன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

முல்லைதீவு - புதுக்குடியிருப்பு நுண்கலைக்கல்லூரியில் 2003 ஆம் ஆண்டு தமிழ்த்தினப்போட்டியில் பங்குபற்றி அகில இலங்கை ரீதியில் முதலாம் இடம்பெற்ற நாடக ஆசிரியர் இளங்கோவினால் நெறியாள்கை செய்யப்பட்ட 'யாதுமாகி' நாடகக் கலைஞர்களிற்கான கௌரவிப்பு அங்கு நடைபெற்றது.

நாடகக் கலைஞர்களுக்கான விருதினையும், பாராட்டுச் சான்றிதழ்களினையும் தங்கன் வழங்கினார்.

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய அதிபர் நாடகக் கலைஞர்களுக்கான ஆசியுரையினை நிகழ்த்தினார். யாழ். மாவட்டக் கலைபண்பாட்டுப் பொறுப்பாளர் வளநாடன் 'யாதுமாகி' நாடகத்தின் விமர்சன உரையை நிகழ்த்தினார்.

நிகழ்வின் இறுதியில் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் இசைக்கலைமாணி தவநாதன் றொபேட் அவர்களின் இசைக்கச்சேரி இடம்பெற்றது. இந்நிகழ்வில், போராளிகள், கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். (ஐ)

பி.பி.ஸி. தமிழோசையில் இந்தியத் தேர்தல் முடிவுகள்

இந்தியப் பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியாகிவருவதையடுத்து இன்று முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை பி.பி.ஸி. தமிழோசையில் காலை விசேட ஒலிபரப்பு இடம்பெறும் என பி.பி.ஸி. உலகசேவை அறிவித்துள்ளது.

தினமும் காலை 7.00 மணி முதல் 7.15 வரை இடம்பெறும் இந்த நிகழ்ச்சியில் வெளியாகும் தேர்தல் முடிவுகள் தொடர்பாக ஆய்வுகள், பேட்டிகள் மற்றும் கருத்துக்கள் என்பன இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

பாதாள உலக உறுப்பினர் சுட்டுக்கொலை!

பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு புளூமெண்டால் பகுதியில் இனந்தெரியாத ஆயுதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

சிந்தக விபுலசிறி (வயது30) என்பவரே, அவரது வீட்டில் வைத்துச் சுடப்பட்டிருக்கிறார். இவர் ஏற்கனவே பல படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் பொலீஸாரால் தேடப்பட்டு வந்தவர் எனக் கொழும்பு மோதரைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் பண்டாரநாயக்க தெரிவித்தார். (எ-க)

பதுளை மதகு ஒன்றுக்குள் 2 கைக்குண்டுகள் கண்டுபிடிப்பு!

பெரும் அதிர்வோடு வெடிக்கவைக்கப்பட்டன

பதுளை, மே13

பதுளையைச் சேர்ந்த ஸ்பிறிங் வெலி பெருந்தோட்ட மதகு ஒன்றிலிருந்து அதிசக்திவாய்ந்த இரு கைக்குண்டுகள் அடங்கிய பொதியொன்று நேற்றுமுன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தோட்டத்தில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றியவரே இந்த அநாமதேய பொதி குறித்து, பதுளைப் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

இத்தகவல் கிடைத்ததும் அந்த இடத்துக்கு விரைந்த பதுளைப் பொலஸார் அப்பொதியைப் பிரித்துப் பார்த்ததும் சூட்சுமமான முறையில் இரு கைக்குண்டுகள் உள்ளே அடைக்கப்பட்டிருப்பதையும் கண்டுபிடித்தனர்.

இது குறித்து பதுளைப் பொலீஸார் தியத்தலாவை இராணுவத்தினர் குண்டுகள் செயலிழக்கச் செய்யும் பிரிவுக்கு அறிவித்தனர். இதையடுத்து குண்டுகள் செயலிழக்கச் செய்யும் இராணுவப் பிரிவு அந்த இடத்துக்கு விரைந்துவந்து குண்டுகள் இரண்டையும் செயலிழக்கச் செய்தனர். ஸ்பிறிங் வெலிப் பகுதியையே அதிரவைக்கும் வகையில் பெரும் சத்தத்துடன் குண்டுகள் வெடிக்கவைத்து செயலிழக்கப்பட்டன. இதனால், அப்பகுதி மக்கள் பெரும் பதட்டமும், பீதியும் அடைந்தனர். குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பாக பதுளைப் பொலீஸார் தீவிர புலனாய்வுகளில் ஈடுபட்டிருக்கின்றனர். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. (எ-க)

மகாபொல அலுவலகம் சீல் வைத்து மூடப்பட்டது

வர்த்தகம் மற்றும் நுகர்வோர் அமைச்சின் கீழ் இயங்கிவந்த 'மகாபொல' முகாமைத்துவ சபை நேற்று முன்தினம் சீல்வைத்து மூடப்பட்டது.

வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே விடுத்த வேண்டுகோளை அடுத்தே, இந்த நிறுவனம் சீல்வைக்கப்பட்டது.

மகாபொல முகாமைத்துவ சபையின்கீழ் மாணவர்களுக்கு புலமைப் பரிசுத் திட்டம், பல்கலைக்கழக மாணவர்களுக்கு வங்கிக் கடன் அட்டைகள வழங்கும் திட்டம், லலித் அத்துலத் முதலி நிதியம், அறநெறிப் பாடசாலைகளுக்கான நிதியம் போன்றவை இயங்கிவருகின்றன.

இந்தச் சபை முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்காவால் ஆரம்பிக்கப்பட்டது. மகாபொல முகாமைத்துவச் சபையில் ஊழல்கள் மலிந்து காணப்பட்டதால் அதற்கு சீல்வைக்கப்பட்டது என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், அச்சபையின் தலைவர் மற்றும் ஊழியர்கள், முன்னாள் அமைச்சருக்கு விசுவாசிகள் என்ற காரணத்தினால் அது இழுத்து மூடப்பட்டது என மேலும் தகவல்கள் தெரிவித்தன. சுமார் 25 பேர் அச்சபை மூடப்பட்டதால் வேலை இழந்துள்ளனர். (எ-க)

புலிகளைத் தமது ஏகப்பிரதிநிதிகளாக தமிழர் ஏற்றால் ஜே.வி.பியும் ஏற்கும்!

அதன் செயலாளர் கூறுகின்றார்

கொழும்பு,மே13

தமிழீழ விடுதலைப் புலிகளை தமது ஏகப்பிரதிநிதிகள் என தமிழர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டால் தாமும் அதனை ஏற்றுக்கொள்ளத் தயார் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் மஹரகமவில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் இதனைத் தெரிவித்த அவர், தமிழர்கள் ஒட்டுமொத்தமாக புலிகளைத் தமது பிரதிநிதிகளாக அங்கீகரிக்கவில்லை எனவும் கூறினார்.

எவ்வாறாயினும், இனப்பிரச்சினைத தீர்வுக்கு புலிகளுடன் பேசியாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருப்பதாலேயே ஜனாதிபதியின் நிலைப்பாட்டுடன் ஜே.வி.பி ஒத்துப்போகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

ஐ.தே.மு. அரசின் சமாதான முயற்சிகளை ஐ.ம.சு. கூட்டமைப்பு அரசு தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு எடுத்த தீர்மானம் நாட்டு நலனைக் கருத்திற்கொண்டே என்றும் ரில்வின் சில்வா குறிப்பிட்டார்.

நல்லாட்சி ஒன்றுக்கான ஆணையைச் சுதந்திரக் கூட்டமைப்புக்கு மக்கள் வழங்கியிருக்கின்ற போதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சில்கல்கள் எழுந்திருப்பதாகவும் ரிலவின் சில்வா தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் மக்களின் நலனைக் கருத்திற்கொள்ளாது சுய நலப்போக்குடன் நடந்து கொள்வதாலேயே நல்லாட்சியை நடந்த முடியாதிருக்கிறது. ஐக்கிய மக்கள சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் நல்ல பல திட்டங்களை அமுல்படுத்துவதில் அமைச்சர்கள் சிலரும் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

அதனால், ஜே.வி.பி. தனது திட்டங்களை மக்களுக்கு நன்மைபயக்கும் வகையில் செயற்படுத்துவதற்காக பகிரதப் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. எமது அரசின் நடவடிக்கைகளை சீர்குலைப்பதில் ஐ.தே.க. முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. அதனை நாம் முறியடிப்போம் எனவும் சில்வா கூறினார். (எ-க)

சிறுவர் இல்ல காப்பாளருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,மே13

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட மெதடிஸ்த தேவாலய சிறுவர் பராமரிப்பு இல்லத்தின் உதவிக் காப்பாளரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறிப்பிட்ட சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் தங்கியிருந்த இரு சிறுவர்களை ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுத்த முயன்றார் என்ற சந்தேகத்தின் பேரில் சொலமன் வின்சன் (வயது 35) என்பவர் கடந்த 14 ஆம் திகதி யாழ். பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ்.நீதிமன்றத்தின் பணிப்பின் பிரகாரம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ்.நீதிமன்றில் மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நடைபெற்றது.

சந்தேக நபரை இம்மாதம் 26 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-7)

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வருகைதந்த இலங்கைக்கான ஜப்பானியத் தூதர் அக்கிகூடா தலைமையிலான குழுவினர் யாழ்.ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து, ஆஸ்பத்திரியின் தேவைகள் குறித்து அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினர். அத்துடன் ஆஸ்பத்திரியின் நிலைமைகளை அறியும்வகையில் ஆஸ்பத்திரியைச் சுற்றிப் பார்வையிட்டனர். இதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பணிப்பாளர் எஸ்.சதுர்முகன், கணக்காளர் ப.விஜயரகுநாதன், நிர்வாக உத்தியோகத்தர் எ.பத்மநாதன் ஆகியோரும் படங்களில் உள்ளனர். (படங்கள்: வசந்தன்)

அமெரிக்கப் பயணக் கைதி ஒருவர் ஈராக்கில் கழுத்து வெட்டிக் கொலை!

கொலைக்காட்சி வீடியோப் படமாக வெளியீடு



ஈராக்கில் தனது மகன் கிளர்ச்சியாளர்களால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட துயரத்தில் கண்ணீர் விடுக்கும் தந்தையும் சகோதரனும்.

வாஷிங்ரன்,மே13

ஈராக்கிய கிளர்ச்சியாளர்களால் கடத்திச்செல்லப்பட்ட அமெரிக் கப் பணயக் கைதியான நிக்பேர்க் என்பவர் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஈராக்கிய கைதிகள் அமெரிக் கப் படையினரால் கொடுமைப் படுத்தப்படுவதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக நிக்பேர்க் கழுத்து வெட்டிக்கொல்லப்பட்டதாகக் கிளர்ச்சி யாளர்கள் அறிவித்துள் ளனர்.

நிக்பேர்க் கழுத்துவெட்டப்பட் டுக் கொல்லப்படுவது அமெரிக்கா வின் அராபிய தொலைக்காட்சி ஒன்றில் காண்பிக்கப்பட்டது. இத னால், அமெரிக்க மக்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

இந்தக் கொலையைச் செய்த வர்களைக் கண்டுபிடித்துத் தண் டிக்காமல் விடப்போவதில்லை யென்று புஷ் நிர்வாகம் அறிவித் துள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன் ஈராக்கிய பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருந்த நிக் பேர்க் 13 நாள்களின் பின்விடுவிக்கப்பட் டிருந்தார். தொலைத்தொடர்புப் பணியாளராக இருந்த நிக் பேர்க் நாடு திரும்புவதற்கு முயற்சிசெய்துகொண்டிருந்தபோது கிளர்ச்சியாளர்களால் கடத் தப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஈராக்கியக் கைதிகளை விடுவிப்பதற்கு இவரை பணயமாக கிளர்ச்சியாளர்கள் பயன்படுத்த முயன்று தோல்வியுற்றுள்ளனர். (ப-8)

30 வாக்குச்சாவடிகளில் நேற்று மறுவாக்குப்பதிவு

சென்னை,மே13

தமிழகத்தில் மத்திய சென்னை, தென் சென்னை உட்பட 13 மக்க ளவைத் தொகுதிகளில் உள்ள 30 வாக்குச் சாவடிகளில் நேற்றுப் புதன் கிழமை மறுவாக்குப் பதிவு நடத்த தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள் ளது.

கரூர் மக்களவைத் தொகுதியில் மட்டும் 11 சாவடிகளில் வாக்குப் பதிவு நடத்தப்பட்டது.

கோளாறு காரணமாக மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் முறை யாக வாக்குகளைப் பதிவுசெய்யாத தால் இந்த வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப் பதிவுக்கு உத்தரவிடப் பட்டது. அந்தத் தொகுதிகளுக்குரிய தேர்தல் அதிகாரி மற்றும் தேர்தல் பார்வையாளர்களின் பரிந்துரையின் பேரில் தேர்தல் ஆணையகம் மறு வாக்குப்பதிவுக்கு உத்தரவிட்டது.

12 மக்களவைத் தொகுதிகளில் மின்னணுவாக்குப்பதிவு இயந்திரக் கோளாறு காரணமாக மறுவாக்குப் பதிவுக்கு உத்தரவிடப்பட்டது. ஆனால், கரூர் தொகுதியில் மட்டும் வாக்கா ளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட் டவர்களை வாக்குப்போட அனுமதித் ததால் அங்கு 11 வாக்குச் சாவடி களில் மீண்டும் வாக்குப் பதிவு நடைபெற்றது.

மறுவாக்குப் பதிவு குறித்து வேட் பாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி ஏஜெண்டுகளுக்கும் தகவல் கொடுக்கப் பட்டது. மறுவாக்குப் பதிவு நேற்றுக் காலை 7 மணிக்குத் தொடங்கி மாலை 5 மணிவரை நடைபெற்றது. மறுவாக்குப் பதிவுகுறித்து அந்தந்த வாக்குச் சாவடி உள்ள பகுதிகளில் ஒலிபெருக்கி மூலமும் தண்டோரா போட்டும் தெரிவிக்கப்பட்டது.

மறுவாக்குப் பதிவுநடைபெறும் வாக்குச் சாவடிகளிலும் இன்று வாக்கு எண்ணும் பணி நடைபெறும். (8)

ஷெரீப்பின் தம்பி நாடுகடத்தப்பட்டார்

லாகூர்,மே13

பாகிஸ்தான் திரும்பிய முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் தம்பி உடனடியாகத் திருப்பி அனுப்பப் பட்டார். இராணுவத்தினரின் இந்த நட வடிக்கையால் லாகூர்விமான நிலையத் தில் கலவரம் ஏற்பட்டது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதம ராக இருந்தவர் நவாஸ் ஷெரீப். கடந்த 1999ஆம் ஆண்டு இராணு வத்தளபதியாக இருந்த முஷாரப் இராணுவப்புரட்சி மூலம்நவாஸ் ஷெரீப் ஆட்சியைக்கவிழ்த்துவிட்டு அதிபராக பொறுப்பு ஏற்றுக்கொண்டார்.

நவாஸ் ஷெரீப்பும், அவரது குடும் பத்தினரும் சவூதி அரேபியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர். 10 ஆண்டு களுக்குநாடு திரும்பமாட்டோம் என்று அவர்கள் உறுதிமொழி கொடுத்திருந் தனர்.

இந்த நிலையில், நவாஸ் ஷெரீப் பின் தம்பியும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கட்சியின் தலைவருமான ஷெபாஸ் ஷெரீப் நேற்று முன்தினம் திடீரென்று சவூதி அரேபியாவில் இருந்து விமா னம் மூலம் பாகிஸ்தான் திரும்பினார்.

அவர் லாகூர் விமான நிலையத் தில் இறங்கியதும் பாகிஸ்தான் பொல ஸாரும், இராணுவத்தினரும் அவரை நகருக்குள் வரவிடாமல் தடுத்தனர். பாகிஸ்தான் வர அனுமதி இல்லை என்று கூறி அவரைப்பிடித்து வைத்து பொலீஸாரும், இராணுவத்தினரும் அவரை அடுத்த ஒருமணி நேரத்தி லேயே சவூதி அரேபியாவுக்கு திருப்பி அனுப்பிவிட்டனர்.

இதற்கிடையே ஷாபாஸ் ஷெரீப் வருவதை அறிந்த அவரது முஸ் லிம் லீக்கட்சியினர் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அவரை வரவேற்க விமான நிலையத்தில் கூடிநின்றனர். அவரை பொலீஸார் திருப்பி அனுப் பியதைத் தொடர்ந்து அந்தத் தொண டர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து பொலீஸாருக் கும், தொண்டர்களுக்கும் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது. (8)

வாக்காளர் நீக்கத்தை எதிர்த்துப் போராட்டம்

சென்னை,மே13

தமிழகம் முழுவதும் சிறுபான்மை யினர், அரச ஊழியர்களின் பெயர் களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து மே 17ஆம் திகதி அரசு அலுவலகம் முன்பு மாநிலந்தழுவிய ஆர்ப்பாட்டம் நடத்த தி.மு.க. மற்றும் அதன்கூட்டணிக் கட்சியினர் முடிவு செய்துள்ளனர்.

நேற்று நடைபெற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட் டது.

வாக்காளர்கள் நீக்கப்பட்டிருப்ப தற்கு மாநில அரசே பொறுப்பு என கருணாநிதி பின்னர் செய்தியாளர்க ளிடம் பேசுகையில் தெரிவித்தார்.(8)

இந்தியாவில் புதிய ஆட்சி யாரிடம்? இன்று மாலை முடிவு தெரியும்

சென்னை,மே13

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் 5கட்டமாக நடந்து முடிந்துள்ளது. அதனுடன் ஆந்திரா, கர்நாடகா, ஒரிசா, சிக்கிம் மாநில சட்டசபைக் கும் தேர்தல் நடத்தப்பட்டது. ஆந்திரா சட்டசபைத் தேர்தல் முடிவுகள் மட் டும் நேற்றுமுன்தினம் வெளியானது.

நாடாளுமன்றத்தின் 543தொகுதி வாக்குகளும் கர்நாடகா, ஒரிசா, சிக்கிம் மாநிலசட்டசபை தேர்தல் வாக்குகளும் இன்று எண்ணப்படும். காலை 8மணிக்கு வாக்கு எண்ணும் பணி ஆரம்பமாகும்.

தேர்தல் முடிந்ததும் வாக்குப் பதிவு இயந்திரங்கள் சீல் வைக்கப் பட்டு வாக்கு எண்ண ஏற்பாடு செய் யப்பட்டுள்ள இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. ஒவ்வொரு எம்.பி. தொகுதி வாக்குகளும் சட்டசபை தொகுதி வாரியாக தனித்தனி அறை களில் வைத்து சீல் வைக்கப்பட் டுள்ளன.

சென்னையில் 3தொகுதிகளிலும் 3,145வாக்குச் சாவடிகளில் வாக்கு கள் பதிவாகின. மொத்தம் 8ஆயிரம் மின்னணு எந்திரங்கள் பயன்படுத்தப் பட்டன.

தென் சென்னைத்தொகுதி வாக்கு கள் அண்ணா பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டுள்ளன.மத்திய சென்னை வாக்குகள் லயோலா கல்லூரியில் வைக்கப்பட்டுள்ளன. வட சென்னை வாக்குகள் ராணிமேரி கல்லூரி, மாநிலக் கல்லூரியில் பாதுகாப்புடன் இருக்கின்றன.

இன்று காலை 8மணிக்கு வேட் பாளர்கள் ஏஜெண்டுகள் முன்னிலை யில் சீல் அகற்றப்பட்டு வாக்கு எண்ணும்பணி தொடங்கும் அடையாள அட்டை வைத்துள்ள ஏஜெண்டுகள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

இதற்காக புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப் பட்டுள்ளது. உரிய அடையாள அட்டை இல்லாதவர்கள் வாக்கு எண்ணும் இடங்களுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று தேர்தல் அதி காரி சாரங்கி அறிவித்துள்ளார்.

ஏஜெண்டுகள் கட்சிவரிசைப்படி உட்கார வைக்கப்படுவார்கள். அங்கு இருந்தபடிதான் அவர்கள் வாக்கு எண்ணிக்கையைக் கண்காணிக்க வேண்டும்.

வாக்குகள் எண்ணும் இடத்துக் குள் ஏஜெண்டுகள் அங்கும் இங்குமாக உலவக்கூடாது என்று அறிவுறுத் தப்பட்டுள்ளது. வேட்பாளர்களும் அவர்களது தேர்தல் ஏஜெண்டுகள் மட்டுமே வாக்கு எண்ணும் இடங் களுக்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

தமிழகத்தில் உள்ள 39 தொகுதி களுக்கு 39இடங்களில் வாக்கு எண் ணும் மையங்கள் அமைக்கப்பட்டுள் ளன. வட சென்னை, தின்டிவனம், பொள்ளாச்சி, மயிலாடுதுறை, சிவகாசி ஆகிய 5தொகுதி வாக்குகள் மட்டும் துணை மையங்களிலும் எண்ணப் படுகிறது. எனவே, மொத்தம் 44இடங் களில் இன்று வாக்கு எண்ணும் பணி நடைபெறவுள்ளது.

ஸ்ரீபெரும்புதூர் (தனி) வாக்குகள் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் எண்ணப்படும். செங்கல்பட்டு வாக்கு கள் வள்ளியம்மாள் பாலி டெக்னிக்கி லும் அரக்கோணம் வாக்குகள் ராணிப்பேட்டைபொறியியல் கல்லூரி யிலும், வேலூர் வாக்குகள் தந்தை பெரியார் அரசு பாலிடெக்னிக்கிலும் எண்ணப்படும்.

காலை 9மணிக்கெல்லாம் 543 தொகுதிகளின் முன்னணி நிலவரம் தெரிந்துவிடும். மதியம் ஓரளவு முடிவுகள் தெரிந்துவிடும்.

பிற்பகலில் புதிதாக ஆட்சி அமைக்கப்போவதுயார் என்பது தெரி யும் இன்று இரவு அனைத்து தொகுதி முடிவுகளும் தெரிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை புதிய ஆட்சியை அமைக் கும் முயற்சிகளில் கட்சிகள் ஈடு படும். (8)

தங்கம் விலை உயர்வு

லண்டன்,மே13

லண்டன் சந்தையில் தங்கத்தின் விலை கடந்த ஆறு மாதங்களில் இல்லாத அளவுக்கு கடந்த செவ் வாய்க்கிழமை உயர்ந்தது.

ஓர் அவுன்ஸ் தங்கத்தின் விலை யில் 2.50 அமெரிக்க டொலர் அதி கரித்து (230 ரூபா) 379.65 டொல ரானது.

அமெரிக்க டொலரின் மதிப்பு கூடு வதும் குறைவதுமாக இருப்பதால் பணம் வைத்திருப்பவர்கள் முதலீடு செய்ய ஏற்றதாக தங்கம் தான் இருக்கிறது.

ஐரோப்பிய செலாவணிக்கு நிக ரான அமெரிக்க டொலரின் மதிப்பு கடந்த வாரம் 20% குறைந்தபோது அதே அளவுக்கு தங்கத்துக்கு கிராக்கி ஏற்பட்டது.

பங்குச் சந்தைகளில் உற்சாகம் இல்லாததாலும் அமெரிக்க அரசு வைப்புக்கள் மீதான வட்டி வீதத்தை மேலும் குறைக்கக்கூடும் என்று வதந்தி இருப்பதாலும் முதலீட்டுக்கு ஏற்றது தங்கமே என்று முடிவுசெய்து ஊக வியாபாரிகளும் முதலீட்டாளர்களும் தங்கத்தை நாடி வருவதால் அதன் விலை அதிகரித்துள்ளது. தங்கம் மட்டுமன்றி வெள்ளி, பிளாட்டினம் ஆகியவற்றின் விலையும் உயர்ந்தது.

ஈராக் கைதிகள் மீதான கொடூரம்; அமெரிக்கத் தலைமையின் இயலாமை!

அமெரிக்க ஜெனரல் சாட்சியம்

வாஷிங்டன்,மே13

ஈராக்கிய கைதிகள் கொடுமைப் படுத்தப்பட்டமை அமெரிக்க படைத் தலைமையின் இயலாமையைக் காட்டுகின்றது என இச்சம்பவங்கள் பற்றி புலன் விசாரணைகளின்போது சாட்சியமளித்த அமெரிக்க ஜெனரல் ஒருவர் தெரிவித்துள்ளார்.

செனட்சபையின் விசாரணைக் குழுவொன்றின் முன்சாட்சியமளித்த அமெரிக்க ராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்டோனியோ டாக்குபா, அமெரிக்கப் படையினர் மேலதி காரிகளின் நேரடி கட்டளைகளின் கீழ் செயற்பட்டார்களா என்பது தமக்குத் தெரியவில்லையென்றும் கூறினார்

ஒருகாலத்தில் சதாம் ஹுசைனின பயங்கரவதை கூடமாக இருந்து

சாட்சியமளிக்கும் டாக்குபா

இப்போது அமெரிக்க அதிகாரிகளின் மேற்பார்வையிலுள்ள அபு.கிறாய்ப் சிறைச்சாலையில் ஈராக்கியக் கைதி கள் மிகக் கொடூரமாகவும் சேஷல மாகவும் நடத்தப்பட்டிருப்பதும் பற் றிய செய்திகளும் படங்களும் வெளி யானதையடுத்து இது புலனாய்வு விசா ரணை செய்யப்பட்டுள்ளது.

அபுகிராய் சிறையில் இடம் பெற்ற சம்பவங்கள் பற்றி உங்கள் ராணுவ மொழியில் கூறுங்கள் என்று விசாரணையாளர் சொன்னபோது,

தலைமைத்துவத்தின் இயலா மையா, பிரிவுத் தளபதியிலிருந்து கீழ்மட்டம் வரைக்கும் ஒழுக்கக் குறைவு, எந்தவித பயிற்சியும் இல் லாமை, மேற்பார்வை இல்லாமையே காரணம் என்று விவரித்தார் டாக்குபா

அமெரிக்க பணயக் கைதி ஒரு வர் கழுத்து வெட்டிக் கொல்லப் படும் காட்சி தொலைக்காட்சியில் காட்டப்பட்டதையடுத்து ஜெனரல் டாக்குபாவின் கருத்து வெளியானது (ப-1)

பழங்குடி இனப்பெண்ணுக்கு மனித உரிமை விருது

அமெரிக்காவில் பழங்குடி இனத் தைச் சேர்ந்த பெண் ஜீனியா பட் டிஸ்டா டிகரவால்கோ இந்த இனத் தில் இருந்து சட்டத்துறையில் பட் டம் பெற்ற ஒரேயொரு பெண் ஆவார். இவர் இந்த இனத்தை சேர்ந்தவர்க ளின் உரிமைக்காக அரும்பாடுபட்டார்.

மனித உரிமைக்காக இவர் ஆற் றிய பணிக்காக இவருக்கு மனித உரிமை கமிஷன் விருது வழங்கி யது. இந்த விருதை நியூயோர்க்கில் நடந்த விழாவில் பிரபல நடவ டிக்கை அலூசிலி வழங்கினார்.

Swan
சுவான் டீசல் என்ஜின்



- நம்பிக்கையில் தலைசிறந்தது
- 4 ஸ்ரோக் என்ஜின்
- தற்போது 9.5 H/p சக்திவரை கிடைக்கிறது
- உதிரிப்பாகங்கள் உண்டு

அதிஉயர் விற்பனைக்குப் பிந்திய சேவையும் உண்டு

ஏக முகவர்கள்:

சென்ட். அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்.
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலை: 2324261-5, 2337283-5 ,பெக்ஸ்: 2446554

உடனடி வேலை வாய்ப்பு

★ சவூதி ★ டோகா வெளிநாட்டில் வேலை

★ பில்போய்ஸ் - Bill Boys சம்பளம் ரூபா 18,000/=
★ மேசன் - Mason சம்பளம் ரூபா 22,000/=
(ஏஜென்சிக்கான பணம் ஒரு பகுதியை இங்கும் மறுபகுதியை அங்கும் செலுத்தலாம்)
★ ஏ/சி ரெக்னீஷியன் - A/C Technician சம்பளம் ரூபா 27,000/=
★ றால் பக்ரரி லேபர் - Rall Factory Labour ரூபா 17,000/=
★ ரெயிலர் ட்ரைவர்ஸ் - Tailor Drivers ரூபா 32,000/=
(Experience)
★ காப்பென்ரர்ஸ் - Carpentors ரூபா 21,000/=
★ சிவில் என்ஜினியர்ஸ் - Civil Engineers
(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)
★ சிவில் போர்மன் - Civil Forman ரூபா 30,000/=
★ அலுமினியப் பிற்றர்ஸ் - Aluminium Fitters ரூபா 24,000/=
★ பில்டிங் லேபர்ஸ் - Building Labours ரூபா 24,000/=

▲ நேர்முகத் தேர்வு வெள்ளி, சனி, ஞாயிறு நாள்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை.

விவரங்களுக்கு:

ராஜ் லங்கா ருவர்ஸ்
RAAJ LANKA TOURS
220 A, ஆஸ்பத்திரி வீதி வழியாக
இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(84-26-16-17) (C/34953)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 02 - 11 - 1946

மறைவு 13 - 04 - 2004

திருமதி கந்தசாமி (குவராசா) பாக்கியம்

காற்றோடு வந்த சேதி கனவெனப் போகாதோ?
கலங்கி வாடுகின்றோம் உங்களைக் கண்ணீரில் தேடுகின்றோம்
கள்ளம் கபடமற்ற உங்களைக் கண் வைத்தானோ காலன்?
பாவம் தணிய கமையிறக்கப் போனீர்கள் அம்மா!
நாங்கள் காலத்தை இருளாயாக்கி கண்ணீரைக் குளமாக்கி
வாழ்வதைப் போராயாக்கி, வாழாமல் வாழ்கின்றோம்
எம்மையெல்லாம் ஏங்கித் தவிக்கவிட்டு எங்கு
சென்றீர்கள் அம்மா?
மெழுகு போல உங்களை உருக்கி எம்மையெல்லாம் வாழ
வைத்தீர்களே அம்மா!
உங்கள் பிரிவு எம் செந்நீரைக் கண்ணீராக மாற்றியது
துடுப்பற்ற தோணியாய் துடிக்கும் எம்மைக் கரைசேர்க்க
துரிதமாய் புவுலகில் மீண்டொருநாள் வாருங்களம்மா!
இறைவனோடு சங்கமித்த உங்களை சாந்திப் புக்கள் தழுவட்டும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 13.04.2004 காலமான எம்குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு இரங்கல் தெரிவித்தோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (13-05-2004) வியாழக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை.

துன்னாலை தெற்கு,
துன்னாலை, கரவெட்டி.
(31920) (26-16-17)

கொடுப்பனவுக்காக கையொப்பம் பெறல்

வலிகாமம் தெற்கு,மே13

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதிக்குப் பின்னர் வன்னி மாவட்டத்தில் இருந்து வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் வந்து மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபாவினை - ,இதுவரை பெற்றுக்கொள்ளாத குடும்பங்களுக்கான கையொப்பங்கள் எதிர்வரும் சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு உடுவில் பிரதேச செயலகத்தில் வைத்துபெறப்பட உள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்படவுள்ள இந்த வைபவத்தில் இதுவரை 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கான கையொப்பங்களை வழங்காத குடும்பங்கள் தவறாதுவந்து கையொப்பம் இடுமாறு பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தெரிவித்துள்ளார். (ஐ-152)

பெயர் வளைவு அன்பளிப்பு

தென்மராட்சி,மே13

மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்திற்கு பெயர்வளைவு ஒன்றினை வித்தியாலய பழைய மாணவர் ஒருவர் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

வெளிநாடு ஒன்றில் வதியும் க.குமாரசாமி என்னும் பழைய மாணவன் 55 ஆயிரம் ரூபா செலவில் இந்த வித்தியாலய பெயர் வளைவினை அன்பளிப்பாக வழங்கியுள்ளதாகவும் இந்த பெயர்வளைவு விரைவில் திறந்து வைக்கப்படுமெனவும் வித்தியாலய அதிபர் தெரிவித்தார். (8-117)

வாசகர்கள் வருகை அதிகரிப்பு

வலி.தென்மேற்கு,மே13

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தின் நூல் நிலையத்தில் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளை வாசிக்கவரும் வாசகர்களின் தொகை அதிகரித்து வருகின்றது.

அத்துடன், பாடசாலை மாணவர்களும் தங்களுககுத் தேவையான உபபாடப் புத்தகங்களையும் மற்றும் அறிவுசார்ந்த நூல்களையும் இங்கு வந்து பெற்றுப் பயடைகின்றனர் என்று நூல் நிலைய நூலகர் தெரிவித்தார்.

தமிழ்நாடு சஞ்சிகைகளும் இந்த நூலகத்தில் உள்ளன. (ஐ-135)

டுபாய்ப் பூசணி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

வடமராட்சி,மே13

வடமராட்சி கிழக்குப் பகுதியில் டுபாய்ப் பூசணி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றார்கள்.

இப்பகுதியில் உள்ள குடத்தனை, அம்பன், செம்பியன்பற்று ஆகிய இடங்களில் டுபாய்ப் பூசணி அதிக வளைச்சலைத் தருவதையடுததே விவசாயிகள் நெல் அறுவடை செய்த வயல் பிரதேசங்களில் டுபாய்ப் பூசணியைப் பயிரிட்டு வருகின்றனர். (8-173)

கடற்றொழிலாளர் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டம்

வடமராட்சி,மே13

வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர்களிடையே நிலவும் தொழில் பிணக்குத் தொடர்பாக ஆராய்ந்து, தொழில் நடைமுறை குறித்து ஆராய்வதற்கு மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10மணிக்குப் பருத்தித்துறையில் உள்ள வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச மண்டபத்தில் சமாசத தலைவர் சி.ஐங்கரதாஸ் தலைமையில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் வழிவலை, திருக்கைவலை, படுக்கைவலை, றோலர்கள் முதலியவற்றைப் பயன்படுத்தித் தொழில் செய்வோருக்கு ஏற்படும் சாதக, பாதகங்கள் குறித்து ஆராய்ந்து எவ்வகையான வலைகள் மூலம் தொழில் செய்வோர் எந்த நேரத்தில் தொழிலை மேற்கொள்ளலாம் எனவும் றோலர்கள் மூலம் எவ்வளவு தூரத்தில் தொழில் புரிய வேண்டும் என்பன குறித்து முடிவுகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-173)

வடமராட்சி மீனவர்களுக்கு 62 வெளியிணைப்பு இயந்திரங்கள்

நிக்கொட் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள 18 கடற்றொழில் சமாசங்களுக்கு மீன பிடிப் படகுகளுக்கு பொருத்தும் 62 வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

இத் தகவலை யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களதின் உதவிப்பணிப்பாளர் கந்தையா தர்மலிங்கம் தெரிவித்தார்.

நிக்கொட் நிறுவனத்தின் திட்டத்தின் கீழ் வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கிலுள்ள 18 கடற்றொழில் சமாசங்கள் தெரிவு செய்யப்பட்டு கடற்றொழிலில் ஈடுபடும் பயனாளிகளுக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவற்றின் முதற்கட்டமாக வடமராட்சி வடக்கிலுள்ள ஒன்பது கடற்றொழில் சமாச சங்கத்துக்கு மீன் பிடிப் படகுகளுக்கான 30 வெளியிணைப்பு இயந்திரங்களும் வடமராட்சி கிழக்கிலுள்ள ஒன்பது சங்கங்களுக்கு 32 வெளியிணைப்பு இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன.

இம்மாத இறுதிக்குள் இந்த இயந்திரங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது. என அவர் தெரிவித்தார். (8-7)

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம்	576	டிக்கட்டின் நிறம் - நீலம்
திகதி	11-05-2004	செல்லுபடியாகும் தொடர் இல. 4673342-4686025

லக்கினம் மேடம்

வெற்றி இலக்கங்கள்
05 21 27 45

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/-
வெல்லப்படவில்லை.
இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா. 16,28,858/-

இணையும் இலக்கங்கள்	வெற்றியாளர் தொகை	பரிசுத் தொகை(ரூ.)	மொத்தப் பரிசுத் தொகை(ரூ.)
1.இல	2,81,318	10/-	28,13,180/-
2.இலக்கங்கள்	25,916	20/-	5,18,320/-
1.இல + லக்கினம்	25,532	30/-	7,65,960/-
2.இல + லக்கினம்	2,358	100/-	2,35,800/-
3.இலக்கங்கள்	687	500/-	3,43,500/-
3.இல + லக்கினம்	55	5,000/-	2,75,000/-
4.இலக்கங்கள்	04	1,00,000/-	4,00,000/-
4.இல + லக்கினம்	-	10,00,000/-	-
மொத்தம்	3,35,870	-	53,51,760/-

மொத்த பரிசுத் தொகை ரூபா. 53,51,760

தொடர் இல. 5657467 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 மே 14ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி வெற்றி

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்
4685670-0-68
4681287-5-02
4679339-4-42
4674530-9-02
4674698-4-19

JOB ADVERTISEMENT

District Mine Survivors Rehabilitation Co-ordinator - Jaffna

In the framework of its partnership with UNICEF, Sarvodaya seeks a dynamic District Mine Survivors Rehabilitation co-ordinator to be posted at the District Mine Action Office (Jaffna) on a full-time basis.

RESPONSIBILITIES:

. The incumbent will liaise with all actors involved in Mine/UXO survivors assistance in the District to ensure that mine survivors have access to all rehabilitation services available. S/he will maintain survivors database and will organize trainings and workshops. The incumbent will also monitor the implementation of specific assistance projects. The working language will be in English and Tamil.

QUALIFICATIONS:

- Minimum Advance Level (A/L) education
- Relevant working experiences in related field.
- Knowledge of the socio-economic impact of Mines/UXO on people and communities
- Advocacy, training and facilitation skills.
- Good planning and organization skills
- Computer skills
- Excellent writing and presentation skills both in English and Tamil.
- Motorbike license

If you meet the required qualification and are interested in this post,

Please send your detailed BIODATA in English to

Sarvodaya office No.3 Fletcher lane,
Chundukuli-Jaffna,
Before20th of May/ 2004

Only candidates under serious consideration will be contacted for interview.

(C/34954) (26)

உதயன்

மாறும் சரித்திரம்

நாடாளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மை கூட இல்லாத தமது அரசை வைத்துக் கொண்டு 'மந்திரத்தில் மாங்காய் பறிக்கும்' பூச்சாண்டியைக் காட்ட முயன்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அதனைப் பேரட்டு உடைத்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

வெறுங்கையால் முழம் போட்டு எதனையும் சாதிக்க முடியாது என்ற உண்மையை அடித்து உடைத்திருக்கின்றார் மதியுரைஞர்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசினதும் தமிழர் தரப்பினதும் நிலைப்பாடுகள் இப்போது கொழும்புக்கு வெட்டவெளியாகிவிட்டன.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பிற்றர்ஸன் வன்னிக்குச் சென்று தமிழர் தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேசிய பின்னர், அந்தச் சந்திப்புத் தொடர்பாக மதியுரைஞர் பாலசிங்கம் வெளியிட்ட தகவல்கள் இன்றைய அரசியல் நிலைமைகளை - தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, இலங்கை மக்களுக்கு மட்டுமல்ல, சர்வதேச சமூகத்துக்கே - நன்கு தெளிவுபடுத்திவிட்டன எனலாம். அத்தோடு, அரசியல் போக்கின் சரித்திரம் எப்படியெல்லாம் திரும்புகின்றது என்ற உண்மையையும் அது நமக்கு உணர்த்தத் தவறவில்லை.

முன்னைய அரசுடன் புலிகள் பேச்சு நடத்திய சமயம் அந்த அரசின் கைகளில் நிறைவேற்று அதிகாரம் இருக்கவில்லை. நாடாளுமன்றப் பெரும்பான்மை - அதுவும் ஒரேயொரு மேலதிக ஆசனத்துடன் கூடிய அறுதிப் பெரும்பான்மை - மட்டுமே இருந்தது. அத்தகைய அரசினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முடிவு ஒன்றை எடுக்கவோ அல்லது எடுத்த முடிவை நடைமுறைப்படுத்தவோ அதிகாரமும் பலமும் இல்லவே இல்லை என்பதை அந்தப் பேச்சுக்களை நடத்திய சமயமே புலிகள் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டி வந்தனர். எனினும், அமைதி முயற்சிகளில் - சமாதான வழிகளில் - தங்களுக்கு இருந்த ஆர்வம் காரணமாக, நிறைவேற்று அதிகாரமில்லாத அரசுடன் கூட, இனப்பிரச்சினைக்கான அடிப்படைத் தீர்வு குறித்தும் புலிகள் பேசினார்கள். ஐக்கிய இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வு ஒன்றைக் காணுவது என்ற மிக முக்கியமான - இமாலய சாதனை என்று கூறக்கூடிய - ஓர் அடிப்படை இணக்கத்துக்கு இரு தரப்பும் சேர்ந்து வந்து, அதை கறுப்பு - வெள்ளையில், எழுத்தில் பதித்தும் கொண்டன.

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்பது போல அமைதி முயற்சிகளில் ஈடுபட்ட அரசை தனது அரசியல் ஆட்சி அதிகார ஆசை காரணமாகக் கலைத்து எல்லாவற்றையும் குட்டிச் சுவராக்கினார் ஜனாதிபதி குமாரதுங்க.

இப்போது நாடாளுமன்றப் பெரும்பான்மை கூட இல்லாத ஓர் அரசை வைத்துக் கொண்டு, அதனுடன் அரசியல் தீர்வு குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை என்ற யதார்த்தத்தை மதியுரைஞர் மிகச் சரியாக - துல்லியமாக - தேர்ந்த இராஜதந்திரத்தோடு - சுட்டிக்காட்டியிருக்கின்றார். ஆகவே, அதை விடுத்து விட்டு, மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான வழிவகைகள் குறித்துப் பேசலாம் என்றும் அவர் எடுத்துரைக்கின்றார். இனி அரசு என்ன செய்யப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வு காண்பதற்கு கடந்த ஐந்து தசாப்த காலத்தில் - அரைநூற்றாண்டு காலத்தில் - பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இணக்கங்கள் கூட ஏற்பட்டன. பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா உடன்படிக்கை, மாவட்ட அபிவிருத்திச்சபை, மாகாண சபை என்று அவற்றின் பட்டியல் நீளும். ஆனால், அந்த இணக்கங்கள் எல்லாம் குப்பைக் கூடைக்குள்தான் போய்ச் சேர்ந்தன. ஒவ்வொரு தடவையும் ஏற்பட்ட இணக்கங்கள் குழம்பியதும் தமிழ்த் தலைவர்கள் எழுந்து நின்று "பெரும்பான்மைச் சிங்களவர்கள் ஏமாற்றி விட்டார்கள்" என்று கூக்குரலிடுவார்கள்.

ஆனால், 1990 இல் ஜனாதிபதி பிரேமதாஸாவுடான அமைதி முயற்சிகளுக்குப் பின்னர் - தங்களை ஏமாற்ற முடியாது என்ற நிலைக்குத் தமிழ்த் தலைமை தன்மை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் - அமைதி முயற்சிகள் குழம்பும் போதெல்லாம் "தமிழர் தலைமை ஏமாற்றி விட்டது" - என்று கூக்குரலிடத் தொடங்கியுள்ளார்கள் பேரினவாதிகள்.

1983இல் அப்பாவித் தமிழர்கள் மீது இனக்கலவரத்தைக் கட்டவிழ்த்துவிட்டு, தமிழரின் உயிரையும் உடைமைகளையும் சிங்களத் காடையர்களைக் கொண்டு கொன்றொழித்து, அழித்த கையோடு, தமிழர்களைப் பார்த்து "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம், எதற்கும் தயார்" என்று சிங்கள ஸ்ரீலங்காவின் அப்போதைய ஜனாதிபதி முழங்கினார். இப்போது அதையே இராணுவ, அரசியல் பலத்தின் உச்சியில் நின்று கொண்டு தமிழரின் தலைமை கூறியிருக்கின்றது.

இதுவரை அமைதி முயற்சிகளுக்கு - சமாதானப் பேச்சுகளுக்கு - சமரச நடவடிக்கைகளுக்கான வரைவிதிகளையும் ஒழுங்குகளையும் (Terms and Condition) பேரினவாத அரசுகளே விதித்து வந்தன. இப்போது அதற்கு சரிநிகராக - சம பங்காளியாக - பேச்சுக்கான விதி ஒழுங்குகளைத் தமிழர் தரப்பே விதிக்கும் நிலைமை வந்திருப்பதை மதியுரைஞர் பாலாவின் பேட்டி மூலம் உணர முடிகிறது.

சரித்திரம் மாறுவதையே இவை எடுத்துக் காட்டுகின்றன.

விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த யாழ்.அரச செயலகம் ஊடாக நடவடிக்கை

வலிகாமம்தெற்கு,மே13

கீழ்மட்ட விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினூடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் கமத்தொழில் திணைக்களத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பொதுப்பிரச்சினைகள் மற்றும் தனிப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக கமநலசேவை நிலையங்களூடாக விவசாய சம்மேளனங்களிடமிருந்து அபிப்பிராயங்களையும் பிரச்சினைகளுக்கு மேற்கொள்ளப்படக் கூடிய தீர்வுகளையும் தொகுத்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

உடுவில் கமநலசேவை நிலையத்தில் நடைபெற்ற விவசாய சம்மேளனங்களின் குழுக்கூட்டத்தில் இது தொடர்பாக பெரும்பாக உத்தியோகத்தர் செ.சோதிநாதன் விளக்கமளித்தார்.

இம்மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ள விவசாயக் குழுக் கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக விவசாயம் தொடர்பான பிரச்சினைகள், தீர்வு யோசனைகளை இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக எழுத்து மூலம் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு அவர் விவசாய சம்மேளனங்களிடம் கோரியுள்ளார்.

விவசாயத்துறையில் எவ்வளவு தூரம் அபிவிருத்தி வேலைகளைத திணைக்களத்தினூடாக மேற்கொண்டாலும் கூட விவசாயிகள் தொடர்ச்சியாக தாம் விவசாயச் செய்கையால் நஷ்டமடைந்து வருவதாக தெரிவிக்கின்றார்கள்.

விவசாயிகளின் வாழ்க்கைச்செலவு அதிகரித்து வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

எனவே, இதற்கான அடிப்படைக் காரணங்களை இனங்கண்டு, விவசாயிகளின் மாதாந்த வருமானத்தை அதிகரிக்கச் செய்யவேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை மாவட்ட செயலகம் மூலம் மேற்கொள்ளவேண்டும்.

பிரச்சினைகளை இனங்கண்டு விவசாயத்தை திட்டமிட்டு மேற்கொள்ளவும், முன்னுரிமை அடிப்படையில் பிரச்சினைகளை இனங்கண்டு எந்த நிறுவனங்கள் மூலம் அவற்றை மேற்கொள்ளலாம எனத் தீர்மானிப்பதற்கும் விவசாயிகளிடமிருந்தே விவரங்களை சேகரிக்க அரச அதிபர் திட்டமிட்டுள்ளார்.

செயலகத்தினூடாகவும், திணைக்களத்தினூடாகவும் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அபிவிருத்தித் திட்டங்கள் ஆளணிப பற்றாக்குறையினால் விவசாயிகளைச் சென்றடைவதில்லை. உரிய தொடர்பாடல் முறைகளும் திருப்தி தருவதாக இல்லை.

கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை விவசாயிகளுக்கு ஒரு பெரும் தொல்லை. இடம் பெயர்ந்தபோது விட்டுச் சென்ற கால்நடைகளின் பெருக்கம் இன்று கட்டுப்படுத்த முடியாத அளவில் உள்ளது. பாதுகாப்பு வலயத்தினுள் விவசாய காணிகள் அகப்பட்டுக்கொண்டுள்ளன. உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்தலில் உள்ள பிரச்சினைகள். பொருள்களுக்கான வரி அதிகரிப்பு விவசாய உள்ளீடுகளைப் பெறுவதில் உள்ள கஷ்டம். உரிய மானியம் கிடைக்கப்பெறாமை போன்ற பல்வேறு பிரச்சினைகளை விவசாயிகள் எதிர்நோக்கி உள்ளனர். இவற்றுக்கெல்லாம் தீர்வு காணப்படவேண்டும் என அரச அதிபர் தெரிவித்துள்ளார்.(ஐ-152)

கிராம அலுவலரின் இடமாற்றத்தை ரத்துச் செய்யக்கோரி மக்கள் மறியல்

வலி.மேற்குப் பிரதேச செயலகப் பணிகள் நேற்றுக்காலை பாதிப்பு

வலி.மேற்கு,மே13

கடந்த மாதம் இடமாற்றம் செய்யப்பட்ட பொன்னாலை கிராம அலுவலர் வே.இரத்தினத்தின் இடமாற்றத்தை ரத்துச் செய்யக கோரி பொன்னாலை கிராமமக்கள் வலி.மேற்கு பிரதேச செயலகததில் நேற்றுக்காலை மேற்கொண்ட மறியல் போராட்டதினால் பிரதேச செயலகம் காலை 11மணிவரை முற்றாக செயலிழந்தது.

நேற்றுக்காலை 7மணி தொடக்கம் பொன்னாலை, கல்விளான் பகுதி மக்கள் பிரதேச செயலகத்தின் முன்னால் ஒன்றுகூடி பிரதான பாதையின் கேற்றுக்கு முன்னால் அமர்ந்திருந்தனர். இதனால், கேற்றை திறக்க முடியாமல் ஊழியர்கள் பிரதேச செயலகத்துக்கு வெளியே, பஸ்நிலையத்தில் குழுமியிருந்தனர். சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் இந்த மறியல் போராட்டதில பங்கு கொண்டிருந்தனர். பொன்னாலை சனசமூக நிலையம், கல்விளான் சனசமூக நிலையம் ஆகிய சனசமூக நிலையத்தினர் இந்த மறியல் போராட்டத்தை முன்னின்று நடத்தினார்கள்.

முற்பகல் 11மணிக்குப் பின்னர் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ அலுவலகத்துக்குள் சென்று கடமைகளை மேற்கொண்டார். முற்பகல் 11மணிக்குப் பின்னர் மக்கள் போராட்டத்தைக் கைவிட்டு கலைந்து சென்றனர்.

பிரதேச செயலகத்துக்குக் காலையில் வந்திருந்த பொது மக்கள் தமது அலுவல்களை நிறைவேற்ற முடியாமல் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு வருகை தந்த பொதுமக்கள் பலர் இந்த மறியல் போராட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்ததையும் காணக்கூடியதாக இருந்தது. பிரதேசம் முழுவதறகுமான ஒரு நிர்வாக மையமான பிரதேச செயலகத்தை ஒரு கிராம அலுவலரின் இடமாற்றத்திற்காக செயலிழக்கச் செய்வது நியாயமாகுமா என பொதுமக்கள் சிலர் கருத்துத்தெரிவித்தனர்.

நேற்றைய போராட்டத்தினால் ஓய்வூதியம் பெறுபவர்கள், பட்டதாரிகள் தமது முக்கியமான தேவைகளை நிறைவேற்ற முடியாமல் போனது. (ஐ-175-29)

வசாவிளான் கிழக்குப் பகுதி அபிவிருத்தித் திட்டத்துக்குத் தெரிவு

தெல்லிப்பழை,மே13

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் 'நிகொட்' தனது துரித அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வசாவிளான் கிழக்கு கிராம அலுவலர் பிரிவைத் தெரிவுசெய்துள்ளது.

இக்கிராமத்திற்கான அடிப்படைக் கட்டுமானப் பணிகள் அனைத்தும் 'நிகொட்' அமைப்பினால் சுமார் 70 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன. அடிப்படைக் கட்டுமானப் பணிகளில் மின்விநியோகம், வீதியமைத்தல், பாடசாலை, கிராம நலன்கள் அபிவிருத்தி தொடர்பான நிறுவனங்கள் புனரமைப்பு, வீடமைப்பு போன்ற நடவடிக்கைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. என்று பிரதேச செயலக திட்டமிடல் பிரிவின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-150)

அனுமதிப்பத்திரம் இன்றி மதுபானம் விற்ற 12பேருக்கு அபராதம்

யாழ்.நீதிமன்றம் விதித்தது

யாழ்ப்பாணம்,மே13

அனுமதிப்பத்திரம் இன்றி மதுபானம் விற்பனை செய்த பன்னிரண்டு பேருக்கு யாழ்.நீதிமன்றம் 65ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

பிரதான வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டக்ளஸ் மாட்டின் மொரிஸ், பெருமாள் கோயிலடியைச் சேர்ந்த நடராசா ஞானசேகரன், புதிய சிவன் கோயில் வீதி, கொக்குவிலைச் சேர்ந்த ரவீந்திரன் சுகேந்திரன், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெருமாள் சுப்பிரமணியம்.

குருநகர், தண்ணீர்த் தாங்கியடியைச் சேர்ந்த வைரமுத்து பாக்கியராசா, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தையா பாலசுப்பிரமணியம், அரியாலையைச் சேர்ந்த முருகபிளளை அமிர்தலிங்கம், அரியகுளம் வீதியைச் சேர்ந்த இராஜசயா சிவனேசன் மற்றும் கொக்குவிலைச் சேர்ந்த இரத்தினம் இரத்தினசிங்கம் ஆகிய ஒன்பது பேரையும் தலா 3ஆயிரம் ரூபா தண்டப்பணமும், தலா 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் -

மடம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரத்தினசிங்கம் மோகன்ராஜ், குருநகரைச் சேர்ந்த செல்லன் தர்மரூபன் மற்றும் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோசப் யேசுதாஸன் ஆகிய மூவரையும் தலா 5 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், தலா 3ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் யாழ்நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார். (8-5-ரி)

கல்வி அதிகாரிகள் புதனன்று அலுவலகத்தில் இருக்கவேண்டும்

கொழும்பு,மே13

ஒவ்வொரு புதன்கிழமை நாள்களிலும் கல்வித்திணைக்கள அதிகாரிகள் தமது காரியாலயங்களில் இருக்கவேண்டும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் தாரா டி மெல் அறிவுறுத்தியுள்ளார்.

அன்றைய தினம் மக்கள் குறைதீர்க்கும் தினமாக இருக்க வேண்டும் என்றும் கல்வி சார் விடயங்கள் தொடர்பாக வரும் போது மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டும் எனறும டாக்டர் டி மெல் தெரிவித்திருப்பதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறினார்.

புதன்கிழமைகளில் சமூக நிகழ்ச்சிகள், கூட்டங்கள், பயிற்சிப்பட்டறைகள் போன்றவற்றை நிகழ்த்தவேண்டாமென்றும் பொதுமகளுக்கு அதிக பயனுள்ள பணிகளை வழங்கும்படியும் அவர் கோரியிருப்பதாக அந்த அதிகாரி மேலும் கூறினார். (ப)

தெல்லிப்பழை கூ.சங்கக் கட்டடத்தை புனரமைக்க அனுமதி கோரிக் கடிதம்

தெல்லிப்பழை,மே13

தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத் தலைமையகத்தை அதன் சொந்த இடத்தில் இயக்கும் பொருட்டு கட்டடப் புனரமைப்பு வேலைகளைச் செய்வதற்கு அனுமதிகோரி யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் தெல்லிப்பழை சந்திக் கருகில தலைமையகக் கட்டடத்தைக் கொண்டுள்ளது. தெல்லிபபழை ப.நோ.கூ.சங்கம் தற்போது அந்த இடத்தில் சங்கத்தை இயங்கச் செய்வதற்கு நிர்வாகம் ஆலோசித்து வருகிறது. இதன் முதற்கட்டமாக யுத்தத்தால் சேதமடைந்துள்ள தலைமையகக் கட்டடத்தைப் புனரமைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு அனுமதிகோரி அரச அதிபருக்கு விண்ணப்பித்துள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள சங்க வளாகத் தினைத் துப்புரவு செய்யவும், பராமரிக்கவும் படையினர் அண்மையில் அனுமதித்தனர். (ஐ-150)

நாளை

வைகாசி 01
வெள்ளிக்கிழமை
(14.05.2004)
திதி : தசமி
காலை 07.12 வரை.
நட்சத்திரம்: பூரட்டாதி
பகல் 01.49 வரை.
சுபநேரம்: 05.53 - 07.23
ராகுகாலம்: 10.23 - 11.53
(பழைய நேரப்படி)

உதயவாக்கு

தினமும் உழைத்துக் கொண்டிருப்பவர்களே வெற்றி பெற்ற மனிதர்கள்.

மணிவிழாக் காணும்
யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலய அதிபர்
திருமதி பஞ்சநாயகி பிரான்சிஸ்கா சின்னத்துரை அவர்களின்
சேவைநலன் பாராட்டுவிழாச் சிறப்பிதழ் - 13.05.2004

ஆயரின் வாழ்த்துச் செய்தி

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலய அதிபராகப் பணியாற்றிப் பணி நிறைவுபெறும் திருமதி.பி.எவ்.சின்னத்துரை அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறோம். 13 வருடங்கள் ஆசிரியராகவும் 15 வருடங்கள் அதிபராகவும் கல்விப் பணியாற்றி ஓய்வுபெறும் இவரின் நீண்ட கால பணிக்காகக் கத்தோலிக்க கல்விச் சமூகம் இவருக்கு என்றும் நன்றி யுடையதாய் இருக்கவேண்டும். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் இவர் ஆற்றிய அரும்பணிகள் நிச்சயமாக அப்பாடசாலையின் வரலாற்று ஏடுகளில் பதிவுசெய்யப்படும்.

இவர், தமது அதிபர் பதவியின் அதிக காலத்தைப் புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்திலே பணியாற்றி அதன் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்தவர். கல்வியிலும், விளையாட்டிலும் மற்றைய துறைகளிலும் இவரின் காலத்தில் இம்மகாவித்தியாலயம் வளர்ந்து சாதனை செய்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. குறிப்பாக, பல்கலைக்கழக அனுமதியை இம்மகாவித்தியாலய மாணவர்கள் பெற இவர் அரும்பாடுபட்டு உழைத்திருக்கிறார். இப்பாடசாலை மாணவர்களின் மறைக்கல்வி மற்றும் நல் வழிநடத்துதலிலும் இவர் பெரும் கரிசனை எடுத்திருக்கிறார். விஞ்ஞான ஆய்வுகூடம், மனையியல் ஆய்வு கூடம், கணனிக் கல்வி போன்ற பல துறைகளை இப்பாடசாலைக்கு அறிமுகப்படுத்திய பெருமை இவரையே சாரும்.

கல்விப் பணிகளோடு எழுத்துப் பணிகளிலும் ஈடுபட்ட இவர் தனது ஓய்வுக்காலத்தில் தன்னால் இயன்ற பணிகளை சமூகத்திற்காகத் தொடர்ந்து செய்துவர வேண்டும் என இறையாசி வேண்டி வாழ்த்துகிறோம்.

மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்.

மணிவிழாக் காணும் பெண் அதிபர் மகளிர் உலகில் மகிழ்வில் திகழட்டும்

நகர் சார்ந்த கிராமத்தின் காப்பிய நதிபால் பெருமைகள் குவிக்கும் புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் ஆண்ட அதிபரின் மணிவிழாவில் நனைகின்றது. கல்விச் சேவையில் உயர்ந்து, நிமிர்ந்து மகிழ்ந்து – அரச சேவையில் அதிபர் சேவையில் ஓய்வுபெறும் திருமதி பி.எவ்.சின்னத்துரை வாழ்வில் நினைந்து, நிமிர்ந்து மகிழ்ந்து வாழவைச் சமூகத் தேடல்களில் ஒருங்கிணைக்க வாழ்த்துக்கள்.

அர்ப்பணிப்புடன் கூடிய பணிந்த ஆளுமை, தொடர்பாடல் நுடிப்புகளில் அகவிளக்கல் நிரம்பிய அதிபர் சேவை – சுரும்பலகை நுகர்வை தரிசனம் செய்யும் ஆசிரியவாண்மை பாடசாலையின் பௌர்ணமி வெற்றிக்கு உந்துதல் அளித்துள்ளன.

கல்விச் சமூகம் இவரின் தொடர் ஆளுமையைப் பகிர்வுசெய்து மேலும் வெற்றிகள் பரப்பிடல் வேண்டும்.

கைக்குள் அடங்காத காற்றுத் தென்னம் பாலைக்குள் நுழைந்து சின்னப் புன்னகை உதிர்ப்பது போல் திருமதி பி.எவ்.சின்னத்துரை கல்வி உலகத்திற்குள் நுழைந்து எண்ணங்களில் எழுத்துக்களால் – வாழ்வில் வண்ணங்கள் பொறித்தவர் – ஓய்வில் உயர்ந்து வாழ்க.

மணிவிழா அதிபரின் மகிழ்வில் நிறையும் பாடசாலைச் சமூகத்திற்கும் – ஆசிரியர், பெற்றோர், மாணவர்களுக்கும் மணிவிழா அதிபருக்கும் வாழ்த்துக்கள்.

ப.விக்னேஸ்வரன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

ஆற்றலும் ஆளுமையும் கொண்ட நல்ல வழிகாட்டி அவர்

திருமதி பி.எவ். சின்னத்துரை அவர்களின் அதிபர் பணி புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

மாணவரில், ஆசிரியர்களில் மறைந்து மிகுந்துள்ள ஆற்றல்களை இனங்கண்டு அவற்றைக் கல்விப் புலத்தில் விருத்தியான பாதையில் வளர்த்துச் செல்கின்ற ஆற்றலும் எத்தகைய இடர்பாடுகள் எதிர்கொண்டாலும் வரையறுக்கப்பட்ட வளங்களோடு, தன்னகத்தே உள்ள ஆளணியினரை உச்சமாகப் பயன்படுத்தி வெற்றிகரமாகக் சுருமமாற்றும் ஆளுமையும் எண்ணிய இலக்கை அடைந்து கொள்வதற்கு அயராது உழைத்துச் சாதிப்பதில் எல்லோருக்கும் நல்ல வழிகாட்டியாகவும் திகழ்பவர் எங்கள் அதிபர் அவர்கள்.

அதிபர் அவர்களின் ஓய்வுக்காலம் மகிழ்வானதாகவும், நீண்ட ஆயுள் சுகத்தோடும் அமைய இறை ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

வே.கனகசபாபதி
தலைவர்,
ஆசிரியர் கழகம்.

துணிவும் ஆளுமையும் மிக்க அதிபர்

அதிபர் பதவி என்பது மிகப் பொறுப்பு வாய்ந்த சமூக அந்தஸ்தில் உயர்ந்த அற்புதமான ஒன்றாகும். அப்பதவியை எல்லோராலும் சிறப்பாக நிர்வகித்தல் அசாத்தியமானதாகும். சிலர் பதவிகளால் உயர்வதும், சிலர் பதவியை உயர்த்தலும் அவர் தம் வாண்மைச் சிறப்பைப் பொறுத்ததாகும்.

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் அர்ப்பணிப்பு மிகு நல் அதிபர்களைச் சேவையாளராகப் பெற்ற வரலாறு கொண்டது. இத்தகைய புகழ்பூத்த அதிபர் பரம்பரையில் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக ஆளுமை மிக்க அதிபராக – நல்லாசானாக – சமூக சிற்பியாக – எழுத்தாளராகத் தன் பதவியை மிளரச் செய்த சாதனையாளர் திருமதி P.F.சின்னத்துரை ஆவார்.

வானுயுயர ஓங்கி வளர்ந்து நிற்கும் சாள்ஸ் மகா வித்தியாலயக் கட்டடம் இவரது அயிவிருத்திப் பணிகளுக்கு ஒரு சிறந்த உதாரணமாகும். புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் கொத்தணிப் பாடசாலையாக அமைந்த காலத்தில் புகழ்மிக்க G.B.அல்பிரட் அதிபரின் பின் கொத்தணி அதிபராயும், பின் ஆளுமையும், துணிவும் மிக்க அதிபராயும் கடமையாற்றிய காலத்தில் இவர் சந்தித்த சோதனைகள் பற்பல. அத்தனை சோதனைகளையும் சாதனையின் படிக்கற்களாகக் கொண்டு சத்திய வேள்வி படைத்தார். 2004ஆம் ஆண்டு மே 13இல் அதிபர் சேவையில் ஓய்வுபெறும் இவரது சேவை கல்விச் சமூகத்திற்கு என்றும் தேவையானது என்பது மறக்கமுடியாத உண்மையாகும்.

கல்விப் பெறுபேற்றிற்கும் மட்டுமல்லாது இணைப் பாடவிதானச் செயற்பாடுகளையும், நூலக அபிவிருத்தி, விளையாட்டு, கணனி, தமிழ்த் தினம், ஆங்கிலதினப் போட்டிகள் யாவற்றிலும் மாணவர் சாதனை புரிய அதிபர் திருமதி P.F.சின்னத்துரை அர்ப்பணிப்புடன் அரும்பணி புரிந்துள்ளார். இவரது எதிர்காலம் சாந்தி சமாதானம், மகிழ்ச்சி, மிக்கதாய் குடும்பத்துடன் பொலிய வாழ்த்துகின்றேன்.

எஸ்.எஸ்.தங்கராஜா
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
யாழ்.கல்விக் கோட்டம்.

(31873) (24-16-17)

திருமதி பஞ்சநாயகி பிரான்சிஸ்கா சின்னத்துரை

கலைப் பட்டதாரி, கல்வி டிப்ளோமா சிறப்பு
இலங்கை அதிபர் சேவை தரம் - 1

ஆரம்பக் கல்வி
யா/ஆனைக்கோட்டை றோ.க.பாடசாலை
யா/புனித ஜேம்ஸ் மகளிர் ம.வி.
யா/திருக்குடும்ப கன்னியர்மடம் ம.வி.

உயர் கல்வி
பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தொழிற்தகைமை
இலங்கை அதிபர் சேவை தரம் -1

ஆசிரியப் பணி
1. க/கம்பளை முஸ்லிம் ம.வி.
2. க/கம்பளை சாந்த ஜோசேப் ம.ம.வி.
3. யா/மண்டைதீவு ம.வி., 4. யா/கன்னியர்மடம் ம.வி.

அதிபர் பணி
1. யா/கொழும்புத்துறை புனித ஜோசேப் ம.வி.
2. யா/புனித சாள்ஸ் ம.வி., யாழ். நகர் தெற்கு கொத்தணி அதிபர்.
3. யா/புனித சாள்ஸ் ம.வி.

வாழ்க்கை வரலாறு

திருமதி பஞ்சநாயகி சின்னத்துரை அவர்கள் நவாலியூரில் தலைமை ஆசிரியராகத் திகழ்ந்த திரு.மோசஸ்டானியல், ஆசிரியை திருமதி அடைக்கலம் செபமாலை தம்பதியினருக்கு ஆறாவது மகளாக 1944-05-13 இல் பிறந்தார்.

அவருக்கு முன் ஐந்து ஆண்பிள்ளைகள் பிறந்து இருந்தமையால் பெற்றோர் வாஞ்சையுடன் பஞ்சநாயகி எனப் பெயரிட்டனர். இவரின் பின்னரும் இரு சகோதரிகள் உள்ளனர். இவர் யா/ஆனைக்கோட்டை றோ.க. பாடசாலை, யா/புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை, யா/திருக்குடும்ப கன்னியர்மடம் ம.வி. ஆகிய பாடசாலைகளில் கல்வி பயின்று, 1964 இல் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப் படிப்பை மேற்கொண்டு 1968 இல் பட்டதாரியாக வெளியேறினார். 1972 -05-12 இல் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வங்கியாளர் திரு.சின்னத்துரை – திருமதி பூரணம் சின்னத்துரை தம்பதியினரின் ஏக புத்திரனும், தபால் அதிபருமாகிய திரு.அல்பிரட் நவரத்தினம் சின்னத்துரை அவர்களை திருமணம் செய்துகொண்டார். இதன் பயனாக இவர் ஆசைக்கொரு மகளும், ஆஸ்திக்கொரு மகனுமாக இரு பிள்ளைகளைப் பெற்று வளமான வாழ்வு கண்டார்.

இவர், 1976-11-01 இல் கம்பளை முஸ்லிம் ம.வியில் ஆசிரியையாகத் தனது கல்விப் பணி வாழ்வைத் தொடங்கினார். 1980 வரை கம்பளையிலும் 1980-1986 வரை மண்டைதீவு ம.வியிலும், 1986-1990 வரை யா/கன்னியர்மடம் ம.வியிலும் ஆசிரியையாகச் சிறந்த சேவையாற்றி பல நல்ல மாணாக்கரை உருவாக்கினார்.

1989 இல் போட்டிப் பரீட்சை மூலம் அதிபர் தரம் -1 இற்கு தெரிவாகி யா/கொழும்புத்துறை புனித ஜோசேப் ம.வியில் தனது அதிபர் பணியை ஆரம்பித்தார்.

1992 இல் யாழ்நகர் தெற்குக் கொத்தணி அதிபராகப் பதவியேற்று மூலாதாரப் பாடசாலையான யா/புனித சாள்ஸ் ம.வியில் அதிபராகவும் பணியேற்றுக் கொண்டார். தொடர்ந்து யா/புனித சாள்ஸ் ம.வியில் தனது கல்விப் பணி நிறைவுபெறும் வரை முதலாம் தர அதிபராகப் புனித சாள்ஸ் ம.வியை முன்னணிப் பாடசாலையாக வளர்ந்தெடுப்பதில் அயராது உழைத்து வெற்றி கண்டு மகிழ்ந்தார். இவரது கல்விப் பணியையும், சமூகப் பணியையும் ஆன்மீகப் பணியையும் கௌரவித்து இலங்கை அரசு அகில இலங்கை சமாதான நீதிவானாகப் பிரகடனம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதிபர் அவர்களின் மகள் வர்த்தகப் பட்டதாரியாகி வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் ஆசிரியையாகப் பணிபுரிகின்றார். இவரது மகன் கணனித்துறையில் கனடா பல்கலைக்கழகத்தில் கல்வி பயில்கின்றார். இவரது மகளின் கணவர் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிகின்றார்.

அதிபர் அவர்கள் யா/புனித சாள்ஸ் ம.வியில் தனது பணிக்காலத்தில் செய்த சாதனைகளைப் பாடசாலைச் சமூகம் நன்றியோடு நினைவு கூருகின்றது.

இவர், வசதிமிக்க பாடசாலைகளுக்கு மத்தியில் அமைந்துள்ள எமது பாடசாலையைத் தரம் மிக்க பாடசாலையாக, வளம் மிக்க பாடசாலையாக வளர்த்தெடுப்பதில் உற்சாகமாக அயராதுழைத்து வெற்றி கண்டவர். கட்டட அபிவிருத்தி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் முன்னேற்றத்திற்கான உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளல் ஆகிய விடயங்களில் மிக்க கரிசனை கொண்டு உழைத்தவர். இவர் தமிழ்தினப் போட்டி நிகழ்ச்சிகள், ஆங்கிலதினப் போட்டி நிகழ்ச்சிகள், உடற்பயிற்சி, உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், மென்பந்தாட்டம் ஆகிய நிகழ்ச்சிகளில் கோட்ட மட்டம், வலய மட்டங்களில் வெற்றி பெறுவதற்கு அயராது உழைத்ததோடு நடனம், ஆங்கிலப் பாட்டு நிகழ்ச்சிகளையும் இல்ல விளையாட்டுப்போட்டி, இடைவேளைக் கண்காட்சி நிகழ்ச்சிகளையும் தானே முன்னின்று நெறிப்படுத்தி எமது மாணவரை ஆற்றல் மிக்கவர்களாக ஆக்கித் தந்தவர் என்றால் மிகையில்லை.

அருமையான கணவர்; கண்மணிபோன்ற இரு பிள்ளைகள், பண்பான மருமகன், ஆசையான பேர்த்தி என்ற குடும்ப உறவில் அமைதியாக வாழும் குடும்பத் தலைவியாக விளங்கும் திருமதி பஞ்சநாயகி பிரான்சிஸ்கா சின்னத்துரை தனது ஓய்வுக்காலத்தில் சிறப்பான சமய, சமூகப் பணிகள் செய்து சீரும்சிறப்புமாக வாழ இறையருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.

தன்னலம் கருதாத ஆசான்

புனித சாள்ஸ் மகாவித்தியாலய அதிபர் மதிப்புக்குரிய திருமதி P.F.சின்னத்துரை (B.A.Slps-1) அவர்களின் தன்னலம் துறந்த சேவை நலனைப் பாராட்டி வாழ்த்துவோருடன் இணைவதில் பேருவகையடைகிறேன். தலைமைத்துவத்தில் சிறந்த அவரது ஆளுமை இறைவன் அவருக்கு அளித்த கொடைகளை அவர் எவ்வாறு முழுவளர்ச்சிக்கு இட்டுச் சென்றார் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இந்த மகா வித்தியாலயத்தில் அதிபராக அவர் பணியாற்றிய காலத்தில் பல்கலை புகும் மாணவர் தொகை அதிகரித்தது. கணனிப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு, மேலைத்தேய வாத்தியக்குழு உருவாக்கப்பட்டு, பலவழிகளிலும் பாடசாலை உயர்வடைந்ததை நன்றியுடன் நினைவு கூருகிறேன். கத்தோலிக்க பெயர் கொண்ட பாடசாலையில் அதன் உயர் பாரம்பரியங்களை மதித்துப் பேணிய அதிபர் என்ற வகையில் அவர் தம் பணிக்கு நன்றி தெரிவித்து பல்லாண்டு இறையாசி பெற்று வாழ வாழ்த்தி நிற்கிறேன்.

வண.கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம்
யாழ் பேராலயப் பங்குத்தந்தை
யாழ். மறைக் கோட்ட குருமுதல்வர்

எமது வித்தியாலயத்தின் காவியநாயகி

கடமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக
கண்ணியத்துக்கு ஒரு விடிவெள்ளியாக
கட்டுப்பாட்டுக்கு ஒரு காவலராக
கடமை செய்து ஓய்வுபெறும் அதிபர்

திருமதி P.F.சின்னத்துரை அவர்கள் எமது வித்தியாலயத்தின் அதிபராக இருந்து அவர் செய்த சேவைகளோ எண்ணில் அடங்கா. எமது பிள்ளைகளின் பல்வேறுபட்ட உயர்வுக்கு வித்திட்ட பெருந்தகை அவர். அவர் செய்த சிறந்த சேவையைப் பாராட்டுவதுடன் அவர் நீண்ட ஆயுள் பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/புனித சாள்ஸ் ம.வி.

உங்கள் பணிக்காலம் ஒரு பொற்காலம்

மதிப்புக்குரிய எமது அதிபர் திருமதி P.F.சின்னத்துரை அவர்கள் புனித சாள்ஸ் மகாவித்தியாலத்தைப் பொறுப்பேற்று அதன் வளர்ச்சிக்காகவும், உயர்ச்சிக்காகவும் ஆற்றிய மகத்தான சேவை என்றும் மறுக்கப்படவோ அன்றேல் மறக்கப்படவோ முடியாதவை.

அந்தவகையில், மிகவும் நலிவுற்றிருந்த எமது சங்கம் பொலிவு பெற்றுச் செயற்றிறன் மிகு அமைப்பாக இன்று செயலாற்றி வருகின்றது என்றால் அது எமது அதிபராலேயேயாகும். சங்கத்தின் பதவி வழித்தலைவராக இருந்து எமது செயற்பாடுகளுக்கு உற்சாகம் தந்து வழிநடத்தி வளர்த்து விட்ட எமது அன்புக்குரிய அதிபர் பாடசாலையில் பணிபுரிந்த காலம் பாடசாலையின் வரலாற்றில் "ஒரு பொற்காலம்" என்றால் அது மிகையாகாது.

கடினமானதும், கரடுமுரடானதுமான கல்விக் களத்தில் சிறந்தமுறையில் பணியாற்றிய அதிபரை இந்த நன்னாளில் பாராட்டி வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யாழ்/புனித சாள்ஸ் ம.வி. யாழ்ப்பாணம்.

நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி

அன்புசால் பெருந்தகையீர்!

யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலய அதிபர் திருமதி P.F.சின்னத்துரை அவர்களின் ஓய்வுபெறுகையினைச் சிறப்பிக்கும் வண்ணம் "சேவைச் சிறப்பு" மலரினை வெளியிடுவதனையிட்டு பெரு மகிழ்வடைகிறோம்.

"எழுத்தறிவித்தவன் இறைவன்" என்பர். இந்த இறை பொழிலை நீண்ட காலமாக இப்பாடசாலையில் சிறந்தமுறையில் செயற்படுத்திய நல்லாசானாகத் திகழ்ந்தவர் திருமதி P.F.சின்னத்துரை அவர்களாவார். வித்தியாலயத்தினுடைய பல வளர்ச்சிப் படிகளுக்கு அத்திவாரமிட்ட பெருமை இவரையே சாரும். கல்வி மேம்பாடு முதலாக உயர்தர வகுப்பு ஆரம்பித்தல், கட்டட அபிவிருத்தி, ஏனைய தொழில்நுட்பவியல், வள அபிவிருத்தி, முறைசாராக் கல்வி நடவடிக்கைகள் எனப் பலதரப்பட்ட வளர்ச்சிகளுக்கும் கால்கோலாக விளங்கிய இவருடைய ஓய்வு இக்கல்வாரிக்கு ஓர் இழப்பாக அமைந்தாலும் இவருடைய பணிகள் மேலும் பல வழிகளிலும் தொடரவும், இவர் சகல நலன்களுடனும் சிறப்புற வாழவும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

இத்தகு பெருமை மிகு அதிபரின் சேவைகளைக் கௌரவிக்கும் வண்ணம் இம்மலரினை வெளியிடுகின்ற ஆசிரியர் கழகத்தினுடைய பணி போற்றுவதற்குரியது. சிறப்பான கல்வியியலாளராகவும், சிறந்த எழுத்தாளராகவும், சமூகத் தொண்டராகவும் விளங்கிய நல்லாசான் திருமதி P.F.சின்னத்துரை அவர்களின் பணிகளை இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
இரண்டாவது குருமகா சந்நிதானம்.

உள்ளத்தால் உயர்ந்தவர்

யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலய அதிபர் திருமதி P.F.சின்னத்துரை அவர்கள் ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள், மாணவர்கள் அனைவரையும் அன்போடு அரவணைத்து, பதவிநிலை வேறுபாடின்றி நிர்வாக விடயங்களை முன்னெடுத்துச் செல்லும் உள்ளத்தால் உயர்ந்தவர். அவரது அயராத உழைப்பால் பாடசாலையை வளர்த்து, கல்வித் தரம் உயர வழிசெய்தார்.

அதிபர் அவர்களின் ஓய்வுக்காலம் மகிழ்வுள்ளதாக அமைந்து சிறந்து வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

முகாமைத்துவ உதவியாளரும்,
அலுவலக ஊழியர்களும்.

நவீன கல்விச் சீர்திருத்த வழிகாட்டி

நவீன கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக எமது பாடசாலையின் இளஞ் சமூகத்தைக் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகத் தனது சீரான வழிநடத்தலில் சிறந்தமுறையில் கட்டியெழுப்ப நற்சேவையாற்றியுள்ள அதிபர் திருமதி P.F.சின்னத்துரை அவர்களின் அர்ப்பணிப்பும் தியாகமும், கடமை யுணர்வும் அளப்பரியது.

அவர் தொடர்ந்தும் சமூகத்திற்கு நற்சேவையைத் தொடரவேண்டும் என்று அவரின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் எல்லாம்வல்ல இறைவன் அவருக்கு நல்லாசிகளை நிறைவாக வழங்கிட இறையருளையும் வேண்டி நிற்கின்றேன்.

கி.கிறிஸ்தோப்பர்
பகுதித்தலைவர், யா/புனித சாள்ஸ் ம.வி.

புதிய அரசின் பழிவாங்கும் படலம் ஆரம்பம்

வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊழியர்கள் 150 பேருக்கு வேலையிலிருந்து கல்தா!

மேலும் 500 பேருக்கு விரைவில் சீட்டுக்கிழியும்

கொழும்பு,மே13

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் இணைத்துக்கொள்ளப பட்ட 150 ஊழியர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

புதிய அரசு பதவியேற்ற பின்னர் கடந்த அரசின் ஆதரவாளர்கள் எனக் கருதப்படும் அரச ஊழியர்களைப் பழிவாங்கும் படலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என ஐ.தே.கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிலமைச்சு போன்றவற்றுக்கு அமைச்சராக இருந்த மகிந்த சமரசிங்கவின் சிபாரின்பேரில் வேலை வழங்கப்பட்ட 150 ஊழியர்களும் சட்டபூர்வ விதிகளுக்கு அமையப் பணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்றும் - அந்நிறுவனத்திற்கு மேலதிக ஆளணியாகவே அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் - வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கருணசேன ஹெட்டியாராட்சி தெரிவித்தார்.

தற்போது வேலைநீக்கம் செய்யப் பட்டவர்களில் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டவர்களும் அடங்குவர். மேலும் ஐநூறு ஊழியர்கள் விரைவில் வேலையிலிருந்து நீக்கப் படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-க)

காலாவதியாகிய பண்டங்கள் சுண்டுக்குளிப் பகுதியில் அழிப்பு

யாழ்ப்பாணம்,மே13

சுண்டுக்குளிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்து பாவனைத் திகதி காலாவதியான உணவுப்பொருள்களை கடந்த 10 ஆம் திகதி யாழ்.மாநகரசபைப் பொதுச சுகாதார பரிசோதகர்களால் கண்டு பிடித்து அழிக்கப்பட்டன.

காலாவதியான உணவுப்பணடங்கள் விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்ததகவல் ஒன்றின் அடிப்படையில் அங்குசென்ற சுகாதாரப் பரிசோதகர்கள், திடீர்பரிசோதனையை மேற்கொண்டனர். அங்கிருந்த பாவனைத் திகதி காலாவதியான உணவுப் பொருள்களை கைப்பற்றி அழித்தனர். அழிக்கப்பட்ட பொருள்களில் பிஸ்கட், கோப்பி, குளுக்கோஸ், கனடோஸ், அரிசிமா, பால்மா, சோயாப் பைக்கெற் போன்றவை அடங்கும் என யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாஸன் அறிவித்துள்ளார். (8-9)

ஊர்காவற்றுறை பிரதேச செயலக குறைகேள் சேவை எழுவைதீவில்

ஊர்காவற்றுறை,மே13

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மக்கள் குறைநிவர்த்திச் சேவை இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை எழுவைதீவில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த குறைநிவர்த்தி சேவையில் பொதுமக்களின் பிரச்சினைகள் கேட்டறியப்பட்டு அவற்றைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்பொருட்டு எழுவைதீவு பிரதேசத்தில் பொதுமக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சனைகள் மற்றும் முன்னுரிமை ஒழுங்கில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து உள்ளூர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் தரவுகள் கோரப்பட்டுள்ளன.

அன்றையதினம் நடைபெறவுள்ள குறைநிவர்த்தி சேவையினை அப்பிரதேச வாழ்மக்கள் சிறந்தமுறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஊர்காவற்றுறை பிரதேசசெயலகம் அறிவித்துள்ளது. (ஐ-9-16)

சட்டவிரோதமாக மின்பெற்ற 15 பேர் மல்லாகத்தில் கைது

2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,மே13

மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டிப் பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம்பெற்ற 15 பேருக்கு மல்லாகம் நீதிமன்றத்தினால் மொத்தம் 2லட்சத்து 25ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மின்சாரசபையின் சுன்னாகம் அலுவலக உத்தியோகத்தர்கள் குழுவொன்று தெல்லிப்பழை பொலீஸார் சகிதம் கடந்த 10ஆம் திகதி மேற்கொண்ட திடீர்சோதனையின்போதே சட்டவிரோதமாக மின்சாரம்பெற்ற 15 பேரும் சிக்கினர்.

இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர். 15 பேருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கந்தசாமி குணரட்ணம் (கோவில்குளம், தெல்லிப்பழை), முருகேசு இராசு (கோவில்குளம், தெல்லிப்பழை), பொன்னம்பலம் முருகேசு (தெல்லிப்பழை வடக்கு), சவரிமுத்து புனிதன் (குளமங்கால் மல்லாகம்), சின்னர் அண்ணாமலை (சித்தியம்புளியடி, தெல்லிப்பழை), முருகையா உசாநந்தன் (சித்தியம்புளியடி, தெல்லிப்பழை), வல்லி சிவலிங்கம் (கோணப்புலம்முகாம், மல்லாகம்), வேலன் ஜெயபகலன் (கோணப்புலம் முகாம் மல்லாகம்), சின்னமணி இரதினசிங்கம் (கோணப்புலம்முகாம் மல்லாகம்), சின்னையா மகாலிங்கம் (தெல்லிப்பழை துர்க்காபுரம்), சந்திரசேகரம் கமல்ராஜ் (நீதிவான் முகாம் மல்லாகம்), செல்லத்துரை சுந்தர் (நீதிமன்ற வீதி, மல்லாகம்), இராசாவிக்னேஸ்வரன் (அலுக்கை, அளவெட்டி), கநதன் நவரத்தினம் (தெல்லிப்பழை கோவில்புலம்), கந்தன் இராசரத்தினம் (தெல்லிப்பழை, கோவில்புலம்) ஆகியோரே மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டவர்களாவர். (ஐ-9-ரி)

சாயி சிந்தனை

அளவற்ற ஆசைகள் கூடாது

உண்மையான பக்திஎன்பது கோயில்களைக் கட்டுவது அல்ல. வழிபாடுசெய்வது, பஜனை செய்வது என்பதெல்லாம் அல்ல. வேலையே வழிபாடு, கடமையே கடவுள். உனது கடமையை ஒழுங்காகச்செய் "கர்த்தவயம் யோக முச்யதே" என பகவத்கீதை உரைக்கிறது. உனது கடமையைச் செய்வதுதான் யோகம். "நகர்மணா, நப்ரஜயா, தனேன, த்யாகேனைகே அம்ருதத்வ மாலை" தியாகம் மட்டும் கடைசியில் அம்ருதத்துவத்தை அளிக்கிறது. ஆகவே, நாம் அதனை வளர்த்துக்கொள்ளவேண்டும். நாம் நமது வாழ்வை முடிக்கும்போது அன்புடன் முடிக்கவேண்டும். நாம் மனிதப்பிறவி எடுத்துள்ளோம். பிறவிகளிலேயே மிக அரிதானது மனிதப்பிறவி. இத்தகைய மிக அரிதான மனிதப்பிறவியெடுத்துவிட்டு நாம் நமது வாழ்க்கையை வீணாக்கக் கூடாது. மனிதன் சிலநேரம் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு வருகிறான். காரணம் என்ன? அளவுக்கதிகமான ஆசைகள்தான் இத்தகைய "Depression" களிற்கு காரணம். குறைந்த சுமைகள் தான் நிறைந்த வசதிகள் அளிக்கும். வாழ்க்கைப்பயணம் இனிதாகும். மனிதவாழ்க்கை ஒரு நீண்ட பயணம். இங்கே சுமைகள் என்பது ஆசைகள். நாம் நமது ஆசைகளைக் குறைத்துக்கொள்ளவேண்டும். நம் ஆசைகளின் மேல் ஒரு கடுப்பாடு வைத்துக் கொள்ளுதல் அவசியம். அளவற்ற ஆசைகள் கூடவேகூடாது. அப்போதுதான் பாரதம் இவ்வுலகம் முழுவதையும் முன்னின்று நடத்திச் செல்லும்.

(ஆதாரம்: சனாதன சாரதி)

ஆத்மஜோதியின் ஜயந்திவிழா

ஆத்மஜோதி நா.முத்தையாவின் 87 ஆவது ஜயந்தி விழா எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7மணிக்கு ஏழாலை ஆத்மஜோதியான மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆத்மஜோதி மணிமண்டப சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜயந்தி விழாவில் ஏழாலை இலந்தைகட்டி பாதாள வைரவர் ஆலயத்தில் விஷேட அபிஷேகமும் திருவாசக முற்றோதலும் இடம்பெறும்.

நிகழ்வில் ஈழத்துச் சித்தர்கள் என்னும் நூல் வெளியீடும் இடம்பெறும். நூலினை இந்துசமய கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் வெளியிட்டு வைப்பார். (10-117)

சமய சந்நிதிகளில்

காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தியும், சங்காபிஷேகமும் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் நடைபெறவுள்ளன.

இரவு 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் திருவீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும். (10-73)

★ ★ ★

வலி.தென்மேற்கு,மே13

பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை (திருத்தலம்) ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. உற்சவ தினங்களில் மாலை நேரத்தில் இந்தியாவின் பெங்களூர் ஆயர்மன்ற வழிபாட்டு ஆணைக்குழுவின் செயலர் அருட்திரு.மை.பேசுதாசன் அடிகளார் மறை உரை நிகழ்த்தி வருகிறார்.

இன்று வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் தலைமையில் கூட்டுத்திருவிழாத் திருப்பலி நடைபெறும். (10-35)

பலாப்பழ சீஸன் ஆரம்பம்

தற்சமயம் பலாப்பழ 'சீஸன்' ஆரம்பித்துள்ளதை அடுத்துக் கொடிகாமம் சந்தையில் அதிக பலாப் பழங்கள் விற்பனைக்கு வருகின்றன. ஆயினும், விலை அதிகமாக உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். அதிகமான பலாப்பழங்கள் வடமராட்சி மக்களால் எடுத்துச் செல்லப்படுவதையும் காணக்கூடியதாகவும் உள்ளது. (10-170)

அப்பர் குருபூசை

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் இந்து மன்றத்தினால் நடத்தப்பட்டு வரும் 63 நாயன்மார் குருபூசை வரிசையில் இன்று காலை 7.30 மணிக்கு திருநாவுக்கரசர் நாயனார் குருபூசை கல்லூரியில் உள்ள சோமாஸ்கந்தர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. விசேடபூசையைத் தொடர்ந்து மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும். (10-72)

★ ★ ★

சங்கானை,மே13

பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தில் இன்று திருநாவுக்கரசர் குருபூசை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் 'அப்பரின் வாக்கும் வாழ்வும்' என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.(10-29)

கல்விச்சாலைக் காட்சிகள்

கோப்பாய் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற சமயதீட்சை பெற்ற மாணவர்களுக்கான பரிசில்வழங்கும் நிகழ்வில் அதிபர் அ.அகிலதாஸ் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். இந்து மாமன்றப் பொருளாளர் சி.வெற்றிவேலாயுதமும் படத்தில் உள்ளார். *(10-180)*

பிரான்பற்று கலைமகள் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம், வித்தியாலய அதிபர் வே.சிவசுந்தரம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் இல்லமெய்மென்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அதிபர் அ.நடராசா மற்றும் விருந்தினர்களும் படத்தில் உள்ளனர். *(10)*

இடைக்காடு மகாவித்தியாலயத்தில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் 20 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத்தை நிறுவன இணைப்பாளர் மைக்கல் வில்லகே திறந்துவைப்பதையும் அருகில் அதிபர் எஸ்.சித்திரவடிவேல் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)

LP Gas விற்பனைக்குண்டு

உங்கள் சமையலுக்குத் தேவையான LP Gas எங்களிடம் விற்பனைக்குண்டு. மாநகரசபை எல்லைக்குள் விநியோகம் இலவசம். விலைகள் பின்வருமாறு:

LP Gas - 760.00 ரூபா
வெற்று சிலிண்டர் - 1800.00 ரூபா

நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய இடம்:

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
Tel.: 4590008
021-222 2829
021 222 5595

(31902)(34-21-11)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மன்னில் மலர்வு 10 - 12 - 1926

விண்ணில் வாழ்வு 28 - 05 - 2003

திருமதி **கனகரத்தினம் நல்லம்மா** (மானிப்பாய்)

திதி: 14-05-2004

நாளை (14-05-2004) வெள்ளிக்கிழமையன்று மருதடி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் அன்னதானத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர், அயலவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(31892)(42-21-11-26) பிள்ளைகள்.

ஆறாவது வருட நினைவஞ்சலி

தோற்றம் 08 - 07 - 1947



மறைவு 21 - 04 - 1998

அமரர் **கதிரவேலு கந்தையா**

(இரத்தினம் மெக்கானிக்)

அறிவு வழிகாட்டி எம்மை அன்புடனே
அவனியிலே உயரவைத்தீர்!
அன்புவழிகாட்டி எம்மை ஆதரித்து
அரவணைத்து வளர்த்தெடுத்தீர்!
பண்பு வழியதனில் நீங்கள் என்றும்
பாங்குடனே நடந்தீர்கள்! வன்புவழி எதுவென்று
வாழ்வினிலே அறிந்திடாத அன்புருவே!
அப்பாவே ஆருயிர்த் தெய்வமே!
ஆண்டுகள் ஆறு ஆனபோதும் ஆறவில்லை
எம்துயர் அஞ்சலிகள் செய்கின்றோம்
அரனடிக்கீழ் இன்புறவே!

(31898) (26-11-21)

அச்சுவேலி தெற்கு. - குடும்பத்தினர்.

மூன்றாம் ஆண்டு நினைவுகள்

உதயம் 07 - 03 - 1920



மறைவு 18 - 04 - 2001

அமரர் **நாகலிங்கம் பொன்னம்பலம்**

(முன்னாள் 'லேக்ஹவுஸ்' பத்திரிகை முகவர்)

திதி: 13.05.2004

ஆண்டுகள் மூன்று சென்றிடினும்,
ஆதரவின்றி நாம் தவித்திடினும்,
மாண்டார் என மாற்றார் செப்பிடினும்,
மாறுமோ உம் விம்பம் எம் மனங்களை விட்டு?
அன்புத் தெய்வமே!
உங்கள் நினைவுடனேயே நாம் இங்கு வாழ்கின்றோம்.

(31855)(42)

'கேணிக்கரை',
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

- அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

படைச் சிப்பாயின் மோட்டார் சைக்கிளும் மற்றொன்றும் மோதுண்டன

வவுனியா தரணிக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் படைச்சிப்பாய் ஒருவர் சென்ற மோட்டார் சைக்கிளும் இளைஞர் ஒருவரின் மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் இளைஞர் காயமடைந்தார்.

கல்மடு பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியரான புண்ணியமூர்த்தி ஜெயசங்கர் (வயது 23) என்ற இளைஞரே படுகாயமடைந்தார். படுகாயமடைந்தவர் வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியாவில் இருந்து வேகமாகச் சென்ற சிப்பாயின் மோட்டார் சைக்கிளும் கல்மடுவில் இருந்து வந்த ஆசிரியரின் மோட்டார் சைக்கிளும் மோதுண்டதாகக் கூறப்படுகிறது. விபத்தில் சிப்பாய் சிறு காயத்திற்கு உள்ளானார்.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலீஸார் பூர்வாங்க விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஜ-9-164)

தேர்தல் களம் - 2004

NO.4

தமிழ் நாட்டில் காங்கிரஸ் - கருணாநிதி கூட்டணி அமோக வெற்றிபெறும்

		ரா	சந்
	சோனியா 09.12.1946 திருவாதிரை ② (மிதுனராசி)		ல / கனி
செ	பு, சு கே	வி சு	

சோனியாகாந்தி ஜாதகம்

16.10.2005 வரை புதன்/ராகு புத்தி நடப்பு.

PROF **த.சத்தியதாஸன்** (Mech.E., Elec.E)
ஆனைக்கோட்டை

ராசிபலன்கள் விற்பனையாகின்றது

(31906)(37-26-11-21) T.P.021-222 2753

31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி கலைவாணி நடராஜலிங்கம்
அவர்களின் அன்புத் தந்தையார்

வேலாயுதர் நாகலிங்கம்

அவர்கள் அமரத்துவம் அடைந்த முப்பத்தோராம் நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சைவப்பிரகாச வித்தியாலயம், பாடசாலைச் சமூகம்.
நெடுந்தீவு.

(31901)(42-21-11-26)

குழந்தைகளுக்கு அன்பளிப்பதற்கு

சிறந்த பரிசு

ரண் கெகுளு

பரிசு வவுச்சர்

இலங்கை வங்கி அறிமுகப்படுத்தும், "ரண் கெகுளு பரிசு வவுச்சர்" எமது குழந்தைகளின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் ஒரு முதலீடாகும்.

"ரண் கெகுளு பரிசு வவுச்சர்" எமது குழந்தைகளின் வாழ்வின் விசேட தினங்களில் அன்பளிப்பாக வழங்கக் கூடிய சிறந்த பரிசு.

- ரூபா.100/=, ரூபா.200/=, ரூபா.500/=, ரூபா.1000/= ஆகிய பெறுமதிகளில் "ரண் கெகுளு பரிசு வவுச்சர்களை" எல்லா இலங்கை வங்கி கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
- "ரண் கெகுளு பரிசு வவுச்சர்" பெற்றவர்கள் தாம் விரும்பிய இலங்கை வங்கி கிளைகளில் குறிப்பிட்ட பெறுமதிக்கு ரண் கெகுளு கணக்கை ஆரம்பிக்கலாம் அல்லது ஏற்கனவே "ரண் கெகுளு" கணக்கு உள்ளவர்கள் பணத்தை அந்தக் கணக்கில் வைப்புச் செய்யலாம்.

Twin Advertising

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

பலதுறைச் சிந்தனைகள் கொண்ட சாதனைகளின் சரித்திரமாக விளங்கியவர் பேராசிரியர் வித்தியானந்தன்

பொதுவாகப், பரவலாகச் செல்வநாயகமும் வித்தியானந்தனும் இருவேறான கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் எதிரிகள் என்பதும் செய்தியாக நிலைத்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம் ஆ.சதாசிவம். ஆனால், அவர்கள் தனிப்பட்ட முறையில் ஒருவருக்கு ஒருவர் கரிசனையும் மதிப்பும் வைத்திருந்திருந்தார்கள். இரு குடும்பங்களும் உறவினர்கள் போல. செல்வநாயகத்தின் மனைவி கமலாம்பிகை. வித்தியின் மனைவி கமலாதேவி. இருமனைவிமாரும் ஒருவரையொருவர் சந்திக்கும்போது சூரியனை வரவேற்கும் இரு கமலங்கள்போல முகம் மலர்வார்கள. அவர்கள் பிள்ளைகள் சகோதரர் போல் ஒன்று கூடுவார்கள்.

அந்தக் காலத்தில் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் பதவிக்குப் போட்டி என்றால் பரபரப்பான சம்பந்தப்பட்டவர்களிலும் பார்க்க அவர்களைச் சார்ந்தவர்களினது மனங்களைச் சிலகாலம் உலுக்கவைக்கும் நிகழ்வாகும் அது. ஏனென்றால், இப்போதுபோல் அல்லாமல் ஒருவருக்கு ஒருத்தி என்ற தாம்பத்தியக் கட்டுப்பாடுபோல் ஒரு துறைக்கு ஒரு பேராசிரியர்தான் இருக்கமுடியும். வயதில் குறைந்த ஒருவர் பேராசிரியரானால் மற்றவர்கள் வாழ்நாள் விரிவுரையாளர்களாகவே இருந்து போகவேண்டும். இந்தநிலையில், 1965ஆம் வருடம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியர் பதவிக்குப் போட்டி நடந்தது. போட்டியிட்டவர்கள் வி.செல்வநாயகம் 58 வயது (23 வருட அனுபவம்), சு.வித்தியானந்தன் 41 வயது (19 வருட அனுபவம்), ஆ.சதாசிவம் 39 வயது (13 வருட அனுபவம்), சு.வியும் ஆ.சவும் செல்வநாயகத்தின் மாணவர். ஆ.ச. என்பவர் சு.வியின் மாணவர்கூட.

அப்போது, என்னைக் காண வித்தி விரும்புவதாக ஒரு மாணவன் வந்து கூறினான். நான் அவர்கள் வீட்டிற்குப் போனபோது அவர் இல்லை. மனைவி கமலாதான் இருந்தா. அவர் கூறினார், "நந்தி மாமா, (அவர் பிள்ளைகள் அப்படித்தான் அழைப்பார்கள்) இந்தப் 'புரொபஸர்' போட்டி விஷயமாகத் தான் பேச அழைத்தார்" என்றா. அவ மேலும் கூறினா, "மிஸ்ரர் செல்வநாயகத்துடன் போட்டிபோட இவருக்கு விருப்பமில்லை. பெரியவருக்குக் கிடைத்தால் எங்களுக்குச் சந்தோஷம். ஆனால், சதாசிவம் ஓடித் திரிட்து. சதாசிவத்துக்குக் கிடைத்தால் ஒருநாளும் இவருக்குக் கிடையாது"

இந்தநிலையில் சதாசிவம் செல்வநாயகம் வீட்டிற்கு ஓர் இராப்போசனத்துக்கு வந்திருந்தார். அதில் நானும் கலந்துகொண்டேன். போசனத்திற்கு முன் சதாசிவம் கூறினார் "பேராசிரியர் பதவி எனக்குத்தான் கிடைக்கும். உங்களுக்கு PLD இல்லை. உங்களை இன்ரவியூவிற்கு அழைக்கவும் மாட்டார்கள். வித்தி Second Class. நான் First Class. அத்துடன், வித்தி பற்றிய சில அவதூறான விடயங்களை எழுதி அவற்றை யூனிவேர்சிற்றிக்கு அனுப்பப்போகின்றேன். எழுதிக்கொண்டு வந்ததைப் படித்துக் காட்டினார்.' இதைப் படிச்சால் வித்திக்கு ஒருகாலமும் துறைத் தலைவர் பதவி கிடைக்காது" என்றார். செல்வநாயகம் கேட்டுக் கொண்டிருந்தவர் எழுந்துவிட்டார். 'இதை நீ அனுப்பினால் உன்னைப்பற்றி இன்னும் கூடுதலாக நான் எழுதி அனுப்புவேன்" என்று கூறிவிட்டுப் போய்விட்டார். இராப்போசனத்திற்குச் செல்வநாயகம் எங்களுடன் சேரவில்லை. அதுதான் செல்வநாயகம்! செல்வநாயகம் பேராசிரியர் ஆனார்.

பல்கலைக்கழகம் ஆனாலும் சரி, அரசு அலுவலகம் ஆனாலும் சரி ஒரு குடும்பமாக புரிந்துணர்வுடன் இயங்கவேண்டும். அப்போது தான் மகிழ்ச்சியுடன் முன்னேற்றம் காணலாம். கோள்மூட்டும் ஒருவர் அதில் இருப்பின், அந்த நிலையை அடைய முடியாது. ஏறத்தாழ அதே கால கட்டத்தில்தான் சதாசிவம் 'இமசினர் வழக்கு' என்ற கோட்பாட்டைப் பிரபல்யப்படுத்தி, அது இம்சனர் என்று திரிபுபட்டு, எழுத்தாளர் சங்கங்கள் இழுபறிப்பட்டு அடிபட்டு உடைபட்டன. அது சதாசிவத்தின் வேறு முகம்.

1971ஆம் ஆண்டு செல்வநாயகம் ஓய்வுபெற மீண்டும் பேராசிரியர் பதவிக்கு போட்டி நடைபெற்றது. இந்தமுறை கொழும்பில் ஏற்கனவே பேராசிரியராக இருந்த சதாசிவமும் கைலாசபதியும் வித்தியானந்தனுடன் போட்டி இட்டனர். கைலாசபதிக்குப் பல்கலைக்கழக ஆசிரிய சேவையில் 10 ஆண்டுகள்கூட நிரம்பவில்லை.

"கைலாசபதி வித்தியானந்தனுடன் போட்டியிடுகின்றாரா என்று அக்காலத்தில் மூக்கின்மேல் விரலை வைத்தவர்கள் பலர்" என்று வேலுப்பிள்ளை தனது பேருரையில் கூறுகின்றார். உண்மையில் மூக்கின்மேலல்ல, வித்தியானந்தன் கைலாசபதிக்குச் செய்தவற்றை அறிந்தவர்கள் தங்கள் இதயத்தின் மேல்தான் கையை வைத்தார்கள். வித்தி இது பற்றி இருதரம் என்னிடம் கூறினார். இரண்டாம் தரம் கூறும்போது அவர் கண்கள் கலங்கின. பேராசிரியர் தேர்வுக்கு இருவரும் போயிருக்கிறார்கள். He did not even look at my face என்று கூறினார் வித்தி. அதை அவர் எதிர்பார்த்திருக்கவேண்டும். எந்த முகத்துடன் கைலாசபதி அவரைப் பார்க்க முடியும்?. வித்தி கைலாசபதிக்கு ஏறுவதற்கு ஏணியாக மட்டுமல்ல, சிலவேளைகளில் செயற்கைச் சுவாசம் கொடுக்கும் இயந்திரமாகவும் இருந்திருக்கிறார். அப்படி இருந்தும் ..... இப்படி நடந்தது. வித்தி அவர்கள் இந்த நிகழ்வைக் கூறும்போது As you like it இல் ஷேக்ஸ்பியரின் கவிதை அடிகளின் அர்த்தம் எனக்கு நன்றாக விளங்கின.

Blow blow thou winter wind
Thou are not so unkind
As mans ungratitude
வீசு வீசு பனிக்காற்றே
மனிதனின் செய்நன்றி கொல்லலிலும் பார்க்க
நீ அன்பில்லாதவன் அல்ல - என்பதாகும்.

பேராதனையில் வித்தியின் காலம் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் ஓர் உன்னதமான மாணவ பரம்பரை தோன்றிய காலம், நாட்டுக்கூத்து மறுபிறவி எடுத்தகாலம், கலைஞர்கள் தலைநிமிந்து நடைபோட்ட காலம்.

இப்போதைய நிலையில் அவரைப் பற்றி அவரது பிரசித்தி பெற்ற மாணவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். இந்தச் சொற்பொழிவுக்காக ஏழு பேரை நேரடியாகச் சந்தித்தேன். ஒருவருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டேன். வித்தி பற்றிச் சுருக்கமாக இரண்டு வசனங்கள் கூறுங்கள் என்றேன். இது மிகவும் சுருக்கமான பேட்டிதான். ஆனால், தந்தி பாஷையில் அவை கூறியன பின்வருமாறு:-

★ வித்தியானந்தன் வாழ்நாள் முழுவதையும் தனது பணியைத் தமிழ் மக்களின் கல்விக்கும் கலைகளுக்கும் அர்ப்பணித்தவர் (பொ.பாலசுந்தரம்பிள்ளை).

★ அவர் தமிழ் அறிஞராக இருந்தது மட்டுமல்ல, தமிழ் மக்களுடைய தேசிய உணர்வைக் கட்டி எழுப்புவதிலும் தமிழ் மக்களுடைய அபிலாசைகளை முன்னெடுத்துச் செல்வதிலும் தனியான ஓர் இடத்தை வகித்தவருமாவார் (எஸ்.கே.சிற்றம்பலம்)

★ நல்லாசான், தமிழ் ஆர்வலர், நட்பு மிகுந்தவர், மனிதநேயம் படைத்தவர் (N.பாலகிருஸ்ணன்).

★ பண்டைத்தமிழ் இலக்கியத்தையும் இலக்கணத்தையும் கற்பதை வேம்பாகக் கருதிய பல மாணவர்கள, பேராசிரியர் வித்தியிடம் அவற்றைக் கற்ற பின்னர்தான் அவை சுவைமிக்கவை என்று உணர்ந்தனர் (சந்திரசேகரம்).

★ இலங்கைப் பல்கலைக்கழகமும யாழ். பல்கலைக்கழகமும் நிரம்பிப் பார்த்து பெருமைப்படத்தக்க பல சாதனைகளை நிலை நாட்டியவர். மற்றோருக்கு உதவி செய்வதில் பெரும் மகிழ்ச்சிகண்ட ஒரு மகோன்ன தமான மனிதாபிமானி (சி.தில்லைநாதன்).

★ தமிழ் பயிற்றுவது என்பது அவருக்குப் பண்பாட்டுப் பயிற்சி. அத்துடன், அவர் (ஆசிரியர், மாணவர்) வேற்றுமை பேணாத ஒருவர் (மனோன்மணி சண்முகதாஸ்).

★ இலங்கையின் தமிழியலுக்கு அவரது அழியாத சேவை அரங்கியலுக்கு அவர் செய்த பணிதான் அதன் மீள் கண்டறிதலும் அதனைப் பல்கலைக்கழக மாணவருக்குக் கற்பித்த முறையும் குறிப்பிடத்தக்கன. மனிதன் என்ற முறையில், He was a great lecture beeing (K.சிவத் தம்பி).

கூத்தியல் ஆய்வின் பிதாமகன்

★ வித்தி ஈழத்து கூத்தியல் ஆய்வின் பிதாமகன், விழிம்பு நிலை தமிழரின் கலைகளையும் தமிழ்க் கலைகள் எனக் காட்டிய முன்னோடி. (சி.மௌனகுரு).

இந்த வார்த்தைகள் அவரது பன்முக ஆளுமையையும், கலையுணர்வின் வேட்கையையும், நட்பின் ஆத்ம நிலையையும், மனிதாபிமானத்தின் பேரழகையும் எடுத்துக்காட்டுகின்றனவாக உள்ளன.



யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நினைவுப்பேருரை கடந்த 8ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

வாழ்நாள் பேராசிரியரும் முன்னாள் மருத்துவபீட பீடாதிபதியும் சிறந்த நாவலாசிரியருமான பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) 'கலையின் அன்பன், கலைஞரின் நண்பன்' என்னும் தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்தினார். அந்த உரையின் முதலாவது பகுதி கடந்த 11ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தது. மிகுதிப் பகுதி இன்று பிரசுரமாகின்றது.

வித்தியானந்தன் கலைகளின் அன்பன். கலைஞரின் நண்பர். அவரது குடும்பம் ஒரு கலைக்குடும்பம் என்று கலையரசு சொர்ணலிங்கம் வர்ணித்தார். கலைஞர்களை முக்கியமாக நாட்டார் கூத்து சம்பந்தமானவரை அவர் தேடி அலைந்து, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, சிலாபம், மன்னார், மலைநாடு என்றெல்லாம் சென்று, அழைத்து வந்து பல்கலைக்கழக அரங்கில் மேடை ஏற்றி நாட்டார் கூத்துக்கு பீடுப்பணி செய்ததை வேலுப்பிள்ளையும், சிவத் தம்பியும் அவரது தமிழ்ப்பணி என்றும், அழியாத சேவை என்றும் குறிப்பிடுகிறார்கள். இந்தப் பணியில் அவரது இல்லம் என்றும் கலைஞருக்குத் திறந்திருந்தது. அதன் இல்லத் தரசி கமலாதேவி வித்தியானந்தன், வித்தியானந்தன் வாழ்வில் அவர் ஒரு சக்தியாகவும் சரஸ்வதியாகவும் இருந்தார் என்று சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

1978ஆம் ஆண்டும் அதன் பின்பு 10ஆண்டுகளும வித்தியானந்தனை சரித்திரத்தில் நிலைநாட்டிய உன்னத காலம், அவர் யாழ். பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராகக் கடமையாற்றினார். ஒரு துணைவேந்தராக முழுநிலை நியமனம் பெற்ற முதலாவது இலங்கைத் தமிழர் வித்திதான். அதேகாலம் அவருடன் பணியாற்றக் கிடைத்தது எனது பாக்கியம் என்று கருதுகிறேன். யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம் அவரது சிந்தனையினதும் துணிவினதும் தன்னம்பிக்கையினதும் குழந்தையாகும். வித்தி மற்றவர்களது குறிப்பாகத் தமிழர் அல்லாத மற்றவர்களது ஒத்துழைப்பைப் பெறுவதில் மகாவல்லவர்.

அவர் துணைவேந்தராக இருந்த போது கொழும்பு சென்று பல்கலைக்கழக மானியக்குழு (Uac) அதிகாரிகளிடமிருந்து, மௌனமாக எந்தவித ஆர்ப்பாட்டமும் இன்றிப் பல்கலைக்கழகத்திற்கு வேண்டியதைப் பெற்று வந்த திறமையை நான் நேரில் பார்த்து வியந்த ஒருவன். அதற்கு ஒரு காரணம், மானியக் குழுத்தலைவர் ஸ்டான்லி கல்ப்பகே வித்திமேல் வைத்திருந்த பெரும் மதிப்பும், நம்பிக்கையும் என்று கூறமுடியும். இன்று நிமிர்ந்து நிற்கும் கட்டடங்களும் உருவான பீடங்களும் அவர் காலத்திலேயே உருப்பெற்றுவிட்டன.

வித்தியின் பல்கலைக்கழக நிர்வாகம் நீதியும் நியாயமும் நேர்மையும் கொண்டதாக இருந்தது. அவருடன் பேராசிரியர் தொடக்கம் சிறிய தொழில்கள் பார்ப்போரிலும் தேர்வுக் குழுக்கள் பலவற்றில் நான் பணியாற்றியிருக்கிறேன். தகுதியில்லாத ஒருவரையும் அவர் நியமித்ததில்லை.

துணைவேந்தர் வித்தி யாழ். பல்கலைக்கழகத்திற்கு ஆகாத எதையும் செய்ததில்லை. அவர் துணைவேந்தராகப் பதவியேற்ற ஒரு வருடத்தில் (1979) அவருடன் 22 வருடங்கள் வாழ்ந்து அவருக்கு உறுதுணையாக இருந்த அவரது மனைவி சடுதியாக இறந்தார். இந்த இழப்பு எந்த அளவு அவரது பல்கலைக்கழக நிர்வாகத்தைப் பாதிக்கக்கூடும் என்று நண்பர்கள் கவலையுற்றார்கள் ஆனால, வித்தி தன்னை நல்ல முறையில் தடப்படுத்திக்கொண்டார். நல்லவருக்குத் தெய்வம் துணை என்ற நியமத்தில் அவருக்குப் பதிப்பாளர் ஏக தெய்வபக்தியும் நிர்வாகத்திறனும் உள்ள இருவர் லோகேஸ்வரனும் சிவராசாவும் வாய்த்தனர். அத்துடன், அவருக்கு ஒரு மகள் போன்ற கரிசனையுடன் அலுவலகத்தில் உதவியாளராக (Personal Secretary) இருந்தார் கிரேஸ் பாலச்சந்திரன் என்ற விசுவாசமுள்ள நம்பிக்கையான பெண்மணி. வித்தியின் நிர்வாக அமைதிக்குக் கிரேஸ் பாலச்சந்திரனின் பங்கு கணிசமானது. வித்தியின் பின்வந்த துணைவேந்தர்களுக்கும் அதே பங்களிப்பை கிரேஸ் பாலச்சந்திரன் செய்ததை நாம் ஒப்புக்கொள்ளவேணடும். மாமனிதன் துரைராசா நோயுற்று இருந்த வேளையிலும் கடமையாற்றினார் கிரேஸ் அவருக்கு வேண்டிய நேரங்களில் அலுவலகத்தலே மருந்துகள் கொடுத்ததை இப்போதைய பதிவாளர் திருமதி N.தங்கராசா மகிழ்ந்து கூறினார்.

அவரது துணைவேந்தர் காலம் பற்றி அவர் காலத்தில் வாழ்ந்த மூத்த உயர்நீதிமன்றத்தின் நீதியரசர் ஒருவர் கூறியதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். நீதியரசர் கலாநிதி H.W.தம்பையா பின்வருமாறு கூறுகிறார்:

'தமிழ்த்தாய்க்கே தன்னை அர்ப்பணித்துவிட்ட பெரியார் வித்தியானந்தன் மிகச் சிறந்த தமிழ் அறிஞர்' ஒரு நிர்வாகி என்ற முறையில், அவர் யாழ். பல்கலைக்கழகத்தை உன்னத நிலைக்கு உயர்த்தியுள்ளார். அரசியல், கலாசாரம் என்பன பற்றி வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்கள் பணிபுரிகின்ற பல்கலைக்கழகமொன்றை வெற்றிகரமாக நிர்வகிப்பதற்கு அவரின் புத்திசாதுர்யமும் அன்பு நடைமுறைகளும் தான் உதவியுள்ளன. அவரது செழுமையான முகம், திரட்சியான கண்கள், சாத்வீகமான ஆளுமை. ஆனால், ஒரு தமிழ் மன்னனின் தோற்றம், இவைகூட அவரது நிர்வாகத்துக்கு நேர்த்திதந்தன என்று நான் நம்புகிறேன் அவர் பட்டுடையுடன் பல்கலைக் கழகப் பட்டமளிப்புவிழாவுக்கு வரும் காட்சி, சோழ மன்னனின் ஊர்வலம் இப்படி இருந்திருக்குமோ என்று எண்ணி வியக்கவைக்கும்.

இன்றைய அரசியலில் வேண்டப்பட்டவராக இருந்திருப்பார்

வித்தி, இப்போது இருந்திருந்தால் அவருக்கு 80 வயதாக இருக்கும். இப்போதைய அரசியல் நிலையில் மிகவும் வேண்டப்பட்டவராக இருப்பார். பலதரப்பட்ட தமிழரை ஒன்று சேர்க்கக்கூடிய தலைவராக இருப்பார். தமிழ் முஸ்லிம்களை அவர் நேசித்த வகையும், அவர்களுடனான தொடர்பும் வேறு எந்தத் தமிழனுக்கும் இருந்தது இல்லை. பிறையன் பன் என்பது அவருக்கு வெறும் புனைபெயர் அல்ல. அது ஒரு சமூகத்துடன் பிணைத்த பெயராகும். அதேபோல் கிறிஸ்தவ தமிழ் அறிஞருடன நெருங்கிய தொடர்புவைத்திருந்தார்.

பிரதேச சிந்தனைகள் தலைதூக்கி நிற்கும் இந்தக் காலத்தில் அவருக்கு ஈழத்தின் எல்லாப் பிரதேசங்களிலும் உள்ள செல்வாக்குப் பெரும் உதவியாக இருந்திருக்கும்.

சரித்திரம் ஒரு நூதனமான நாடகாசிரியன்; உலகப் பெரியோர் பலரின் கடைசி நாள்கள் துன்பியல் நாடகமாக முடிவது அவர்கள் வாழ்க்கையின் நியதிபோல் தோன்றுகிறது. வித்தியின் கடைசி நாள்கள் அப்படிப்பட்டது. துணைவேந்தர் தேர்வு சம்பந்தமான பல்கலைக்கழக கவுன்ஸில் கூட்டம் நடக்க இருந்த காலையில் ஆயுதம் தாங்கிய நால்வர் அவர் வீட்டிற்குப் போயிருக்கிறார்கள. அவரை அவதூறாகப் பேசியிருக்கிறார்கள். அவரது தலைமயிரை இழுத்து முன் மயிரில் ஒரு கற்றையை வெட்டியிருக்கிறார்கள். அவரது இடது கன்னத்தில் அறைந்திருக்கிறார்கள். ஒருவர் தான் கட்டியிருந்த வார்ப்பட்டடையை அவிழ்த்து, சுழற்றி, அவரை அடிக்கப்போன வேளையில் அவரின் இரு மகன்மாரும் மன்றாடி அழுதிருக்கிறார்கள். அடிக்காமல் போய்விட்டார்கள். இது அவர் எனக்குக் கொழும்பில் கூறிய தகவல்கள். அப்போதும் கண் கலங்கினார். அவரைத் துன்புறுத்தியவர்கள் அவரிடம்

அமரர் பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன்

போவதற்கு முன் என்னிடம் வந்தார்கள். 'நீரும் வித்தியானந்தனும் சேர்ந்து தமிழ் அரசுக் கட்சியைப் பழையபடி கொண்டு வரப்பார்க்கிறீர்கள். இன்று கவுன்ஸிலுக்குப் போகப்படாது' என்று எச்சரித்தார்கள். என்னுடன் 'சேர்' போட்டுப் பண்பாகப் பேசினார்கள். ஆனால், வித்திக்கு ஏன் இப்படிச் செய்தார்கள் என்று தெரியவில்லை. அது இதுவரை மர்மமாகவே இருக்கின்றது. அதனால் வித்தியினுடைய பெருமை எவ்விதத்திலும் இம்மியும் குறையவில்லை. அவருடைய சரித்திரம் எழுதும்போது அந்த நிகழ்வு மகுடமாக இருக்கும். இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கடவுளின் மகனுக்கு தலையில் முள்வைத்தார்கள், முகத்தில் துப்பினார்கள், கோலால் தலையில் அடித்தார்கள், உடுப்பை உரிந்தார்கள், ஏளனம்செய்தவாறு சிலுவையில் அறைந் தார்கள். பிட்டுக்கு மண்சுமக்க வந்த கூலியும் அரசனால் சவுக்கால் அடிபட்டான் அங்கே அடிவாங்கிய இருவரும் கடவுள், வித்தி வெறும் மனிதன்தானே.

அந்த நிகழ்வுக்குப் பின் வித்தி யாழ். பல்கலைக்கழகத்திற்கு வரவில்லை. அதன்பின் யாழ். பலகலைகழக நிர்வாகம் அவருடன் நடந்து கொண்ட முறைகள் வெட்கக்கேடானவை. அவற்றை இங்கே கூறுவதாலல் மேலும் அரைமணி நேரம் வேண்டும். தேவையும் இல்லை. அவரது பூதவுடலை பல்கலைக்கழகத்தில் வைத்து அஞ்சலி செய்வதற்கு அவரது பிள்ளைகள் அனுமதிக்கவில்லை. அவர்களுக்கு ஒரு தன்மானம் உண்டு.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவாக ஓர் அறக்கட்டளை அறிவுமிக்கப் பெரியோர்களால் அங்குரார்ப்பணம் செய்யப்படுகின்றது. அதன் செயற்பாடுகள் வித்தியின் பெயரை இளைய தலைமுறையினருக்கு ஞாபகம் செய்துகொண்டே இருக்கும். இதேவேளையில் சென்ற ஜனவரி மாதம் கா.சிவத்தம்பியின் தலைமையில் ஓர் அறக்கட்டளை பேராசிரியர் வி.செல்வநாயகம் நினைவாகக் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. இரண்டும் மிகவும் பொருத்தமான நிகழ்வுகள்.

பேராசிரியர் வாழ்வு அன்பும், பணபும், சால்பும், கல்வித் தொடர்பும், கலைத்தேடலும், தமிழிலக்கியச் சிந்தனையும் கொண்ட சரித்திரம். அந்த வாழ்வு ஒரு தரமான சரிதமாக வெளிவரவேண்டும். வெறும் கட்டுரைத் தொகுப்புகளாகச் சொன்னதைத் திருப்பிச் சொல்வதாக இராமல் பல தகவல்களையும் சேகரித்து ஒருவரால் எழுதப்படவேணடும்.

வித்தியானந்தன் நூலகத்தின் முன் நிலில் அவரின் சிலை இருக்கவேணடும். அல்லாவிடின் நூலகத்திற்கு உள்ளே அவரது நெஞ்சளவு சிலை இருக்கவேண்டும். யாழ். பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரை பொன்னம்பலம் இராமநாதனுக்கு அடுத்தாக நினைவுகூர வேண்டிய பெருமகன் அவர்தான். இதனை இந்த அறக்கட்டளை நிர்வாகிகள் பல்கலைக் கழக நிர்வாகத்துடன் சேர்ந்து நிறைவாக்க வேண்டும்.

ஈழத்தின் தமிழ் உலகையும் கலை அரங்கையும் பொறுத்தவரை இந்த அறக்கட்டளை ஒரு வரப்பிரசாதம்; ஒரு மைல்கல் அதற்கு எனது வாழ்த்துக்கள்!

இந்தச் சொற்பொழிவை ஒரு கவிதையுடன் நிறைவுசெய்ய விரும்புகிறேன். முஸ்லிம் கவிஞர் கவிமணி MCM.ஸுபைர் எழுதிய கவிதை.

அழகுத் தமிழின் காவலராம்
அன்பு ததும்பும் நாவலராம்
பழகப் பழகப் பயன் நல்கும்
பண்பிற் கனிந்த மேலவராம்
பழமை புதுமை இரண்டிற்கும்
பாலமாகத் திகழ்பவராம்

இளைஞர், முதியோர் எல்லோருக்கும் இனியர் சு.வித்தியானந்தன்.

(முற்றும்)

இரண்டு நிபந்தனைகளுடன் அரசுக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கும்

பேச்சு நடத்த அதியுயர் பீடக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு,மே13

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களும் ஒரு தனித்தரப்பாகக் கலந்து கொள்வதை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு உறுதிப்படுத்துமாயின் அரசுக்கு ஆதரவு வழங்கத் தயார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்ற கட்சியின் அரசியல் அதியுயர்பீடக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் அவரது இல்லத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். இரவு ஒன்பது மணிக்கு ஆரம்பமாகிய கூட்டம் மறுநாள் அதிகாலை இரண்டு மணிவரை நீடித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மாத்திரமே சமாதானப் பேச்சுக்கள் நடத்தப்படும் என சுதந்திரக் கூட்டமைப்பு அரசு அறிவித்ததையடுத்து முகா.அரசியல் அதியுயர் பீடம் அவசர அவசரமாகக் கூடி மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளது.

தனித்தரப்பு அங்கீகாரத்தையும் உத்தரவாதத்தையும் அரசு வழங்குவதுடன் நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றும் திட்டத்தையும் கைவிட முன்வர வேண்டும் என்ற நிபந்தனைகளை ஜனாதிபதியும் அரசும் ஏற்றுக்கொண்டால் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவது குறித்து பேச்சு நடத்துவதென கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பாக முகா.செயலாளர நாயகம் எம்.ரி.ஹஸனலி எம்.பி.மேலும தகவல் தருகையில்:-

மேற்படி இரு நிபந்தனைகளையும் அரசு ஏற்றுக்கொண்டால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்து ஆதரவு வழங்குவதா அல்லது எதிர்த்தரப்பில் இருந்துகொண்டு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவதா என்பது பற்றி ஜனாதிபதியுடனான பேச்சுக்களை அடுத்து முடிவு செய்யப்படும்.

இப்போதைய நிலையில் எதிர்த்தரப்பு சார்பில் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்கு முகா.பிரதிநிதியின் பெயரே சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. எதிரும் 18ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதியுடனான பேச்சுக்கள் வெற்றியளிக்குமாயின் நிலைமை தலைகீழாக மாறிவிடலாம். அரசுடன் நேரடியாக இணைவதன் மூலமே ஜனாதிபதி தருகின்ற உத்தரவாதங்களைப் பூரணமாக நடைமுறைப்படுத்த ஏதுவாக இருக்கும் என ஆலோசிக்கப்படுகிறது - என்றார்.

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள்

வேலையற்ற பட்டதாரிகளுக்கு பொதுத்துறையில் வேலைவாய்ப்பு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் நல்லூர் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் தொடக்கம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

விண்ணப்பத்துடன் பட்டச்சான்றிதழின் பிரதி இணைக்கப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்கான சிட்டைகளும் நல்லூர் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன. விண்ணப்பங்கள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச செயலகங்களில் கையளிக்கப்பட வேண்டும்.(ஐ-9-139)

மீளக்குடியமர்த்தக் கோரி புலிகளுக்குக் கடிதம்

வவுனியா, கோதண்ட நொச்சிக்குளம் பகுதியில் இருந்து இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளினை முன்னெடுக்குமாறு அப்பகுதி மக்கள் வவுனியா மாவட்ட அரசியற்துறையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேலிடம் அப்பகுதி மக்களால் கையளிக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கோதண்ட நொச்சிக்குளம் பகுதியில் நாங்கள் நீண்டகாலமாக இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகிறோம். இதன காரணமாக நாங்களும் எமது பிள்ளைகளும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்து வருகிறோம். எமது நன்மை கருதி அரச அதிகாரிகளும், விடுதலைப் புலிகளும் எம்மை மீளக குடியமர்த்த நடவடிக்கை எடுக்கவேணடும். அத்துடன் இது தொடர்பில் தமிழ நாடாளுமன்ற உறுப்பினர்களும் கரிசனை கொள்ளவேண்டும். எமது கிராமத்தில் மீளக்குடியமர்த்துவதில் நடைமுறைச் சிக்கல் எதிர்நோக்கப்படுமாயின எமது அயல்கிராமமான தரணிககுளம பகுதியில் எம்மை மீளக்குடியமர்த்தலாம். இப்படி அதிலுள்ளது.(ஐ-9-164)

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY

சண்டிலிப்பாய் மேற்கைச் சேர்ந்த
இந்திரகாந்தன் - ரமணி
தம்பதிகளின் அருந்தவப் புதல்வி
செல்வி

ரட்சாயினி

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (13.05.2004) வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அண்ணன்மாரான கவிகரன், கீர்த்திகன், பகிர்தன் மற்றும் அம்மம்மா, அப்பாச்சி, அன்ரா, சித்தப்பா, பெரியப்பா, பெரியம்மா, மாமா, மாமி அனைவரும் சகல கலைகளும் கற்று நீடூழி காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய். (31894) (26-11-21)

அப்பா, அம்மா
அண்ணாமார்.

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்...!
11.05.2004 முதல் 17.05.2004 வரை
முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!
✪ சக்தி குறைவு ✪ ஞாபகமறதி ✪ பயம்
✪ ஆளுமைக்குறைவு ✪ நடுக்கம் ✪ நித்திரை குறைவு
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலையை விடுங்கள் ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீங்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குன்றவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியததாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்று பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.
குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.
தொடர்புகளுக்கு:
பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி, 392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)
(சி-34727) (21-14-16)

காரைநகரில்

இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் பொதுமக்கள் அக்கறை காட்டவேண்டும்

காரைநகர்,மே13

காரைநகர் பிரதேசத்தில் உள்ள இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் இப்பகுதி மக்கள் அதிக அக்கறையுடன் செயற்படவேண்டும் என காரைநகர் பிரதேசசூழல் பாதுகாப்பு அமைப்பு கோரிக்கை விடுத்துளளது.

கடந்த காலங்களில் காரைநகர் பிரதேசத்தில் பெருந்தொகையான பனைமரங்களும் மா,வேம்பு போன்ற பயன்தருமரங்களும் வகை தொகையின்றித் தறிக்கப்பட்டுச் சட்டவிரோதமாகப் பிற இடங்களுக்குக் கடத்தப்பட்டுள்ளதுடன், கடற்கரைப் பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் மண் அகழ்தலும் இடம்பெற்றுவந்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளைத் தடுத்துக் காரைநகர்ப் பகுதியில் உள்ள இயற்கை வளங்களைப் பேணிப்பாதுகாப்பதில் காரைநகர் பிரதேச சூழல்பாதுகாப்பு அமைப்புத் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றது. இந்த வளங்கள் அழிந்துபோகாமல் பாதுகாப்பதற்குக் காரைநகர் பிரதேசத்தைச் சார்ந்த மக்களையும் ஏனைய பிரதேச மக்களையும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் இந்த அமைப்புக் கேட்டுள்ளது. (10-73)

15 ஆம் ஆண்டு நினைவுநாள்

பிறப்பு 08 - 10 - 1951

இறப்பு 13 - 05 - 1989

அமரர் இராசரத்தினம் தவநேசன்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் சிகரமாய்
வாழ்ந்த எம் தெய்வமே!
ஆண்டுகள் ஈரேழு
மாதங்கள் பன்னிரண்டு
ஓடி மறைந்ததையா உன்
நினைவு மட்டும் கண் எதிரே
ஓடுதையா.

சூராவத்தை,
சுன்னாகம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(31911)(34-21-11-26)

கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 1947 - 08 - 05

மறைவு 2004 - 05 - 09

சின்னத்தம்பி கணபதி சிவனடியான்
(கிராம உத்தியோகத்தர் யா/39, எழுவைதீவு)

அகவை 45இல் கிராம உத்தியோகத்தர் சேவையில் இணைந்து சேவையாற்றிய சி.க. சிவனடியான் காட்சிக்கு எளியனாய் பழகுவதற்கு பண்பாளனாய் இருந்து, கிராம உத்தியோகத்தர் சமூகத்தையும் குடும்பத்தவர்களையும் சோகத்தில் ஆழ்த்தி இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இல.68,பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண மாவட்ட
கிராம உத்தியோகத்தர் சங்கம்.

(31910)(42)

கூரை அமைப்பில் புதிய அலை
அன்டன் சுபர் ஷெல்டா
குடிமிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்தவை

அன்டன் சுபர் ஷெல்டா
- 2.5 மிமி. கனம் கொண்டது
- வேறு எந்தக் கூரைத் தகடுகளையும்விட மலிவானது
- குறைந்த வெப்பம்
- மழை நேரங்களில் குறைந்த இரைச்சல்.
- துரு பிடிக்காதது
- சுகாதார இடையறு அற்றது
- 20 வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடியது
- நிறம் மாறாதது

நீடித்த பாவனைக்குப் பொருத்தும் வழிகாட்டியின்படி பொருத்துங்கள் இதனை விற்பனையாளரிடம் பெற்றுக்கொள்ள மறவாதீர்கள்.

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
சென்ற் அந்தனீஸ் ரூப்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 2324261-5, 2337283-5 ஃபெக்ஸ்: 2446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics

நல்லூர் றோட்டறக்ட் கழகம் யாழ். மாவட்ட றோட்டறக்ட் கழகங்களிடையே நடத்திய கிரிக்கெட் போட்டியில் இவ்வருட சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்ட சுன்னாகம் றோட்டறக்ட் கழக வீரர்கள் வெற்றிக்கிண்ணத்துடன் அமர்ந்திருப்பதனைப் படத்தில் காணலாம். (ஐ-5)

ஒற்றையர் மேசைப் பந்தாட்டத்தில் யாழ்.மாவட்ட அணிகள் சம்பியன்

யாழ்ப்பாணம்,மே13

வடக்குக்கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்டங்களுக்கிடையே நடத்திய மேசைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். மாவட்ட ஆண், பெண் ஆகிய இரு பிரிவுகளும் வெற்றிபீடி இவ்வருட மாகாண சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் யாழ்.வை.எம்.சி.ஏ. மண்டப ஆடுகளத்தில் இடம்பெற்றன.

முதலில் நடைபெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தின் இறுதிப் போட்டியில் யாழ்.மாவட்ட அணிவீரரும் - திருமலை மாவட்ட அணி வீரரும் மோதினர்.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்மாவட்ட அணி 3-0 என்ற 'செற்'கணக்கில் வென்று இவ்வருட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

அடுத்து நடைபெற்ற பெண்களுக்கான ஒற்றையர் இறுதியாட்டத்தில் திருமலை மாவட்டஅணியும் - யாழ். மாவட்டஅணியும் மோதின. இதில் யாழ்.மாவட்ட அணி 5-1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

இப்போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரையும் சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே.டபிள்யு.விமலராஜன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(ஐ-5-190)

யாழ். மகளிர் உதைபந்தாட்ட அணித் தெரிவுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே13

யாழ்.மாவட்டத்திற்கான மகளிர் உதைபந்தாட்ட அணி ஒன்று விரைவில உருவாக்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் மாவட்டங்களுக்கிடையிலான விளையாட்டு விழா எதிர்வரும் ஜுலை மாதம் முதல் நடைபெறவுள்ளது. இப் போட்டியில் மகளிருக்கான உதைபந்தாட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள யாழ்.மாவட்டம் உட்பட எட்டு மாவட்டங்களும் இந்த மகளிருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் பங்கு பற்றவுள்ளன. அப்போட்டிக்குத் தயார் படுத்தும் வகையில் யாழ்.மாவட்டத்திற்கான மகளிர் உதைபந்தாட்ட அணி உருவாக்கப்படவுள்ளது.

இந்த அணியில் இடம்பெற்று விளையாடவுள்ள ஆர்வமுள்ளோருக்கான பயிற்சிகள் கடந்த திங்கட்கிழமை முதல் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறுகின்றன. (ஐ-5)

மெய்வன்மை வீரர்கள் இன்று பயணம்

யாழ்ப்பாணம்,மே13

அகில இலங்கை கனிஷ்ட நிலை தேசிய மெய்வன்னைப் போட்டிகள் நாளை 'வெள்ளிக்கிழமை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்றும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 20 கனிஷ்ட மெய்வன்மை வீர வீராங்கனைகள் இன்று வியாழக்கிழமை கொழும்பு செல்லவுள்ளனர். இதற்கான ஒழுங்கினை யாழ்மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணமட்ட வேகநடை மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ளது. (ஐ-5-190)

பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே13

யாழ்மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி காலை 10மணிக்கு ஈச்சமோட்டை வீதியில் அமைந்துள்ள சங்கப் பணிமனையில் தலைவர் கப்டன் டி.ஏ.எம். குணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சகல மத்தியஸ்தர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் இ.ஆனல்ட் கேட்டுள்ளார். (8-5-190)

கரப்பந்தாட்ட இறுதியாட்டம்

யாழ்ப்பாணம்,மே13

யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கம் வடமாகாண ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை வெள்ளிக்கிழமை இரவு 7மணிக்கு சங்க மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளன.

இன்றைய ஆட்டங்களில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு:-

அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க எதிர் ஆவரங்கால் மத்திய வி.க.

ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க எதிர் ஆவரங்கால் தோப்பு வாலிபர் வி.க.

(5-190)

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற 16 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில், இவ்வருட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நாவாந்துறை றோ.க.பாடசாலை அணியினரைப் படத்தில் காணலாம். (படம்:குருநகர்ச் செய்தியாளர்)

வசாவிளான் ம.ம.வி, உடுவில் மான்ஸ் பூப்பந்தாட்டப் போட்டியில் சம்பியன்

யாழ்ப்பாணம்,மே13

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பூப்பந்தாட்டப் போட்டியின் ஆண்கள் பிரிவில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயமும், பெண்கள் பிரிவில் உடுவில் மான்ஸ் வித்தியாலயமும் வெற்றி பெற்று இவ்வாண்டிற்கான வலயச் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

இப்போட்டிகளின் இறுதியாட்டங்கள் அண்மையில் நடைபெற்றன.

வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அணிக்கும், உடுவில் மான்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆண்களுக்கிடையிலான ஆட்டத்தில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி இவ்வருட சம்பியனாகியது. இதில் மூன்றாமிடத்தை கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி பெற்றது.

பெண்களுக்கான போட்டியில் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயமும், சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியும் மோதின. இதில் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம் சம்பியனாகியது. மூன்றாமிடத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பெற்றுக் கொண்டது.

(8-5-152)

படுகொலை செய்யப்பட்ட

31மீனவர்களின் நினைவாக உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,மே13

1986ஆம் ஆண்டு மண்டைதீவுக் கடலில் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களின ஞாபகார்த்தமாக குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'தூயஒளி' வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 20ஆம் திகதிமுதல் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெறவுள்ள விளையாட்டுக் கழகத்துக்கு பத்தாயிரம் ரூபா ரொக்கப்பணமாக வழங்கப்படவுள்ளது. அதுதுடன் 'தூய ஒளி' சுற்றுக்கிண்ணமும் வழங்கப்படும். இரண்டாம் இடத்தைப்பெறும் கழகத்துக்கு ஐயாயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

இந்த உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்.லீக், வடமராட்சி லீக், வலிகாமம் லீக்கில் இணைந்துள்ள கழகங்கள் கலந்துகொள்ள முடியும்.

இப்போட்டியில் பங்கேற்கவுள்ள விளையாட்டுக் கழகங்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அ.பெனடிக்ற், இல.16, ஐஸ் பிளான்ட் வீதி, குருநகர் என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(8-5-51)

விளையாட்டு

ஹுசேனை நீக்க பொத்தம் கோரிக்கை

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்துவிளையாடிவருகிறது. இதன் டெஸ்ட் தொடருக்கான இங்கிலாந்து அணி அடுத்த வாரம் அறிவிக்கப்படுகிறது. முன்னாள் கப்டன் நாசர் ஹுசேனை அணியில் இருந்து நீக்க வேண்டும் என்று இங்கிலாந்து முன்னாள் வீரர் இயன் பொத்தம் கூறியுள்ளார்.

இது தொடர்பாக பொத்தம் கூறும்போது நாசர் ஹுசேனுக்கு 36 வயதாகிறது. அவர் அணிக்கு தற்போது தேவையில்லை. அவருக்கு பதிலாக மத்திய வரிசையில் இளம் வீரரை தேர்வு செய்வது நல்லது என்றார். நாசர் ஹுசேன் 95 டெஸ்டில் விளையாடி இருக்கிறார். நாசர் ஹுசேன் கப்டனாக இருந்த காலத்தில் அவருக்கும் பொத்தமுக்கும் இடையே கருத்து வேறுபாடு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (8-5)

ஆசியாவில் கிரிக்கெட் மேம்பாட்டுக்கு 225 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

லாகூர்,மே13

அடுத்த 3ஆண்டுகளில் ஆசியாவில் கிரிக்கெட் மேம்பாட்டுக்கு 225 கோடி ரூபா செலவு செய்யப்படும் எனச் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் தலைவர் ஈசான் மணி தெரிவித்துள்ளார்.

லாகூரில் சனிக்கிழமை நடைபெற்ற ஆசிய கிரிக்கெட் கவுன்ஸில் மேம்பாடுக் கருத்தரங்கில் இத்தகவலை அவர் தெரிவித்தார்.

மேலும் கூறியதாவது:

உலகம் முழுவதும் கிரிக்கெட்டை விளையாட வைக்கவும், விளையாடும் நாடுகளின் கிரிக்கெட் தரத்தை மேம்படுத்தவும் 2000 முதல் 2007 வரையிலான காலகட்டங்களில் 450கோடி ரூபாவுக்கு மேலாக ஐசிசி ஒதுக்கீடு செய்துள்ளது. அதில் பாதியளவுத் தொகை ஆசியாவில் கிரிக்கெட் மேம்பாட்டுக்கு செலவழிக்கப்படும்.

கிரிக்கெட் பரவலாக வளர்ச்சியடைந்து வருகிறது. என்றாலும், உலகம் முழுவதும் இவ்விளையாட்டைப் பரப்புவதிலும், தரத்திலும் பின்தங்கியுளளோம். முக்கியமாக, விளையாடும் நாடுகளிடையே போட்டி கடுமையாக இருக்கவேண்டும்.

இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே சமீபத்தில் முடிவுற்ற தொடர் ஆசியக் கண்டத்தில் கிரிக்கெட்டின் வலிமையை எடுத்துக்காட்டியுள்ளது.

கடந்த 52 ஆண்டுகளில் பாகிஸ்தான், இலங்கை, சிம்பாப்வே மற்றும் வங்கதேச நாடுகள் மட்டுமே டெஸ்ட் அந்தஸ்தைப் பெற்றுள்ளன. ஆனால், இந்த வளர்ச்சி போதாது.

அடுத்ததாக, கென்யா 11ஆவது நாடாக டெஸ்ட் அந்தஸ்தைப்பெற உள்ளது. அது குறித்து 2005இல் தான் முடிவுசெய்யப்படும். மேலும் பல நாடுகளை கிரிக்கெட் உலகில் இணைப்பதற்கு ஐசிசி ஆவலாக உள்ளது.

கனடா, ஹாலந்து, கென்யா மற்றும் நமீபியா ஆகிய நாடுகளின் திறனை ஆராய்வதற்கு கடந்த உலகக் கிண்ணப் போட்டி வாய்ப்பளித்தது. ஐசிசி திட்டத்தின்படி அடுத்த உலகக் கிண்ணப் போட்டியில் 16 நாடுகள் விளையாட வழிவகை செய்ய வேண்டும் என்று அது செயல்படுகிறது.

இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கண்டங்களுக்கு இடையிலான போட்டியானது, கிரிக்கெட் விளையாடும் 12 சங்கங்களின் நாடுகளுக்கு இடையிலான திறனை மேம்படுத்த உதவும் - என்றார் மணி. (5)

2010 உலக உதைபந்தாட்ட போட்டி நடத்தும் வாய்ப்பை எமக்கு பரிசாகத் தாருங்கள்

மண்டேலா கோரிக்கை

டர்பன்,மே13

2010 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள உலகக்கோப்பை உதைபந்தாட்டப்போட்டியை நடத்தும் வாய்ப்பை தென் ஆபிரிக்காவுக்குப் பரிசாக வழங்க வேண்டும் என்று அந்நாட்டின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா உலக நாடுகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

தென் ஆபிரிக்காவில் ஜனநாயகம தழைத்தோங்கி 10 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இதற்கான பரிசாக உலகக்கோப்பை உதைபந்தாட்டப் போட்டியை நடத்தும் உரிமையை பரிசாக வழங்கவேண்டும் - என்றார் அவர்.

தென் ஆபிரிக்காவின் ஜோகன்னஸ்பர்கில் திங்கட்கிழமை இரவு நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசியபோது மண்டேலா மேலும் கூறியதாவது:-

கடந்த 10 ஆண்டுகளில் விளையாட்டு உடபட உலகின் மிகப்பெரிய நிகழ்ச்சிகள் பலவற்றை தென்ஆபிரிக்கா அரங்கேற்றியுள்ளது.

இந்நிலையில் உலகக்கோப்பை உதைபந்தாட்டப்போட்டியை நடத்தவும் தயாராக உள்ளோம். சர்வதேச உதைபந்தாட்டச் சங்கங்கள் கூட்டமைபின் (FIFA) அனுமதியை மட்டும் எதிர்பார்க்கின்றோம். அனுமதி கிடைததவுடன் செயலில் தீவிரமாக இறங்கிவிடுமோம் - என்றார்.

எதிர்வரும் சனிக்கிழமை சுவிட்ஸர்லாந்தின் சூரிச்சில் 24 உறுப்பினர் கொண்ட உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் உறுப்பினர்களைக் கொண்ட குழு கூடவுள்ளது. அப்போது 2010 உலகக்கோப்பை உதைபந்தாட்டப் போட்டியை நடத்தும் உரிமையை எந்த நாட்டுக்கு வழங்குவது என்பது குறித்து முடிவு செய்வர்.

இதை ஒட்டி 18 பேர் கொண்ட தென்ஆபிரிக்க உயர்நிலைக் குழுவில் ஒருவராக உள்ள மண்டேலாவும சூரிச் செல்கின்றார். அப்போது தனது நாட்டுக்கு உலகக்கோப்பை உதைபந்தாட்டப்போட்டி நடத்தும் உரிமையைப் பெற தனது கடைசி முயற்சியை மேற்கொள்வார்.

2006 இல் உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டியை நடத்தும் வாய்ப்பை ஒரு வாக்கு வித்தியாசத்தில் ஜேர்மனியிடம் இழந்தது தென்ஆபிரிக்கா.

இம்முறை எமது நாட்டுக்கு போட்டியை நடத்தும் உரிமையை மறுப்பதற்கு வாய்ப்பே இல்லை. எமது நாட்டில் சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்துவதற்கான அனைத்து வசதிகளும், சர்வதேச தரம் வாய்ந்த மைதானங்களும் உள்ளன என்று தென் ஆபிரிக்காவில் உலகக்கோப்பை உதைபந்தாட்டப் போட்டி கமிட்டியின் தலைமை நிர்வாகி டேனி ஜோர்டான் கூறினார்.

2010 [illegible]லகக் கோப்பை உதைபந்தாட[illegible]டியை நடத்துவதற்கு மொராக்[illegible]ந்து மற்றும் லிபியா போன்ற ஆபிரிக்க நாடுகளும் விண்ணப்பித்துள்ளன. துனிசியா கடந்த வார்ம் தனது விண்ணப்பத்தை திருப்பிப் பெற்றுக்கொண்டது. (8-5)

ஸிம்பாவே தொடரில் மெக்ராத் ஆடுவார்

ஆஸ்திரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத் காயம் காரணமாக கடந்த சில மாதங்களாக எந்தப் போட்டியிலும் விளையாடவில்லை. இந்தியா, இலங்கை தொடர் மற்றும் இரண்டு, மூன்று நாடுகளின் போட்டி ஆகியவற்றில் அவர் விளையாடவில்லை.

இந்நிலையில் ஸிம்பாவே தொடரில் மெக்ராத் விளையாட அதிக வாய்ப்பு உள்ளது. முழு உடல் தகுதியுடனும் அவர் இருப்பதால் அணியில் இடம்பெறுகிறார். ஆஸ்திரேலிய அணி ஸிம்பாபேயில் சுற்றுப்பயணம் செய்து 2டெஸ்ட் மற்றும் 3ஒருநாள் போட்டியில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் எதிர்வரும் 22-26 ஆம் திகதி வரை ஹராரேயிலும் 2ஆவது டெஸ்ட் எதிர்வரும் 29 ஜுன் 2 ஆம் திகதி வரை புலவாயோவிலும் நடக்கிறது. ஒருநாள் போட்டிகள் ஜுன் 6,9 மற்றும் 12 ஆம் தேதிகளில் நடக்கிறது.

சின்னஞ்சிறு விளம்பரங்கள்

விற்பனைக்கு

நம்பர் 1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும், பிறீமா இன சிவப்பு, வெளளைப் பேட்டுக்குஞ்சுகளும் 14.05.2004 மாலை விநியோகிக்கப்படும். முன் கூடியே பதிவுசெய்துகொளளவும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச சந்தி. T.P.: 2867, 3529, P.ரவி, தபாற கந்தோர் வீதி, சாவகச்சேரி.(31813)

டாக்டரின் சொந்தப் பாவனையில் இருந்த HK தொடர் இலக்கமுடைய சுசுக்கி (Suzuki 125) மோட்டர் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பரதன் மல்ரி, இல.110, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 5220. (31905)

மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1964இல் பிறந்த, 7இல் செவ்வாய் 60கிரக பாவமுள்ள, அரச உத்தியோகம் பார்க்கும் M.A. பட்டதாரியான மணமகளுக்குப் பொருத்தமான டாக்டர், பொறியியலாளர், கணக்காளர், ஆசிரியர், தனியார் நிறுவன உரிமையாளர் போன்ற தகுதி வாய்ந்த 40-43 வயதுள்ள மணமகன் தேவை. சாதகம் மற்றும் முழு விவரத்துடன் தொடர்புகொள்க. விளம்பர இல: 2262, மே/பா, உதயன். (31884)

வாடகைக்கு

இணுவில் புகையிரத நிலையத்திற்கு முன்பாக அமைதியான சூழலில் இரண்டு அறைகளுடன் கூடிய 'அனெக்ஸ்' வாடகைக்கு உண்டு. தொடர்பு: 0712 738755, 0777 759619. (சி-34944)

வீடு வாடகைக்குத் தேவை

இரண்டு பேர் கொண்ட குடும்பத்தினருக்குத் திருநெல்வேலி, பலாலியை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு:
பா.வசந்தன்
ஆராதனா ஆடியோ. வீடியோ விஷன்
இல.05,நவீன சந்தை மேல்மாடி,
திருநெல்வேலி சந்தி,
திருநெல்வேலி.
T.P.0777~354450 (சி-34948)

வேலைக்கு ஆள் தேவை

விடியோ கடையில் வேலை செய்யத் தகுதி வாய்ந்த பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும்.
தொடர்புகளுக்கு:
பா.வசந்தன்
ஆராதனா ஆடியோ. வீடியோ விஷன்
இல.05,நவீன சந்தை மேல்மாடி,
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.
(சி-34949)

ஆஸ்பத்திரிக்கு குளிர்சாதனப் பெட்டி

தென்மராட்சி,மே13

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு குளிர்சாதனப்பெட்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த அமரர் திருமதி வீ.அபிராமிப்பிள்ளையின் நினைவாக அவரது மகள் இந்தக் குளிர்சாதனப்பெட்டியினை ஆஸபத்திரி பெறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகனிடம் வழங்கியுள்ளார். (ஐ-117)

ஞாபகார்த்த நிகழ்வும் நூல் வெளியீடும்

வடமராட்சி,மே13

அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் கலைஞானகேசரி கணபதிப்பிள்ளை பரஞ்சோதி ஞாபகார்த்த நிகழ்வும் 'கலையின் சுவடு' நூல் வெளியீட்டு விழாவும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நெல்லியடி முருகமூர்த்தி மண்டபத்தில் யாழ்பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி தகலாமணி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ் செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபர் வீ.வீரபத்திரபிள்ளை ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

இறுதியில் அரிச்சந்திரா நாடகமும் இடம்பெறும். (8-173)

AMT Transport Service

வேலை வெற்றிடங்கள்

எமது வவுனியாவிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்கு எரிபொருள் நிரப்புநராகக் (Pumper) கடமையாற்றக் கூடியவர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் இன்று கிராமசேவையாளரின் நற்சான்றிதழுடன் சமுகமளிக்கவும்.

தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
AMT TRANSPORT SERVICE
இருபாலைச் சந்தி,
கோப்பாய்.
தொ.பே.இலக்கம்: 021-222-5784.
(31918) (34-11-17-21)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 – 01 – 1979

உதிர்வு 13 – 05 – 2002

செல்வன் தேவராசா சாம்சன்

ஆழ் கடலிலும் மனித நேயத்தை நேசித்தவனே ~ ஆதலால்
கல்லறை வாழ்விற்கு வழிச்மைத்து
ஆண்டுகள் இரண்டு ஆனதடா;
விழிகள் தேடும் இடமெல்லாம் ~ உன்
பாச விம்பம் தெரியுதடா ~ உன்
பாதம் பட்ட மண்ணைக்கரண
மனம் ஏங்கித் தவிக்குதடா ~ எம்
நெஞ்சில் உன் நினைவை மட்டும் பதியப் போட்டு
சோகம் தனையே தேக்கி நிதமும்
தேம்பித் தேம்பித் தேடுகிறோம்
இம் மண்ணில் மீண்டும் வாராயோ?
உன் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

உன் நினைவில் வாழும்:
அப்பா, அம்மா, அத்தான்,
அக்கா, அண்ணாமார் மற்றும்
உரிமை உறவுகள்.

344/6,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (31913)(42)

சனசமூக நிலைய சமாச பொதுக்கூட்டம்

சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இயங்கும் சனசமூகநிலையங்களின் சமாச விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிறு காலை 10.00மணிக்கு தலைவர் க.இராசரத்தினம் தலைமையில் கொடிகாமத்தில் உள்ள மேற்படி சபையினரின பொது மண்டபத்தில் நடைபெறும்.

சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி, புனரமைப்பு சார்பான விடயங்கள் ஆராயப்படும் எனவும் ஒவ்வொரு சனசமூகநிலையத்தில் இருந்தும் தலா இரண்டு பிரதிநிதிகளைக் கலந்துகொள்ளுமாறு சமாசச் செயலாளர் செ.ஆனந்தரஞ்சன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (8-170)

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் திரு.சி.புஸ்பராசா அவர்களின் அன்புத் தந்தையார்

சுப்பிரமணியம் சின்னையா

அவர்கள் இறைபதமடைந்தமையினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கோப்பாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை, ஆசிரியர் கழகம்.
கோப்பாய். (31915)(21-19-32)

மரண அறிவித்தல்கள்

ஏகாம்பரம் ரமேஸ்

மலேஷியாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஏகாம்பரம் ரமேஸ் 11.05.2004 செவ்வாய்க்கிழமை மலேஷியாவில் அகாலமரணமானார்.

அன்னார் மலேஷியாவைச் சேர்ந்த ஏகாம்பரம் - தேவகி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் அரியாலையைச் சேர்ந்த நகுலேஸ்வரன் - கோகிலாராணி தம்பதிகளின் அன்பு மருமகனும் யக்ஷாவின் அன்புக் கணவரும் துஷாலினி, மிஷாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சுரேஸ், கௌரி ஆகியோரின் அருமைச் சகோதரனும் லண்டனில் வசிக்கும் மயூரனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-05-2004) வியாழக்கிழமை காலை 10மணியளவில் மலேஷியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29/5, புகையிரத நிலைய வீதி,
புங்கன்குளம், அரியாலை.
மலேஷியா.
T.P.: 60377824289.

தகவல்:
கைலாசபிள்ளை யோகம்மா
(பேர்த்தி)
(31912) (26-21-19)

சின்னையா வீரகத்தி

நாகர்கோயில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னையா வீரகத்தி (கந்தசாமி) 11-05-2004 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா மற்றும் சின்னி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் அருணாசலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் சின்னாச்சிப்பிள்ளையின் (இராசமணி) அன்புக் கணவரும் இராசசிங்கம் (நோர்வே), சிவானந்தராசா (லண்டன்), P.தங்கமணி (லண்டன்), உ. செல்வமலர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் P.பழனியாண்டி (லண்டன்), K.ஆறுமுகம் (லண்டன்), ஆர்.சோதிமலர் (நோர்வே), S.நிர்மலாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் அருணாசலம் கண்ணையாவின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-05-2004) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பருத்தித்துறை வல்லிபுரப் பரியாரியார் வீதியில் இருக்கும் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுப்பர்மடம், பருத்தித்துறை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லிபுரப் பரியாரியார் வீதி,
பருத்தித்துறை. (34950)(21-19-32)

தகவல்:
அ.கண்ணையா (மைத்துனர்)

காங்கேசன் சிமெந்து

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தால்

இந்தியா பிரில்லா குறூப் ஸ்தாபனத்தில் இருந்து தரமான சிமெந்து இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

மொத்த விலை ரூபா 410/=

தேவைப்படுவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்
வேம்பன் ஒழுங்கை,
உரும்பிராய்.
Tel: 222 2128.

C/34951(34)

நாட்டின் அபிவிருத்திக்கு எதிரணியின் ஆதரவை நாட அரசு முயற்சி

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு,மே13

எதிர்காலத்தில் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிர்க்கட்சியினரின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள முயற்சி எடுக்கப்படும் என்று புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற சபை முதல்வரும் ஆற்றுப்படுகை அபிவிருத்தி அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மக்கள் நன்மையை முன்வைத்து எடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு எதிர்கட்சியினர் ஆதரவளிப்பார்கள் என்று தாம் நம்புவதாக அமைச்சர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை எவ்வாறு நிலைநாட்டப் போகிறீர்கள் என்று கேட்கப்பட்ட போது இது அவ்வளவு பெரிய பிரச்சினை எதுவும இருக்காது என்று நினைக்கிறேன், சில பிரச்சினைகள் தோன்றினாலும் அவைகளைச் சமாளிப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றோம் என்றார்.

சபை முதல்வராக நியமிக்கப்பட்டதையடுத்து பதவி ஏற்றுக்கொண்ட மைத்திரிபால சிறிசேன நிருபர்களுடன் உரையாடினார். பதவிபேற்பு வைபவத்தில் பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அமெரிக்கர்கள் பிரதியமைச்சர்களும் கலந்துகொண்டனர்.

அரசாங்க நாடாளுமன்ற குழு 17 ஆம் திகதி கூடும் என்றும் பிரதி சபாநாயகர் தெரிவு தொடர்பாக அன்று தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினர்.

நாடாளுமன்ற அமர்வு நடைபெறாத நிலையில் சபை முதல்வரின் காரியாலயம் எவ்வாறு செயற்பட முடியும் என்று கேட்கப்பட்டபோது நாடாளுமன்ற நியமங்களுக்கு ஏற்பவே தமது நியமனம் இடம்பெற்றிருப்பதாகக் கூறிய அவர் அங்கீகரிக்கப்பட்ட நாடாளுமன்ற நியமங்கள் பாரம்பரியங்களுக்கு அமைவாகவே பிரதமர் தம்மை நியமித்திருக்கிறார் என்றும் கூறினார். (ப-8)

கும்பளை இலட்சுமணன் தோட்டத்திலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாமில் உள்ளோருக்கு, வெசாக் தினத்தை ஒட்டி பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தின் சார்பில் இன்ஸ்பெக்டர் நிரஞ்சன் உணவுப் பொருள்கள் வழங்குவதைக் காணலாம். *(படம்:வடமராட்சிச் செய்தியாளர்)*

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை

ஊர்காவற்றுறை,மே13

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகள் மற்றும் கீழ்ப் பிரிவு வகுப்புகளுக்கு முக்கிய பாடங்களைப் போதிப்பதற்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதால் மாணவர்கள் தமது பாடத்திட்டத்தினை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தீவகக் கல்வி வலய அதிகாரிகளுக்குப் பாடசாலை நிர்வாகத்தாலும் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினாலும் பல தடவைகள் சுட்டிக் காட்டப்பட்டபோதும் ஆசிரியர் பற்றாக்குறை இதுவரை தீர்க்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கலை மற்றும் வர்த்தக பிரிவுகளுக்குப் பொருளியல், அளவையியல் ஆகிய பாடங்களைப் போதிப்பதற்கும் கீழ்ப்பிரிவுகளில் தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் போதிப்பதற்கும் ஆசிரியர்கள் இன்மையால் தவணைப் பரீட்சைகளுக்கு முன்னர் குறித்த பாடத்திட்டங்களைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் தாங்கள் பரீட்சைக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர். (8-16)

வடலியடைப்பில் வீதி மதகு சேதமடைந்ததால் பாதிப்பு

வலி.தென்மேற்கு,மே13

வடலியடைப்பு, நல்லுணி வீதியிலுள்ள மதகு ஒன்று பலத்தசேதமடைந்துள்ளது. அந்த மதகின் பெரும் பகுதி உடைந்துள்ளதால் வாகனங்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலைக்கும் வடலியடைப்பு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்திற்கும் இவ் வீதி வழியாகவே போக்குவரத்து இடம் பெறுவதால் மாணவர்களும், பொது மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மதகை விரைவில் திருத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலி.தென்மேற்கு பிரதேச சபை செயலாளரை வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரி செல்வி' கநாகேஸ் வரி கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

இதேவேளை, இப்குதி மக்களும் இந்த மதகை விரைவில் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-135)

அடிக்கடி மின்தடையால் மக்களுக்கு அசௌகரியம்

யாழ்ப்பாணம்,மே13

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அடிக்கடி ஏற்படும் இந்த மின்தடையால் பலரும் பலவிதமான சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இரவுவேளைகளில் மட்டுமன்றிப் பகல்வேளைகளிலும் மின்தடை ஏற்படுவதால் தொழில்நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் அரச அலுவலகங்கள் என்பவற்றிலும் தொழில்கள் பாதிப்படைகின்றன. அதுதுடன் விசேட நிகழ்வுகள் மற்றும் விழாக்கள் என்பவற்றிலும் தடையேற்படுகிறது.

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை நடைபெற்று வருகின்ற தற்போதைய காலத்தில ஏற்படும் இந்த மின்சாரத் தடையினால் மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்று பெற்றோர்களும் கல்விச் சமூகத்தவர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.(ஐ-10)

ஒலிபெருக்கியின் ஒலி அளவு இடையூறுவிளைவிக்கக் கூடாது!

மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி

யாழ்ப்பாணம்,மே13

ஆலயங்களில் ஒலிபெருக்கியின் ஒலியை பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பாவிக்க முடியும்.

- இவ்வாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தின் விசாரணை அதிகாரி எஸ். சுரேந்திரன் தெரிவித்தார்.

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள மதம், நம்பிக்கை, பின்பற்றுவதற்கான சுதந்திரம் என்பன தொடர்பாக கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

மதம் நம்பிக்கை பின்பற்றுவதற்கான சுதந்திரம் . இருக்கின்றபோதும் அவற்றில் சில மனித உரிமைகள் மீறப்படும் சம்பவங்களும் உள்ளன.

ஆலயங்களில் ஒலிபெருக்கி மூலம் பல கிராமங்களுக்கு ஒலிச்சத்தம் கேடகக் கூடியவாறு ஒலிபரப்பி அதன்மூலம பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தால் அதுபற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகததில் சம்பந்தப்பட்டவர் முறையிடலாம்.

இதுதொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு ஆலயங்களில் ஒலிபெருக்கியின் ஒலிஅளவைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு உண்டு. குறிப்பிட்ட நேரத்திற்கு ஒலிபெருக்கியை ஆலயங்களில் பாவிப்பதற்கு பொலீஸார் அனுமதி வழங்கிவருகின்றனர்.

பொலீஸார் அனுமதி வழங்கிய நேரங்களில் மட்டும் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் பாவிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ஐ)

சமுர்த்தி வங்கிக் கூட்டங்கள்

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி வங்கி சங்கங்களின் மகா சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் மாதத்தின் முதலாவது திங்கட்கிழமைகளிலும - . சாவகச்சேரி சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் கட்டுப்பாட்டுச்சபையின் கூட்டம் மாதத்தின் மூன்றாவது செவாய்க்கிழமைகளிலும்.

நடைபெறுமென சமுர்த்தி வங்கிகளின் தலைமை முகாமையாளர் ஆ.ரகுநாதன் தெரிவித்தார். (ஐ-117)

படையினர் ஏற்பாடுசெய்த வெசாக் பண்டிகை நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,மே13

வெசாக் பண்டிகையை ஒட்டி படையினர் ஏற்பாடுசெய்த பல நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன.

இந்த வைபவங்கள் தொடர்பாக யாழ்.பாதுகாப்பு படைத்தலைமையகம் செய்தித் தொகுப்பு ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட வெசாக் கூடுகள் பலாலி இராணுவ முகாமில் காட்சிக்கு வைக்கப்பட்டன. உள்நாட்டு வளங்களினால் அமைக்கப்பட்ட வெசாக் கூடுகளின் தெரிவுப் போட்டிகளும் இடம்பெற்றன. யாழ்.மாவட்ட பிரதி இராணுவத்தளபதி தலைமையில் இடம்பெற்ற இந்தத் தெரிவுப் போட்டியில் முதல் ஏழு இடங்கள் தெரிவு செய்யப்பட்டன. கூடுகளை நிர்மாணித்தவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள 55 ஆவது சேனையகத்தின் கீழ் பணிபுரியும் இராணுவத்தினர் வெசாக் பண்டிகையை மிக விமரிசையாகக் கொண்டாடினர்கள். கடந்த 4ஆம் 5 ஆம் திகதிகளில் சேனையகம் அமைந்துள்ள பகுதியில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த நிகழ்வுகள பிரதேசத்தில் நிலை கொண்டுள்ள சேனையகம் மற்றும் படையணியின் அதிகாரிகள் மற்றும் படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரிகளினதும் தலைமையில் இடம்பெற்றன.

55 ஆவது சேனையகத்தினால் மிருசுவில் சந்தியில் 5 ஆம் திகதி அன்னதானமும், 4 ஆம் திகதி முதலாவது சிங்நெஜிமெண்ட் பிரிவினரால் முகமாலை சோதனை நிலையத்தில் குளிர்பானமும் தாகசாந்தியும், 4 ஆவது கஜபா படைப்பிரிவினர் எழுதுமட்டுவாள் பகுதியில் அன்னதானமும், 14 ஆவது கெமுனுப்படைப் பிரிவினர் எழுதுமட்டுவாள் பகுதியில் பலகாரம் மற்றும் பாற்சோறும், 14 ஆவது கெமுனு படைப்பிரிவு மற்றும் 14 ஆவது காலாட்படைப் பிரிவும் இணைந்து கிளாலி, கச்சாய் பகுதியில் வசிக்கும் மக்களிற்கு உணவுப் பார்சலும் வழங்கப்பட்டன.

இந்த தான தருமங்களுக்கும் மேலாக 55 ஆவது சேனையகத்தின் கட்டளையிடும் அதிகாரியின் ஆலோசனைக்கமைய உள்நாட்டு வளங்கள மூலம் வெசாக் அலங்காரக் கூடுகள் நிர்மாணிக்கப்பட்டு போட்டிகள் மிருசுவில் சந்தியில் நடத்தப்பட்டன. இங்கு வைக்கப்பட்டிருந்த வெசாக் அலங்காரக் கூடுகளை மக்கள் கண்டு களித்தார்கள். (ஐ-ரி)

கண்டியில் போதைவஸ்து வியாபாரிகள் கைது!

கண்டியின் பல்வேறு பகுதிகளிலும் ஹெரோயின் விற்பனை செய்த 17 பேரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களுள் ஒரு பெண்ணும் அடங்குவார். அவரிடமிருந்து 35 பக்கற் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

தபாலகத்துக்கு தொலைபேசி இல்லை

வலி.தென்மேற்கு,மே13

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்திற்கு தொலைபேசி இணைப்பு கோரி விண்ணப்பித்து ஐந்து மாத காலம் பூர்த்தியடைந்த போதிலும் இதுவரை தொலைபேசி இணைப்பு கிடைக்கவில்லை.

முதலாம் தரத்தில் உள்ளதும், ஏழு உபதபால் நிலையங்களைத் தன்னகத்தே கொண்டு இயங்கி வருவதுமான இத் தபால் அலுவலகத்திற்கு தொலைபேசி வழங்குவதற்கு தபால் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. அதற்கான கட்டணத்தையும் யாழ். 'ரெலிக்கொம்' நிறுவனத்திற்கு செலுத்தியுள்ளது. ஆனால் ஐந்து மாதங்களாகியும் இதுவரை தொலைபேசி இணைப்பு வழங்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தொலைபேசி பக்ஸ், தந்தி சேவைகளை மக்களுக்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.(ஐ-135)

வாசகர் திருமுகம்

இந்தியாவின் இரட்டைவேடத்தை அம்பலமாக்கும் பிரசாரம் தேவை

'உதயன்' பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில் 'பாரதத்தின் அளப்பு' எனும விடயத்தில் தூதர் நிருபம் சென்னுக்கு நல்ல சாட்டையடி கொடுத்துள்ளீர்கள். மகிழ்ச்சி! அதனைத் திரும்பத் திரும்ப மூன்று முறை வாசித்து மன உற்சாகம் அடைந்தேன்.

எமது மூதாதையர்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்றும் எனவே, எமது பூர்வீகத்தாய் நாடு பாரதமென்றும் நாம் அந்நாட்டைப் போற்றி வந்தவேளை பாரதம் எம்மை வஞ்சனையாலும் துரோகத்தனத்தாலும் நிந்திக்கிறது. சிங்கள அரசுக்குத் துணைபோய் எம்மை நசுக்க எண்ணுகிறது.

போரியல் ஆற்றலில் எம்மிடம் வாங்கிக் கட்டிக்கொண்ட பாரதம் ஊடகத்துறை விமர்சனங்களாலும் உளவியல் ரீதியாக வாங்கிக்கட்டிக் கொள்ளவேண்டும். எனவே, எமது தமிழ் ஊடகத்துறைகள் சளைக்காது பாரதத்தின் இரட்டைவேட நாடகத்தை உலகநாடுகள் யாவும் அறிந்து கொள்ளும் வண்ணம் விமர்சனங்களை விரைவாகப் பரப்புதல் வேண்டும்.

கொக்குவில் மேற்கு. **எஸ்.ஜே.சி**

தென்மராட்சியை புறக்கணிக்காதீர்!

கொடிகாமத்தில் வயோதிபப் பெண் ஊர்தியிலிருந்து விழுந்து மரணம என்ற உங்கள் செய்தியைப்படித்த ஆதங்கத்தில் எழுதுகிறேன். யாழ்ப்பாணத்துடனான தென்மராட்சி மக்களின் பிரதான பாதைப் போக்குவரத்தைக் குடாநாட்டுக்கு வெளியேயான போக்குவரத்துடன் இணைத்ததன் விளைவுதான் இது. ஈழப்போரின் அதிக கொடூரத்தை அலட்சியமாக, இயல்பாக விடுதலைப் போரில் இது சகஜம்தானே என்று தாங்கிக் கொண்டவர்கள் தென்மராட்சி மக்கள். இத்தனைக்கும் அவர்களில் பெரும்பாலோரது இருப்பு தம்மண்சார்ந்த கிராமியப் பொருளாதாரம்தான். அந்த மக்களை குடாநாட்டுக்குள்ளேயே மாற்றான்தாய் மனப்போக்குடன் நடத்துவதன் வெளிப்பாடுதான் போக்குவரவில் அவர்கள் அனுபவிக்கும் இன்றைய கொடுமை. தென்மராட்சி மக்கள் புறத்தியாக கணிக்கப்பெற்றது, பெறுவது போக்குவரவில் மட்டுமல்ல, மின்சாரம், தொலைத்தொடர்பு என்று அந்தப்பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இந்தப் பிரச்சினையை அதிகார மட்டத்தில் இருப்பவர்கள், குடாநாட்டுக்குள்ளேயே நிலவும் பிராந்திய வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று பார்த்தால் மட்டுமே உணர்ந்து கொள்ளமுடியும்.

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு தமிழனும் தமிழிச்சியும் தமிழினத்தின் உண்மை நிலைமையை சுயபரிசீலனை செய்து கொள்வது மிகவும் அவசியமானது. எமக்குள்ளான ஏற்றத்தாழ்வுகளை பகுத்தாய்ந்து, சமுதாய ரீதியில் அப்பிரச்சினைகளை அணுகுவது மிகவும் முக்கியமானது. இது காலத்தின் தேவை. விடுதலைக்கான எமது பாதையில், எமது இறுதிப் படிப்பினை இது. சமூக ரீதியிலான மாற்றாந்தாய் அணுகுமுறை எமது இனத்தின் இருப்பையே ஒருதரம் கேள்விக்கு உட்படுத்திற்று. நன்று, தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போய் முடிந்தது. இந்த சமூகப் புற்றுநோயை நாம் எப்போதுதான் தள்ளி வைக்கப்போகின்றோம். எம் இனத்தின் நேற்றைய கல்விமான்களும் இன்றைய கொள்கை வகுப்பாளர்களும் தமக்குள்ளே இந்தக்கேள்வியை எழுப்பிக்கொள்ளவேண்டும். இன்றைய கல்விமான்களாக வந்துகொண்டிருக்கும் தென்மராட்சியின் நாளைய கொள்கை வகுப்பாளர்களுக்காக இந்தப் பொ[illegible]த் தட்டிக் கழிக்காது இன்றே குறைகளைக்களைய முன்வருமாறு [illegible]ப்பட்டவர்கள் அனைவரையும் வேண்டி நிற்கின்றேன்.

மீசாலை வடக்கு, மீசாலை. **- அருள் கணேசலிங்கம்.**

எஸ்.ஆர்.கனகநாயகக்கின் நூறாவது அகவை நிறைவு விழா ஞாயிறன்று

யாழ்ப்பாணம்,மே13

யாழ்.சைவவித்தியா விருத்திச் சங்கத்தினர் ஏற்பாட்டில் அமரர் எஸ்.ஆர்.கனகநாயகத்தின் நூறாவது அகவை நிறைவுவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சைவ வித்தியா விருத்திச்சங்கத் தலைவர் அ.தற்பரானந்தன் தலைமையில் முத்துத்தம்பி மகா வித்தியாலய சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிறப்புரைகளை முன்னாள் அரசாங்க அதிபர் எஸ்.சிவஞானம், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சங்கத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ச.வைபரமேஸ்வரன் ஆகியோர்நிகழ்த்தவுள்ளனர்.

அமரரின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்படவுள்ளதுடன் சைவ வித்தியா விருத்திச்சங்க இல்லச் சிறார்களின் பண்ணிசையும் இடம் பெறவுள்ளது.

இதேவேளை,

அன்றைய தினம் காலை- 10 மணிக்கு கொழும்பு, பம்பலப்பிட்டி வஜிதா வீதிக்கு அருகில் உள்ள பழைய கதிர் வேலாயுதசுவாமி நகரத்தார் கோயிலில் ஸ்நபன அபிஷேகம் நடைபெறவுள்ளது. (10)

வவுனியாவில் ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,மே13

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடத்தும் 7 ஆம் ஆண்டு நிறைவு விழா, எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு வவுனியா, சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க நடராஜர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழறிஞர் அகளங்கன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேணாட கலந்துகொள்கின்றார். (9)

உ

இனுவில்

அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்

மகோற்சவ விஞ்ஞாபனம் - 2004

கொடியேற்றம்: இன்று (13.05.2004) வியாழக்கிழமை பகல் 12.00 மணி

கைலாசவாகனத் திருவிழா: 14.05.2004 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி

திருமஞ்சத் திருவிழா: 18.05.2004 செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணி

சப்பறத் திருவிழா: 21.05.2004 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி

தேர்த் திருவிழா: 22.05.2004 சனிக்கிழமை காலை 10.30 மணி

தீர்த்தத் திருவிழா: 23.05.2004 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி

பூங்காவனம்: 24.05.2004 திங்கட்கிழமை மாலை 6.30 மணி

அடியார்கள் வருக! ஐங்கரன் அருள் பெறுக!!

இணுவில். (சி-34958)(37-12-17) - விநாயக அடியார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
பட்டப்பின் படிப்புகள் பீடம்
பட்டப்பின் கல்வித் தகைமை [யாழ்ப்பாணம், வவுனியா வளாகம்]
கல்வியாண்டு 2002/2004
பகுதி நேரம் II: முதலாம் பருவத் தேர்வு

பரீட்சை அனுமதி அட்டை

18/05/2004 (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமாகும் மேற்படி பரீட்சைக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விண்ணப்பித்த மாணவர்கள், பீடாதிபதி அலுவலகம், உயர் பட்டப்படிப்புகள் பீடத்திலும், வவுனியா வளாகத்தில் விண்ணப்பித்த மாணவர்கள், வவுனியா வளாக வியாபார கற்கைகள் பீடத்திலும் தங்கள் அனுமதி அட்டை, நேரசூசி ஆகியவற்றை நாளை 14/5/2004 தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம். பதிவாளர்

12.05.2004 (C/34959)(40-12-17-37) யாழ்.பல்கலைக்கழகம்.

மாநகரசபை - யாழ்ப்பாணம்

கேள்வி அறிவித்தல்

மாநகரசபையால் நீர் வழங்கல் செய்வதற்கான கீழ்க்காணும் புதிய நீர் உந்தி இயந்திரம் ஒன்று, அதன் இணைப்பொருள்களுடன் தேவை. இதனை விநியோகம் செய்யும் தாபனங்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இக்கேள்விகள் யாவும் 26.05.2004 ஆம் திகதிக்குள் கீழ்க்காணும் விவரங்கள் அடங்கியதாக படிவம் தங்களால் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடதுபக்கம் "பீஓ/ 01 2004 நீர் உந்த" என எழுதப்பட்டு ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (வழங்கல் அங்கீகாரம் கிடைத்து 10 நாள்களில் மாநகரசபைக் களஞ்சியத்தில் பரிசீலிக்கப்பட்டு கையளித்தல் வேண்டும்).

Submersible Pump supply For Jaffna Municipal Council Pump Station

Submersible water pump with Motor with submersible cable with kit and necessary all fittings.

Make	-	Specify Make
Brand	-	Specify
Capacity	-	80M³/hr
Head	-	65M
Motor rating	-	22KW
No.of Stages	-	04
Outlet	-	04 Inches
Maximum dia	-	183MM
Voltage	-	400 V, 3ph, 50 Hz
Efficiency	-	77%

Rate include installation and commissioning state clearly guarantee period and spares needed For 2 years operation.

E.RAMALINGAM,
Municipal Commissioner,
Municipal Council,
Jaffna.

Municipal Council,
Jaffna.
12.05.2004 (சி-34955)(37-12-17)

நினைவுதின வைபவம்

லயஞான குகபரபூபதி உலகத் தவில்மேதை மறைந்த எஸ்.வி தெட்சணாமூர்த்தியின் 29 ஆவது ஆண்டு நினைவு நாள் இன்று வியாழக் கிழமை மாலை 5 மணிக்கு கட்டுடை சைவ வித்தியாசாலை மண்டபத்தில் மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச்சபைத் தலைவர் சி.வ.பொ. முதலியார் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் கலந்துகொள்வார். (ஐ-100)

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நஷ்டம்

கொழும்பு,மே13

உலகச் சந்தையில் மசகு எண்ணெய் மற்றும் பெற்றோலியப் பொருளகளுக்கான விலை அதிகரிப்புக்கேற்ப உள்நாட்டிலும் விலைகள் அதிகரிக்கப்பட வேண்டியுள்ள போதிலும், திறைசேரி அதற்கான அனுமதியை வழங்காமையால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த ஜனவரி மாதம் முதல் இம்மாதம்வரை சுமார் 380 கோடி ரூபா நஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

உலக சந்தையில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்கு ஏற்ப டீசல், பெற்றோல மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலையில் முறையே லீற்றர் ஒன்றுக்கு 8,6 மற்றும் 6 ரூபா என்ற வகிதத்தில் அதிகரிப்பு மேறகொள்ள வேண்டியுள்ளதால், இம் மாதம் முதல் அதற்கான அனுமதி யை வழங்குமாறு கோரப்படவுள்ள தாக பெற்றோலியக கூட்டுத்தாபன சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ-ரி)

பாலபட்ட பெண்டிக்கு புதிய பதவி

விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் தொடர்பான நிறுவனத்தின் புதிய தலைமைப் பதவிக்கு ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் குசும்சிறி, பாலபட்ட பெண்டியை நியமனம் செய்ய ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

தற்போது ஜனாதிபதியின் ஆலோசகர்களுள் ஒருவராகக் கடமையாற்றும் பாலபட்ட பெண்டி இதற்கு முன்னர் ஸ்ரீலங்கன் விமானநிறுவனம் மற்றும் தேசிய லொத்தர் சபை என்பவற்றின பணிப்பாளராகக் கடமையாற்றியுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையப் புனரமைப்புத்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் பொறுப்புக்கள் பாலபட்ட பெண்டியிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றும் தெரியவந்துள்ளது. (ஐ-ரி)

இலங்கையிலும் 'யு.எஸ்.விசிட்' திட்டம்

அமெரிக்காவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாகவும் மோசடிகளைத் தடுக்கும் முகமாகவும் அமெரிக்க விஸாவுக்கு விண்ணப்பிப்பவர்களின் உயிரியற் தன்மைகளைப் பதிவு செய்யும் வகையில் அமெரிக்காவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்பமுறை கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகத்திலும் அமுல் படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'யு.எஸ். விசிட்' திட்டம் எனற இப புதிய தொழில்நுட்பமுறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, விண்ணப்பதாரியின் இருவிரல்களின் அடையாளங்கள் பெற்றுக் கொள்ளப்படும். நிறச்சாயங்கள் பயன்படுத்தப்படமாட்டாது. சில செக்கன்களில் இச்செயற்பாடு இடம் பெற்றுவிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

கடை வாடகைக்கு

கே.கே.எஸ்.வீதி, நாவலர் வீதி சந்திக்கருகில் இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு

தொடர்பு:
இல. 551, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (31921)(37)

வாடகைக்கு

இனுவில் புகையிரத நிலையத்திற்கு முன்பாக அமைதியான சூழலில் 2 அறைகளுடன் கூடிய அனெக்ஸ் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 0712-738755
(சி34957)(37) - 0777-759619

'கசூரினா பீச்சிலிருந்து' திரும்பிய இளைஞர் குழு வீதியில் அட்டகாசம்

காரைநகர் 'கசூரினா பீச்சில்' சென்று குளித்துவிட்டு வந்தவர்கள் என்று கூறப்படும் இளைஞர் குழுவொன்று சண்டிலிப்பாய் வீதியில் அட்டகாசம் புரிந்ததுடன் வீதியில் சென்ற சிறுமி ஒருவருடன் சேஷ்டை புரிந்ததாகவும் தெரியவருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:-

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரிக்கு அருகில் நான்கு மோட்டார் சைக்கிள்களில் சாகச வீர்கள் போன்று வந்த எட்டு இளைஞர்கள் வீதியில் அட்டகாசம் புரிந்தனர் எனவும் வீதியில் சென்ற சிறுமி ஒருவரின் சட்டையை பிடித்து இழுத்து, அவரை அடித்தனர் எனவும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக ஓட்டோ சாரதியொருவர் விடுதலைப் புலிகளின பிரதேச செயலகத்துக்கு அறிவித்ததைத் தொடர்ந்து அவர்கள் மேற்கொண்ட துரித நடவடிக்கையால் அந்த இளைஞர் குழு மானிப்பாயில் வைத்து மடக்கிப் பிடிக்கப்பட்டது.

இளைஞர் குழுவினர் விசாரணை செய்யப்பட்டனர். அவர்களுடைய பெற்றோர்களைக் கூட்டி வருமாறு கூறி அனுப்பிவைக்கப்பட்டனர். (ஐ-152)

விவசாய ஓய்வூதியத் தொகையை அதிகரிக்குமாறு வேண்டுகோள்

வலி.தெற்கு,மே13

விவசாய ஓய்வூதியத்தை 2000 ரூபாவில் இருந்து 3 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறும் வழுக்கி ஆற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நிதி ஒதுக்கீடு செய்து தருமாறும் மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சமமேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

விவசாய ஓய்வூதியத் திட்டத்தை 3 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு அதற்கு திறைசேரி அனுமதி வழங்கி இருந்தது எனவும் இதனை நடைமுறைப் படுத்துமாறும் விவசாய சம்மேளனத் தலைவர் சி.முதலியார் தமது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பகுதியில் உள்ள 70 வீத மான மக்கள் விவசாயிகள் எனவும் அவர்கள் பாதிப்படையாத வகையில் இத்திட்டம் உடன் அமுல்செய்யப் படவேண்டும் எனவும் -

வலிகாமம் பிரதேசத்தின் முக்கிய மானதோர் ஆறாக வழுக்கியாறு விளங்குகின்றது. எனவே, இதனைப் புனரமைப்புச் செய்யும் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறும் கோரப்பட்டுள்ளது. (ஐ-152)

வீதிகள் சேதம்

கொழும்புத்துறை, வளன்புரம் பிரதேசத்தின் வீதிகள் அனைத்தும் பலத்த சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இந்தப் பிரதேசத்தில் உள்வீதிகள் களிமண்ணால் போடப்பட்டிருப்பதால் மழை காலங்களில் சேறும் சகதியுமாக போக்குவரத்துக்கு சிரமமாக இருப்பதாக இந்த பிரதேசத்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஐ-ரி)

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை

கணனிப்பயிற்சி நிலையம்-விண்ணப்பம் கோரல்

1.Diploma in Ms-Office -5 months
(Word, Excel,Access,& Power Point)
2.Diploma in Desk Top Publishing - 4 months
(Adobe Page Maker, Corel DRAW & Photoshop)
3.Computer Programming Course (Visual Basic, C/C++, Java)
Each Programming Course - 3 months 1,500/=

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 26/05/2004

★பயிற்சிகள் செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு நாள்களில் நடைபெறும்.
★பதிவுக்கட்டணம் 100 ரூபா
★பயிற்சிக்கட்டணம் ஓர் அலகுப் பிரிவிற்கு 600 ரூபா

கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டிடத்தொகுதி,
இல.12, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம், Tel:021-222-2324 (C -34960)(37-12-17)

செயலாளர்
யா.மா.கூ.சபை

கண்ணீர் அஞ்சலி

செல்லையா லோகநாதன்

(அல்வாய், வடக்கு-சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய செல்லையா லோகநாதன அவர்களின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வடமராட்சி வடக்கு
பருத்தித்துறை.

பிரதேச செயலரும்
நலன்புரிச்சங்க உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.

(31925)(43-12-17)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
14
03
1928

உதிர்வு
13
04
2004

அமரர் கதிரன் வயிரமுத்து

அன்புக்கோர் அணிகலனாய் ஆதரவின் பிறப்பிடமாய்
எங்களுக்கெல்லாம் அறிவு புகட்டும் ஆசானாய்
பண்புக்கோர் இருப்பிடமாய் பாரினிலே பிரகாசிக்கும்
வைரத்தில் பதித்த முத்துப்போன்று வாழ்ந்து
இறைவனடி சேர்ந்த வயிரமுத்து ஐயாவே!
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்!

இன்று எமது இல்லத்தில் இடம்பெறுகின்ற அன்னாரது நினைவுப் பிரார்த்தனையிலும் நண்பகல் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
சசி மில்லேன்,
சண்டிலிப்பாய்.

நிரந்தர முகவரி:
எழுதுமட்டுவாள் தெற்கு,
எழுதுமட்டுவாள்.

- குடும்பத்தினர்.

(31923)(37-12-17)

யெகோவாவின் மாநாடு

யாழ்ப்பாணம்,மே13

யெகோவாவின் சாட்சியங்களுடைய வட்டார மாநாடு நாளைமறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9.30 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் "நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள் உபத்திரவத்திலே சகித்திருங்கள்" "தேவங்கள் யாருடைய பேரில் நம்பிக்கை வைக்க வேண்டும்" என்னும் பொருளில் பிரதான பேச்சுக்கள் இடம்பெறும். (எ-ரி)

ஆஸ்பத்திரிக் கட்டடம் நேற்று கிளிநொச்சியில் திறந்துவைப்பு

கிளிநொச்சி,மே13

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடம் ஒன்றினை இலங்கைக்கான ஜப்பானியத் தூதர் திறந்துவைத்தார்.

நேற்றுக்காலை கிளிநொச்சி சென்ற தூதர் ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களைப் பார்வையிட்டதுடன் -

இராணுவ நடவடிக்கைகளினால் பலத்த சேதமடைந்த கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அமைக்கப்பட்டிருந்த புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். அத்துடன் ஒரு தொகுதி வைத்திய உபகரணங்களையும் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினரிடம் கையளித்தார்.

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையைப் புனரமைப்பதற்கு மேலும் உதவிகளை வழங்குவதாகவும் ஜப்பானியத தூதர் ஆஸ்பத்திரி அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். (எ-12)

சுகாதாரசேவை ஊழியர்களுக்கு சேவைக்காலப் பயிற்சிகள்

'நீர்ப்' திட்டத்தின் உதவியுடன் நடைபெறும்

குருநகர்,மே13

யாழ்.பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை மற்றும் வைத்திய நிறுவனங்கள் ஆகிய வற்றில் கடமைபுரியும் திட்டமிடல் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்கள், எழுதுநர்கள் மற்றும் அதனுடன் இணைந்த தர உத்தியோகத்தர்களுக்கு 'நீர்ப்' நிதி உதவித் திட்டத்தின் கீழ சேவைக்காலப் பயிற்சிகள் வழங்கப் படவுள்ளன.

இச்சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்கள் இன்று காலை 9.00 மணிக்கு யாழ்.பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் பதில் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறவுளளன.

இரு கட்டங்களாக நடைபெறவுள்ள இப் பயிற்சிநெறி வகுப்புகள் இன்று தொடக்கம் எதிர்வரும் 17 ஆம் திகதி வரையும் -

எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரையும் - காலை 9 மணிதொடக்கம் பிற்பகல 5 மணிவரையும் நடைபெறும்.

இப் பயிற்சிப்பட்டறையில் சுமார் 70 அலுவலர்கள் கலந்துகொள்ள உள்ளனர். இப்பயிற்சி நெறிகளின் இணைப்பாளர்களாக மேலதிக பிரதிப் பணிப்பாளர் (நிதி) க.தனரஞ்சிதராஜன், நிர்வாக அலுவலர் சி.சிவலிங்கம் ஆகியோர் கடமையாற்றவுள்ளனர்.

அலுவலக முகாமைத்துவம், கணக்கு முறை, அலுவலக நடைமுறை, தகவல் தொழில்நுட்ப முறை ஆகிய பாடப் பரப்புகளின் கீழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சிரேஷ்ட கணக்காளர்கள, நிர்வாக அலுவலர்கள் ஆகியோர விரிவுரைகளை நடத்தவுள்ளனர்.

யாழ்.பிரதிமாகாண சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்களின் வினைத் திறனை உயர்த்துவதும், எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பதவியுயர்வுப் பரீட்சைகளில் தோற்றவுள்ளவர்களின் திறமையை உயர்த்துவதுமே இந்தச் சேவைக் காலப் பயிற்சிப பட்டறையின் நோக்கம் என இணைப்பாளர்களில் ஒருவரான யாழ்.பிரதிமாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலக மேலதிக பிரதிப்பணிப்பாளர் (நிதி) க.தனரஞ்சிதராஜன் தெரிவித்தார். (எ-51)

தமிழ் அரசியல் கைதிகளுக்கென வவுனியாவில் சிறைச்சாலை

நிறுவக் கோருகிறார் கிஷோர் எம்.பி.

வவுனியா,மே13

தென்னிலங்கை சிறைகளிலுள்ள வடபகுதி தமிழ் அரசியல் கைதிகளுக்கு தனியான தொரு சிறைச் சாலையினை வவுனியாவில் அமைக்குமாறு வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் சிறைச் சாலை ஆணையாளர் நாயகததிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெலிக் கடைச் சிறைச்சாலையின் தலைமை அலுவலகத்தில் சிறைச்சாலை ஆணையாளரைச் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வேண்டுகோளை விடுத்தார்.

இந்த விடயம் தொடர்பாக நீதியமைச்சின் கவனத்திற்கு கொண்டு வருவதாக சிறைச்சாலை ஆணையாளர் கிஷோர் எம்.பியிடம் தெரிவித்தார். (எ-ரி)

விக்னா கல்வி நிறுவனம்

O/L DAY CLASS

புதிய பிரிவு (8.30-2.30)

★ புதிய பிரிவிற்கு அனுமதி வழங்கப்படுகின்றன.

★ தூரஇடத்து மாணவர்களுக்கு விடுதி வசதிகளும் போக்குவரத்து, பருவகால சீட்டை வசதிகளும் செய்துதரப்படும். (சி-34927)(32)

பாதுகாவலர்கள் உடன் தேவை

யாழ்ப்பாணம் பாதுகாப்புச் சேவைக்கு ஆள்கள் தேவை. 15,16 (சனி, ஞாயிறு ஆகிய திகதிகளில் நற்சான்றுப் பத்திரங்களுடன் காலை 9 - 10 மணிக்கிடையில் நேரில் வரவும். (ஓய்வுபெற்றவர்கள் விரும்பத்தக்கது).

அதிபர், யாழ்ப்பாண பாதுகாப்புச் சேவை, லக்ஷ்மி தியேட்டர் முன் ஒழுங்கை, இணுவில். (34961)(14)

விற்பனைக்கு

நல்ல நிலையிலும், ஒருகைப் பாவனையிலுமுள்ள NPGK தொடரிலக்கமுள்ள SUZUKI QS 90-A மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: S.செல்வா, 182, இராமனாதன் வீதி, திருநெல்வேலி. (பல்கலைக்கழகம் முன்பாக) (31924)

கணக்கீடு

A/L 2006 புதியபிரிவு ஆரம்பம் வெள்ளி 3p.m.

A/L 2005 பிரிவு II ஒப்படைக்கணக்கு வியாழன் 4.30 p.m.

A/L 2005 புதியபிரிவு பங்குடைமை வெள்ளி 1.00 p.m.

ஆசிரியர்: S.தவா B.Com(Hons.)(Acc.Spl.)

NEW SCIENCE COLLEGE JAFFNA

(31887)(12-33-36)

தவறிவிட்டது

இராசசிங்கம் வீதி, வல்வெட்டி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இ.கிருபாகரன் என்பவரது உடுப்பு பாக், அதற்குள் இருந்த பெறுமதி மிக்க ஆவணங்கள் என்பன கொடிகாமத்திற்கும் மிருசுவிலுக்கும் இடையில் நேற்று (12-05-2004) புதன் மாலை 4.10மணியளவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (31929)(43) T.P.021 226 3327

கணக்கீடு

A/L 2006 புதியபிரிவு ஆரம்பம் வெள்ளி 8 a.m.

A/L 2005 மீண்டும் புதிய பிரிவு

பங்குடைமை வெள்ளி 4 p.m.

ஆசிரியர்: S.தவா B.com(Hons.)(Acc.Spl.)

SHAMROCK சச்சமோட்டை கண்டுக்குளி யாழ்ப்பாணம். (31886)(12)

மரண அறிவித்தல்கள்

நடராஜா ஜெயசிங்கம்

அத்தியடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா ஜெயசிங்கம் அவர்கள் பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - மனோன்மணி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் கனகாம்பிகை, ஜெய ராசா, காலஞ்சென்ற ஜெயமணி (கனடா) மற்றும் ஜெயபாலன (லண்டன்), ஜெயரட்ணம் (கனடா), ஜெயமலர் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

104, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (31932)(40-12-36)

தகவல்: சகோதரி நா.கனகாம்பிகை.

திருமதி இரஞ்சினிதேவி (குட்டி) பாலகுமரன்

(ஆசிரியை, யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

கொழும்புத்துறை, சுவாமியார் வீதியைப் பிறப்பிடமாகவும் கோணாவளை லேன், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரஞ்சினிதேவி பாலகுமரன் 09.05.2004 ஞாயிற்றுக்கிழமையன்று அகாலமரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் பாலகுமரன் (மோகன் கணித ஆசிரியர்- தனியார் கல்வி நிறுவனம்- கோண்டாவில்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - செல்லம்மா தம்பதியினரின் அருமை மகளும் திருநெல்வேலியைச் சேர்ந்த பசுபதி - வில்வராணி தம்பதியினரின் அருமை மருமகளும் காலஞ்சென்ற இராஜகுலேந்திரன், சண்முகநாதன் (கனடா), சிறீஸ்கந்தராசா (கனடா), பத்மநாதன் (கனடா), யோகராசா, ராஜேஸ்வரி - ஜெயதேவன் (ஹற்றன் நஷனல் வங்கி - திருமலை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பாலரஞ்சன், பாலமுரளீதரன், பாலமுகுந்தன் ஆகியோரின் அன்பு அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2004) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் கலாசாலை வீதி, திருநெல்வேலியில் உள்ள அவரது மாமனாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாசாலை வீதி, திருநெல்வேலி. (31926)(40-12-36-33)

தகவல்: ப.பாலகுமரன் (கணவர்), சு.பசுபதி (மாமன்), ச.யோகராசா (யோகர்-சகோதரன்).

திருமதி இராசமணி சுப்பிரமணியம்

வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கந்தரோடை மேற்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசமணி நேற்று(12-05-2004) புதனகிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வீரசிங்கம் அன்னப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரியும் செல்லத்துரை, பூபால சிங்கம், தனபாலசிங்கம், மகாலிங்கம், துரைரத்தினம் (மனோன்), அமரர் அகிலகலாதேவி, அமரர் மலைமகாதேவி, அனந்தினிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கந்தரோடை சங்கப்புலம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கந்தரோடை, சுன்னாகம். (31935)(43-33-36-12)

தகவல்: வீ.தனபாலசிங்கம்(C.T.B) (சகோதரன்).

கண்ணீர் அஞ்சலி

எமது அணி மாணவன் சந்திரகுமாரன் ரஞ்சித்குமாரின் அன்புத் தகப்பனார்

ந.சந்திரகுமாரன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். பல்கலைக் கழகம். (31933)(36-33-12)

22ஆம் அணி, மருத்துவபீடம்.

கண்ணீர் அஞ்சலி

எமது கணித பாட ஆசிரியர் திரு.ப.பாலகுமாரனின் அன்பு மனைவி

திருமதி இரஞ்சினிதேவி பாலகுமரன்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருநெல்வேலி வடக்கு. (C/34969)(43-33-12-36)

தரம்-9, மாணவர்கள்.

கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவன ஆசிரியர் திரு.பசுபதி அவர்களின் அன்பு மருமகள்

திருமதி பாலகுமரன் இரஞ்சினிதேவி

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மது கல்வி நிறுவனம், டச்சுவீதி. இருபாலை. கோப்பாய். (31928)(40-36-12-33)

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.

லக்சுமி இணுவில்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேநாள் வெளியீடு

சூரியா (2வேடங்கள்) ஜோதிகா நடித்த மிகப் பிரமாண்டமான தயாரிப்பில் பேரழகன் (ரீலிஸ்)

வினைசரி :10.30, 2.30, 6.30, இரவு 10.00

ஆசனப் பதிவுகளுக்கு: யாழில் - செல்வா மினி. இணுவில் - லக்சுமி சினிமா

ராஜா யாழ்ப்பாணம்

5 ஆவது வெற்றி வாரமாக இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேநாளில் வெளியீடு விஜய், த்ரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த கில்லி (ரீலிஸ்) 10.30.,2.30,6.30, 9.30 (பு.நே.) 21 ஆம் திகதி முதல் ஆஸ்த எழுத்து

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம். (C/34512)(22)

நிறைஞ்சலா சங்கானை

விஜய், சினேகா, நாசர் நடித்த வசீகரா

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.) வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இந்த (பு.நே.) ஜேம்ஸ்பாண்ட் நடித்த THE WORLD IS NOT ENOUGH (ச-34420)(12)

நாகம்ஸ் சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேநாளில் டொல்பி ஒலி அமைப்புடன்

விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேல் நடித்த

அருள் (C34180)(22)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, (பு.நே.)

மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதித் திகதி வரை நுழைவுச்சீட்டுக்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்! குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படும் 3 அதிஷ்டசாலிகளுக்கு பெறுமதிமிக்க பரிசுகள்

1) சுவிச்சக்கரவண்டி
2) C.D பிளேயர்
3) மேசை மின்விசிறி

சமாதானப் பேச்சுத் தொடர்பான புலிகளின் நிலைப்பாட்டை ஆதரிக்கிறது ம.ம.வி.முன்னணி

கொழும்பு,மே13

இடைக்கால நிர்வாகசபை வடக்கு -கிழக்குப் பிரதேசத்தில் ஏற்படுத்தப் பட்ட பின்னரே சமாதானப் பேச்சுக் கள் தொடர்வதற்கான வாசல், திறக் கப்படுமெனப் புலிகள் தெரிவித்திருப் பதற்கு மலையக மக்கள் முன்னணி வரவேற்புத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான பெ.சந்திர சேகரன் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இரு வருடங்களுக்கு முன்னர் சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் மக்கள் விடுதலை முன்னணியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் சமாதானத்தின் முழு நகர்வுகளையுமே கடுமையாக விமர் சித்து வந்துள்ளன.

புதிய அரசு அமைக்கப்பட்ட பின் னரும் மக்கள் ஐக்கிய சுதந்திர முன் னணியின் அங்கமாக இருக்கின்ற மக்கள் விடுதலை முன்னணி, சமா தானப் பேச்சை விமர்சிக்கும் விதத் தில், தொடர்ச்சியாகப் புதுப்புது அறிக் கைகளை விட்டுக் கொண்டிருக்கின்றது.

தற்போதும்கூட உலக நாடுக ளின் ஆதரவையும் பொருளாதார உதவிகளையும் பெறவேண்டும் என் பதற்காகவே வசனங்களை மாற்றி மாற்றிப்பேசித் தங்களின் அரசியல் குழப்பத்தை இவர்கள் வெளிப்ப டுத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் இடைக்கால நிர்வாகசபை என்பது ஏற்கனவே உடன்பாடு காணப்பட்ட விடயமாகும். தற்போது அதிலிருந்துதான் பேச்சு ஆரம்பமாக வேண்டுமெனப் புலிகள் தெரிவித்துள்ள கருத்து உறுதியான தும், நியாயமானதும், ஏற்புடையது மாகும்.

ஆளும் கட்சியில் ஒத்த கருத் துக்கள் ஏற்படவில்லையென்றால் கூட்டுச் சேர்ந்தவர்களின் வேடம் அம்பலமாகும். வெளிநாட்டு அமைச் சர் கதிர்காமர், புலிகளை "தமிழர் களின் ஏக பிரதிநிதிகளாக" ஏற்றுக் கொண்டிருப்பது கூட உதவி வழங் கும் நாடுகளுக்குப் போடப்படுகின்ற தூண்டிலாக இருக்குமோ என மலை யக மக்கள் முன்னணி சந்தேகிக் கின்றது.

இந்த நிலையில் விலை மதிக்க முடியாத தியாகங்கள், பல்லாயிரக் கணக்கான உயிர்ப்பலிகள் அர்ப்ப ணங்களுக்குப் பின்னால் மீண்டும் தொடரவிருக்கும் பேச்சில் துளியள வும் விட்டுக்கொடுப்பிற்கு இடமில்லா மல் புலிகள் நடந்து கொள்ளவேண்டு மென மலையக மக்கள் முன்னணி எதிர்பார்க்கின்றது -என்று அச்செய்தி யில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-க)

கடமையின் போது பாதிப்புக்குள்ளாகும் பொலீஸாருக்கு அரசு நஷ்டஈடு

கொழும்பு,மே13

கடமையின் போது பாதிப்புக் குள்ளான பொலீஸாருக்கு நஷ்டஈடு வழங்கி அவர்கள் ஓய்வுபெறும் காலம்வரை மாதச் சம்பளமும் வழங்க புதிய அரசு முன்வந்திருக்கிறது.

அமைச்சரவைப் பேச்சாளர் ரெஜி னோல்ட் குரே நேற்று நடந்த செய்தி யாளர் மாநாட்டில் மேற்கண்ட தகவ லைத் தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து கூறியதாவது:- பயங்கரவாதத் தாக்குதல் மூலமோ அன்றி பாதாள உலகத்தினரின் தாக் குதல் காரணமாகவோ, ஊனமுறும் அல்லது மரணிக்கும் பொலீஸாருக்கு நஷ்டஈடும் மாதச்சம்பளமும் வழங்க அமைச்சரவை முடிவுசெய்துள்ளது.

இதேவேளை, பாதுகாப்புப் படை யினருக்கு (இராணுவம், கடற்படை, விமானப்படை) தகுதி அடிப்படையி லும் சேவைக்காலத்தைக் கருத்திற் கொண்டும் சம்பள உயர்வு வழங்கப் படுகிறது. இரண்டு வருடம் முதல் ஐந்து வருடம் வரை சேவையில் இருப்பவர் களுக்கு மாதாந்தம் 250ரூபாவும் 12 வருடம் முதல் 22வருடம் வரை சேவை யில் உள்ளவர்களுக்கு 500 ரூபாவும், 22 வருடங்களுக்கு மேலாக சேவை யாற்றுபவர்களுக்கு 750ரூபாவும் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதற்கென சுமார் 290கோடி ரூபா விரயமாகும். 2004ஆம் ஆண்டு ஜன வரி முதலாம் திகதி முதல் இந்தச் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-க)

இன்றைய நிகழ்வு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஆதரவில், திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணியளவில் நீராவி யடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் யாழ் இந்து ஆரம்ப் பாடசாலை மாண வர்களின் அனுசரணையுடன் நடை பெறும். (எ)

அரசின் விசேட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியுடன் நோர்வேயின் பிரதி வெளிவி வகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகி யோர் இன்று காலை விசேட ஹெலி கொட்டில் கிளிநொச்சி செல்கின்றார்கள்.

அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் இருவரில் ஒருவரை அல் லது இருவரையுமே சந்தித்து அரசின் செய்தியை அவர்களிடம் கையளிப்பர் கள் என எதிர்பார்க்கப்படுகினறது.

புலிகளிடமிருந்து பதில் செய்தி எதனையாவது அவர்கள் கொழும்புக்கு எடுத்துச் செல்வர்களா என்பது பற்றி இன்று காலையில்தான் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.(எ-க)

தலைவர் பிரபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் -

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து மட்டுமே ஆரம்பத்தில் பேச்சு - அதுவும் பேச்சுக்கள் வெளிநாடு ஒன்றில்தான் நடக்க வேண்டும் - என்ற தமது நிலைப்பாடுகளில் மறுபேச்சுக்கே இடமில்லை என்ற அடிப்படையில் விடுதலைப் புலிகள் உறுதியாக இருப் பதோடு, அதைப் பகிரங்கமாகவும் அவர்கள் அறிவித்திருப்பது அரசுத் தலைமையை பெரும் சங்கடத்துக்குள் மாட்டிவைத்திருக்கின்றது.

இடைக்காலத் தன்னாட்சி அதி காரசபையோடு இறுதித் தீர்வுக்கான வழிமுறைகள் குறித்தும் சமாந்தர மாக - சம நேரத்தில் - பேசலாம் என்ற இலங்கை அரசின் கோரிக்கையை புலிகள் பகிரங்கமாகவும் அடியோடும் நிராகரித்துவிட்டார்கள்.

"பேச்சு என்றால் அது இடைக்கா லத் தன்னாட்சி அதிகாரசபை பற்றித தான். பேச்சு என்றால் பேச்சு; போர் என்றால் போர்!"- என்ற சாரப்பட புலி கள் பகிரங்கமாகக் கருத்து வெளியிட் டிருக்கும் நிலையில், அடுத்த கட்ட நட வடிக்கையாக என்னசெய்வது எனத தெரியாமல் தடுமாறி நிற்கிறது அரசுத் தலைமை.

விடுதலைப் புலிகளின் தலைவர் காட்டும் இறுக்கமான போக்கை தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் பல ரும் வியந்து பாராட்டி வரவேற்றுள்ளன.

இராணுவ, அரசியல் பலத்துடன் நிற்கும் - தமிழர்களின் ஏகப் பிரதி நிதிகளான புலிகள் அமைப்பின் - தலைவர் தமக்குரிய உறுதிப்பாட்டை சரியாகவே வெளிப்படுத்தியிருக்கின் றார் என ஓர் எம்.பி. தெரிவித்தார்.

"விலை மதிக்க முடியாத தியா கங்கள், பல்லாயிரக் கணக்கான உயிர்ப் பலிகள், அர்ப்பணங்கள் ஆகிய வற்றுக்குப் பின்னால் ஆரம்பமாகவி ருக்கும் பேச்சுக்களில் இதுபோன்று துளியளவு விட்டுக்கொடுப்புக்கும் இட மில்லாமல் புலிகள் நடந்துகொள்ள வேண்டும்" - என்று மலையக மக்கள் முன்னணித் தலைவரும், எம்பியுமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளைத் தமிழ் மக் களின் ஏகப் பிரதிநிதிகளாகவும், பேச் சுக்களின் சமபங்காளிகளாகவும், ஒரேயொரு தரப்பாகவும் ஏற்றுக்கொண் டாலேயே அரசில் இடம்பெற்றுள்ள பங்காளிக் கட்சிகளான பேரினவாதி களின் கடும் எதிர்ப்பையும் அதிருப்தி யையும் அரசுத் தலைமை சம்பாதித் துக் கொண்டுள்ளது.

இந்நிலையில், இடைக்காலத் தன னாட்சி அதிகாரசபை குறித்து மட்டுமே முதலில் பேசுவது என்ற விடயத்தில புலிகளோடு உடன்பாட்டுக்குவர அர சுத் தலைமை முயன்றால் அது அரசு அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்பின் கூட்டுக்குள் பெரும் குழப்பத்தையே உருவாக்கி விடும் எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை, புலிகளின் உறுதி யான நிலைப்பாட்டுக்கு இணங்கா விட்டால் சமாதானப் பேச்சு இப்போ தைக்கு இல்லையென்றாகிவிடும்.

எனவே, அடுத்த கட்ட நடவடிக்கை யாக என்ன செய்வது என்று தெரியா மல் "இருதலைக் கொள்ளி எறும்பு நிலையில்" அரசுத் தலைமை தவிப் பதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிலைமையைச் சமாளிப்பதற்குப் புலிகளுக்கு அவசரச் செய்தி ஒன்றை அனுப்பி, இறுக்க நிலையைத் தளர்த் தும் முயற்சி குறித்து அரசுத் தலைமை நேற்று ஆராய்ந்தது எனத் தெரிய வந்தது.

தமிழ்மொழி மூல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தைத் தெரிவித்தார். இந்தச் சந்திப்பு திருகோணமலையில் உள்ள ஆளு நரின் அலுவலகத்தில் நடைபெற்றது. ஆயிரம் பட்டதாரிகளுக்கு, 820 பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கும் 750 தொண்டர் ஆசிரியர்களுக்கும் 420 திறந்த பல்கலைக்கழக, தொழில்நுட் பக் கல்லூரி மற்றும் யாழ். பல்கலைக் கழக டிப்ளோமாதாரிகளுக்கும் இந்த முதற்கட்ட நியமனத்தை வழங்குமாறு மேற்படி குழுவினால் கோரிக்கை விடுக் கப்பட்டது.

இதுதொடர்பில் ஜனாதிபதியுடன் ஆலோசித்து சாதகமாக முடிவெடுக் கப்படும் என்று ஆளுநர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செய லாளர் ஆர்.தியாகலிங்கம், ஆளுநரின் செயலாளர் எஸ்விநாயகலிங்கம், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஜனாப கனீபா, மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விசாகலிங்கம் ஆகி யோருடன், தமிழர் ஆசிரியர் சங்கத தூதுக குழு சார்பில் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம், சிரேஷ்ட துணைப பொதுச்செயலாளர் த.பஞ்ச லிங்கம், கல்வி கலாசார செயலாளர் ந.ராஜநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பின்வரும் விடயங்களை தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு, வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரிடம் சுட்டிக காட்டியது.

கல்வி நிர்வாக சேவையில் நில வும் 400 வெற்றிடங்களையும் நிரப்பு வதற்கு இரண்டுதடவைகள் பரீட்சைகள நடத்தப்பட்டன. மேற்படி பரீட்சைக்கு வடக்கு - கிழக்கிலிருந்து தோற்றிய வர்களில் இருந்து 50 வீதமான வெற்றி டம் நிவர்த்தி செய்யப்படுமென ஆரம் பத்தில் உறுதியளிக்கப்பட்டது. அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 28 பேருக்கு வழங்கப்பட்ட நியமனம் பின்னர் ரத் துச் செய்யப்பட்டது. அவர்களுக்கு நிரந் தர நியமனம் வழங்கப்படுமென அளிக கப்பட்ட உறுதிமொழியை நடைமுறைப படுத்தவேண்டும்.

ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ் இன்னும் 150 பேருக்கு நியமனம் வழங் கப்படவேண்டும்.

1998ஆம் ஆண்டிலிருந்து பதில் கடமைபுரிந்துவரும் 380 உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதென்ற உறுதி மொழியை நடைமுறைப்படுத்த வேண் டும். இந்தக் கோரிக்கைகளை செவி மடுத்த ஆளுநர் இவற்றை, ஜனாதிபதி யின் கவனத்துக்குக் கொண்டுவந்து உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தம்மிட உறுதியளித்தார் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் நேற்றிரவு 'உதயனுக்குத்' தெரிவித்தார்.(எ-9)

ஜுலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும்

கொழும்பு,மே13

1983 ஜுலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துள்ளார். கலவ ரததில் பாதிக்கப்பட்டு இதுவரை நஷ்ட ஈட்டுக்கு விண்ணப்பிக்காமல் இருப்ப வர்களுக்கு உடனடியாகத் தகுந்த ஆதாரங்களுடன் விண்ணப்பிக்குமா றும் கோரப்பட்டுள்ளனர்.

இத்தகவலை அமைச்சரவை முடி வுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில், அமைச்சரவைப் பேச் சாளர் ரெஜினோல்ட் குரே தெரிவித் தார். அவர் தொடர்ந்து தெரிவிக் கையில் கூறியதாவது:-

1981ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டுவரை இனக்கலவரங் களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த விதப்பாகுபாடும் இல்லாமல் நஷ்ட ஈடு வழங்கப்படும். 1983ஆம் ஆண்டு நடந்த மிக மோசமான கலவரத் தில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் பலர் நாட்டைவிட்டுச் சென்றுவிட்டனர். பலர் நஷ்டஈடு கோரி விண்ணப்பிக்காமல் உள்ளனர். இந்தக் கசப்பான நிகழ் வுகளை நினைவூட்டும் முகமாக தேசிய நல்லுறவுதினம் பிரகடனப் படுத்தப்படும்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணைகளின் போது 1,276 முறைப்பாடுகள் செய் யப்பட்டன. அதில் 946 முறைப்பாடு கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவர் களுக்கு 722கோடி நஷடஈடாக வழங்க முடிவு செய்யப்பட்டது. பாதிக்கப் பட்டவர்களின் பெயர், விவரங்கள் கிடைக்கும் பட்சத்தில் அவர்களுக் கான நஷ்டஈட்டுத் தொகையை வழங்க நாடாளுமன்றில் சட்டபூர்வ அங்கீகாரம் பெறப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-க)

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

தென்மராட்சி பிரதேச ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மண் டபத்தில் பிரதேச செயலர் செ.ஸ்ரீநி வாசன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு பிரதேசத்தில் உள்ள அரச, அரச சார்பற்ற நிறுவ னங்களின் பிரதிநிதிகள் அழைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

பொருள்களின் விலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஒரே பொருளை வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்கின்றனர்.

அதுமட்டுமல்லாது, காலாவதி யான உணவுப்பொருள்களை விற் பனை செய்தல், தரமற்றபொருள்களை விற்பனைசெய்தல் போன்ற நடவடிக்கை களிலும் வர்த்தகர்கள் ஈடுபடுகின்றனர். இதனால் மிகவும் பாதிக்கப்படுபவர் கள் எமது மக்களே.

இத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காகவே தமிழ் நிதித் துறையினால் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அது தனது நடவடிக்கைகளை சகல பகுதிகளிலும் இம்மாதம் 15 ஆம் திகதியிலிருந்து முழுவீச்சில் ஆரம் பிக்கும்.

தீவிரமாகச் செயற்பட்டு, நுகர் வோருக்குத் தரமான பொருள்களை நியாயமான விலையில் கிடைப்பதற் வேண்டிய நடவடிக்கைகளை இந்தக் கட்டுப்பாட்டுப் பிரிவு மேற்கொள்ளும். (ஐ-5)

இன்னும் மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றில் இச்சட்டத்தைக் கொண்டுவர உத்தேசித்துள்ளோம். இச்சட்டத்தைக் கொண்வருவதற்கு சட்ட ஆய்வாளர்க ளின் குழு இவ்விடயம் பற்றி ஆராய்ந்து வருகிறது.

லஞ்ச ஊழல் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு, கிடப்பில் இருக்கும் முறைப்பாடுகள் எப்போது விசாரிக்கப்படும் எனக் கேட்டபோது, விரைவில் விசாரணைகள் துரிதப்படுத தப்படும் - என்றார்.

பாடசாலை மாணவர்களுக்கு வழங் கப்படும் சீருடைகள் இனி பாடசாலை யிலேயே வழங்கப்படும். வருடாவருடம் சீருடைக்காக 93 ஆயிரம் லட்சம் மீற்றர் துணி சீனாவிலிருந்து இறக்குமதி செய் யப்படுகிறது. இந்தச் சீருடைத் துணியை இங்கேயே தயாரிக்கும் முகமாக நூல் கிரிய, பூகொட போன்ற ஆடைத் தொழிற் சாலைகளை மீண்டும் திறக்க ஜனா திபதி ஆலோசனை வழங்கியுள்ளார். அதை இங்கு தயாரித்தால் சுமார் 4 ஆயிரம் பேருக்குத் தொழில் வாய்ப்புக் களை வழங்கமுடியும் என அவர் மேலும் கூறியுள்ளார். (எ-க-9-ரி)

இயக்கத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையளித்தார்.

இந்நிகழ்வில், மனித உரிமைகள ஆணைக் குழுவின் யாழ். அலுவலக சிறுவர் உரிமைகள் குறித்த விசாரணை அதிகாரி எஸ்பெரோஸ் மற்றும் காணா மற்போனோர் குறித்த விசாரணை அதி காரி ரி.மொறின் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, நேற்றுக் காலை யிலும 18 வயதுக்கு மேற்பட்ட இரு வர் யாழ். மாவட்ட அரசியல்துறையி னரால் அவர்களின் பெற்றோரிடம் ஒப் படைக்கப்பட்டனர். (எ-9-7)

பொலனறுவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாளராக கோகுலன் செயற்பட்டார் என்றும் - கூறப்பட்டது. கொல்லப்பட் வர்கள் இருவரும் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து விலகிச்சென்றவர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந் தது எனப் பொலீஸார் தெரிவித்துள் ளனர். (எ-க)

அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் பல மூத்த தலைவர்களைச் சந்தித்து சமாதானப் பேச்சுக்களுக் கான முன்னேற்றம் குறித்து ஆராயும் அவர், இலங்கைக்கு அமெரிக்காவில் வழங்கப்படும் கடனுதவி மற்றும் இலங் கையில் அமெரிக்க முதலீடு ஆகியவை குறித்தும் கலந்துரையாடுவார்.

வீஞ்ஞா
கல்வி நிறுவனம்
A/L 2006 கலைப்பிரிவு

Eco.	திரு. உதயன்
Log.	திரு. சயந்தன்
Tamil	திரு. குழந்தை, திரு. லிங்கம்
H/C.	திரு. பத்மராஜா
Geo.	திரு. பாபு
Hin.	திரு. N.T.தரன்
Hist.	திரு. பத்மன்
P/Sci	திரு. ஸ்ரீரங்கநாத்
Chri.	திரு. வசந்தன்
Drama	திரு. மதி

ஆரம்பம்: 15.05.2004 சனி 7.30

தரமான கணனிக் கல்வியைத் தகுதியான அங்கீகாரமுள்ள நிலையான நிறுவனத்தில் கற்போம்.
விவரம்: நாளைய உதயனில்

வேலையாள்கள் தேவை
அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவை (ஆண்/பெண்).
இராசம் மில்
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.
(C/34952)(38)

மதுபாரத்
இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்.
ஆறே மாதத்தில் அந்கிலம் பேச, எழுத வாசிக்க
SPOKEN ENGLISH
By. தனேந்திரன் B.Com.,H.N.D.A., P.G.Dip.InEd.
பகுதிநேர விரிவுரையாளர் (English)
தொழில்நுட்பக் கல்லூரி.
ஆரம்பம்: 15-05-2004 சனி 4 மணி
தரம் 06 தொடக்கம் A/L கலைப்பிரிவு வரை அனைத்துப் பாடங்களும் நடைபெறுகின்றன. -நிர்வாகி.

மதுபாரத்
இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்.
LOGIC
S.சயந்தன்
★ A/L 2006 சனி, ஞாயிறு 4 - 6
(அடிப்படை விடயத்திலிருந்து கற்பிக்கப்படும்)
★ A/L 2005 சனி, ஞாயிறு 5 - 6
(பகுதி II விஞ்ஞானமும் விஞ்ஞான- முறையியலும்)
(31847)(38) -நிர்வாகி.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.05.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.